அறைவு 04 இயம் 20 Dec 12 - 18, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

பிறப்பு 11 12 18 81



இச்செகத்தில் உள்ளோரெல்லாம்
எதிர்த்து நின்ற போதிலும்
அச்சமில்லை... அச்சமில்லை ...
அச்சமென்பதில்லையே!






# "காணிகளை விட்டு வெளியேறுங்கள்"

## சம்பூரில் மூன்று குடும்பங்களுக்கு எச்சரிக்கை




சம்பூரில் மீளக்குடியேற்றப்பட்ட மக்களில் மூன்று குடும்பங்களின் காணிகளை விட்டு எதிர்வரும் சனவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்பாக வெளியேறுமாறு மூதூர் பிரதேசச் செயலாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரச காணியில் அத்துமீறிக் குடியிருப்பதாகக் குறிப்பிட்டுள்ள பிரதேசச் செயலாளர் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி உடனடியாக அக்காணிகளில் இருந்து வெளியேறுமாறு எச்சரிக்கைக் கடிதத்தினை அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதங்களின் பிரதிகள் உரிய காணிகளில் ஒட்டப்பட்டிருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

17



பாதிக்கப்பட்ட மக்களைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் சந்தித்தனர்

# "திருகோணமலை வதைமுகாம்கள் 2ம் உலக யுத்த காலத்தவை"

திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வதைமுகாம்கள் இரண்டாம் உலக மகாயுத்த காலத்திற்கு உரியவை என அரசின் சார்பில் பேசவல்ல அதிகாரியான அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இரண்டாம் உலக மகாயுத்தகாலப் பகுதியில் பிரித்தானியக் கடற்படையின் கட்டுப்பாட்டிலேயே திருகோணமலைக் கடற்படைத் தளம் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதற்கமைய பிரிரத்தானியப் படைகளால் இந் நிலத்தடி வதைமுகாம்கள் நிர்மாணிக்கப் பட்டதாக அவர் தெரிவித்திருந்தார்.

ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே இத்தகவலைத் தெரிவித்த அமைச்சர் ஐக்கிய நாடுகள்...

17



அமைச்சர் ராஜித தெரிவிப்பு

### திருமலை மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவராக

## அப்துல்லா மஹ்ரூப் தெரிவு



திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவராக திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மகரூப் சனாதிபதி மைத்திரிபால சிரிசேனவினால் 08-12-2015 அன்று நியமனம் செய்யப்பட்டார்.

அவருக்கான நியமனக் கடிதத்தைக் கட்சியின் தலைவர் அமைச்சர் ரிஷாட் வழங்கினார்.

ஹலீம்

## வட்டாரத் தேர்தல் முறைமை பாதிப்பே!



உலமா கட்சித் தலைவர் மௌவி முபாரக்

வட்டார தேர்தல் முறை என்ற மஹிந்த சிந்தனையை நீக்கி விகிதாசார தேர்தல் முறையே தொடர்வதற்கு சிறுபான்மைக் கட்சிகள் ஒற்றுமையாக வலியுறுத்த வேண்டும் என உலமா கட்சித் தலைவர் கலாநிதி முபாறக் அப்துல் மஜீத் மௌலவி தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலின் போது......

17

Heart Breakers Entertainment பெருமையுடன் வழங்கும்

குறும்பட வெளியீடு மற்றும் Hip Hop இசை விருந்து

வெளியீடுகள்
- சப்பாத்து
- ஏக்கங்கள் தீரும் மட்டும்
- மரண வீடு
- திராவிடம்

டிசம்பர் 19 ஆம் திகதி
மாலை 4.30 மணி முதல்
உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி மண்டபத்தில்
அனைவரும் வருக!!!

ஊடக அனுசரணை
மலைமுரசு
MALAIMURASU



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் உண்மையை மட்டும் உலகிற்கு வெளிப்படுத்தும் கிழக்கின் வார இதழ் -

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# கொள்கையின்றி அழியும் தமிழ்த் தலைமை!

தமிழர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை, தளம்பல்களுக்குள் சிக்குண்டுள்ளமை கடந்த சில காலங்களில் நடைபெறும் விடயங்களால் தெளிவாக வெளித்தெரியத் தொடங்கியுள்ளது.

அண்மையில் அக்கூட்டமைப்பின் தலைவர் சில விடயங்களை வெளிப்படுத்தியிருந்தார். மட்டக்களப்பில் நடைபெற்ற கூட்டத்தின் போது அவர் தெரிவித்திருந்த இரண்டு முக்கிய கருத்துக்களாக "ரணில் விக்ரமசிங்கவோ அல்லது வேறு சிலரோ கூட்டமைப்பிற்குள் பிளவுகளை ஏற்படுத்த முயற்சிக்கலாம்" என்பதையும் "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஏற்றுக்கொள்வதை மக்களும் கட்சியுமே தீர்மானிக்க வேண்டும்" என்பதையும் இங்கு கருத்திற் கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் மற்றும் அதன் இருப்பு என்பன கேள்விக்குறியாக்கப்படுவதையே இவ்விரு கூற்றுக்களும் வெளிப்படுத்தியுள்ளன.

இந் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இந்த நிலை ஏற்படுவது ஏன் என்பதையிட்டு ஆராய்ந்து பார்க்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

2009ம் ஆண்டுவரை இவ்விதமான நிலைகள் எவையும் அக்கூட்டணிக்குள் உருவாகவில்லை. ஆனால் விடுதலைப் புலிகளின் தற்காலிக அமைதிப்படுத்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே இந்நிலையை கூட்டமைப்பு எதிர்கொள்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தின் போது சுயாட்சிக் கோரிக்கையே அதன் பிரதான கொள்கையாக இருந்தது. அதனை வலுப்படுத்தும் வகையில் அமைந்திருந்த ஆயுதப் போராட்டம் அமைதிப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் தனது அடிப்படைக் கோரிக்கையைத் தன்னிச்சையாகவே கைவிட்ட கூட்டமைப்பு பிராந்தியத் தன்னாட்சி என்ற தெளிவற்ற கொள்கைக்குள் விழுந்தது. இதனை எதிர்த்தே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் கட்சியொன்றின் உறுப்பினர்கள் அல்லாத, ஆனால் விடுதலைப் புலிகளால் முன்மொழியப்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் உள்வாங்கப்பட்ட சிலர் 2010ம் ஆண்டில் இக்கூட்டமைப்பில் இருந்து வெளியேறினர்.

தற்போது பிராந்திய சுயாட்சி என்ற கொள்கையையும் கைவிட்டு மாகாண அதிகாரப் பரவலாக்கம் என்ற வட்டத்திற்குள் தம்மை இறுக்கிக் கொண்டுள்ளது அக் கூட்டமைப்பு.

இவ்வாறு அதிகாரப்பரவலாக்கம் என்ற வட்டத்திற்குள் தம்மை இறுக்கிக் கொள்வதன் ஊடாகவும், அதனை மீண்டும் மீண்டும் பேசுவதன் ஊடாகவும் ஈழத்தமிழர்களின் பிரச்சனையானது அதிகாரப்-பரவலாக்கமே தவிர வேறு எவையும் இல்லை என்ற ஒரு மாயை ஏற்பட்டு வருகின்றதை அவதானிக்கலாம்.

ஈழத்தமிழர்களின் பிரச்சனை என்ன என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் விட்டுவிட்டு அப்பிரச்சனைக்கான தீர்வை முன்மொழிய முற்படுவதாலேயே அவர்கள் இன்றும் கடும் இன-ஒடுக்குமுறைக்கு உள்ளாகிவருவதைக் காணமுடி-கின்றது.

ஶ்ரீலங்கா தீவில் ஒரு தேசிய இனமாகத் தமிழர்கள் தம்மை அடையாளப்படுத்த முடியாது இருப்பதே அவர்களின் அடிப்படைப் பிரச்சனை. அவ்வாறு தம்மை ஒரு தேசிய இனமாக அடையாளப்படுத்தத் தேவையானவற்றைக் காலங்காலமாக ஆட்சியாளர்கள் அழித்துவருவதை எதிர்ப்பதாலேயே போராட்ட வடிவங்கள் காலத்திற்குக் காலம் உருவாகின்றன என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

அதற்கேற்பத் தமிழர்களின் விடிவிற்கான கொள்கையை வகுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு ஒன்றுபட்ட அமைப்பாகத் தவறிவிட்டது.

இக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தனித்தனிக் கட்சிகள் அல்லது அக்கட்சிகளின் அங்கத்தவர்கள் காலத்திற்குக் காலம் தமது கொள்கையாக தமிழர்களின் தேசிய இன அடையாளத்தைப் பாதுகாப்பது தொடர்பான அறிக்கைகளை வெளிப்படுத்துகின்ற போதிலும் அவை ஒட்டுமொத்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவாக வெளிப்படாததால் வலுவிழந்து போய்விடுகின்றது.

இதனால் இலக்கொன்றை அடையும் கொள்கையை உருவாக்கி அந்தக் கொள்கையைப் பற்றுறுதியுடன் பிடித்து நிற்கத் தவறும் நிலை இருப்பதாலேயே தமிழ்த் தலைமை ஆட்டங்காண்கின்றது.

பற்றுறுதி மிக்க கொள்கையை அடையும் வழிகளையும் தந்திரோபாயங்களையும் காலத்திற்குக் காலம் அக்காலத்திற்கு ஏற்ப மாற்றிக்கொள்ளலாமே தவிர கொள்கைகளை அல்ல என்பதை கிஞ்சித்தேனும் சிந்திக்காமல் விட்டுவிட்டது தலைமை.

கொள்கையின்றிப் பயணிப்பதால் தான் எந்தவிதமான நிரந்தர நன்மைகளையும் இன்றுவரை தமிழர்களால் அனுபவிக்க முடியாமலிருக்கின்றது என்பதை உணருவோமா நாம்!

## எகெட் நிறுவன மனித மாண்புப் பயிற்சிப் பட்டறை

திருகோணமலை எகெட் கரிற்றாஸ் நிறுவனம் அரச உத்தியோகத்தர்களுக்கும் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் மனித மாண்பு பற்றிய விழிப்பூட்டல் வேலைத் - திட்டத்தை செவ்வாய்க்கிழமை 08.12.2015 மேற்கொண்டது.

திருகோணமலை வலய கல்வி திணைக்கள குச்சவெளி கோட்ட கல்வி பணிப்பாளர் சீ.மதியழகன் வளவாளராக கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கி வைத்தார்.

எகெட் கரிற்றார் பணிப்பாளர் அருட்பணி க.நிதிதாசனின் வழிகாட்டலில் மேற்கொள்ளப் - பட்டது.

ரபாய்தீன்
கதிரவன்



## சம்பூர் மாணவருக்கு மிதிவண்டிகள்

சம்பூரில் மீள் குடியேற்றப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கிழக்கு மாகாண கல்வி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சினால் துவிச்சக்கரவண்டிகள் 05.12.2015 அன்று வழங்கி வைக்கப்பட்டன.

சம்பூர் மகாவித்தியாலயம் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளதால் சம்பூர் மாணவர்கள் பல மைல்தூரம் பயணித்தே சேனையூர் மத்திய கல்லூரியில் தமது கல்வியைத் தொடர்கின்றனர்.

### விழுது அமைப்பின் தேசிய

## மனித உரிமை நிகழ்வு

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் சர்வதேச மனித உரிமைகள் தினமான 10.12.2015 அன்று காலை 9 மணியளவில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வடக்க கிழக்கு மாகாணங்கள் உட்பட மத்திய மாகாணம் மற்றும் வடமேல் மாகாணம் என நாட்டின் பல பாகங்களில் இரந்த வருகை தந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான தேசிய மாநாடு இடம் பெற்றது.இந்நிகழ்வக்க கௌரவ விருந்தினராக தேசிய கலந்துரையாடல் அமைச்சர் மனோ கணேசன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரோஸிசேனாநாயக்க மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளர் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் மற்றும் ஜக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி சுபனிநன்டி மற்றும் பல சர்வதேச மற்றும் தேசிய அமைப்பக்களின் பிரதிநிதிகள் கலந்த கொண்டிருந்தனர் இந்நிகழ்வில் விதவைகள் பட்டயம் ஒன்று வெளியிடப்பட்டு அரசாங்க பிரதி நிதிகளினூடாக அரசுக்க பரிநிதுரை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

அச்சுதன்



## கிழக்கு மாகாண சபையில் ஊழல் எதிர்ப்புப் பிரகடனம்


பேரவைச் செயலர் செரீப் பிரகடனத்தை வாசிக்கின்றார்.

சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்தன்று கிழக்கு மாகாண அலுவலர் ஒன்றிணைந்து ஊழலை எதிர்ப்போம் என்னும் பிரகடனத்தை வாசித்து உறுதி பூண்டனர்.

ஹலீம்

## ஐயப்பனின் விசேட பூசை

தம்பலகாமம் ஶ்ரீ ஆதிகோண-நாயகர் ஆலயத்தில் 13.12.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் 11.30 மணிவரை மலையாள பூஜை 18ம் படி விசேட பூஜை, ஐயப்பன் விசேட பஜனை என்பன சர்வதேச இந்து மத குருபீடாதிபதி ஶ்ரீ ஐயப்பதாஷ் சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளன.

அன்றைய மதியம் அன்னதானமும் நடைபெறும். மாலை அணிந்து சபரிமலை யாத்திரை செல்ல உள்ள அனைத்து அடியார்களும் பூசையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

## தேசிய உணவு வேலைத்திட்டத்தின் 1ம் கட்டம்

சனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களின் உணவு உற்பத்தி தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைய முதலாம் கட்ட வேலைத் திட்டம் குறிஞ்சாக் -கேணி கமநல சேவை நிலைய -த்தில் கமநல அபிவிருத்தி உத்தியோத்தர் எம் எஸ் எம் றியால் தலைமயில் 10-12-2015 அன்று காலை பத்து மணிக்கு குறிஞ்சாக் -கேணி கமநல சேவை நிலையத்தில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் உணவு உற்பத்தி, தரவு சேகரித்தல், பயிர்செய்கை காணி இனங்கானல், முழு விளக்கத்தையும் அதிகாரிகளுக்கு கம நல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெளிவுபடுத்தினார்.

ஹலீம்


பாரதி வித்தியாலய ஒளிவிழா


பாரதி வித்தியாலய ஒளிவிழா

திருகோணமலை வரோதயநகர் பாரதி தமிழ் வித்தியாலயத்தில் 2015ம் ஆண்டுக்கான ஒளி விழா நிகழ்வு மிகவும் சிறப்பாக இடம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குக

### முஸ்லிம் பெண்களும் களத்தில்

மட்டக்களப்பில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்ககோரி ஜனாதிபதிக்கு தபாலட்டை அனுப்பும் போராட்டத்தில் முஸ்லீம் பெண்களும் அதிகமாக கலந்து கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில காலங்களாக முஸ்லீம் பெண்களின் சமூக விழிப்புணர்வு பிரச்சார நடவடிக்கைகள் அதிகரித்து வருவதுடன் அவர்கள் தமிழ் மக்களுடன் இணைந்து பல்வேறு போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக சிறைகளில் உள்ள அரசியல் கைதிகளின் விடுதலைக்கு தடையாகவுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையை முஸ்லீம் பெண்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




## ஊடகவியலாளர் சுதந்திரம் குறித்து மகஜர்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த காலத்தில் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் போன ஊடகவியலாளர்கள் தொடர்பிலான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு காவல் மாஅதிபருக்கு, ஊடக சுதந்திரத்திற்கான செயற்பாட்டு குழு மகஜரொன்றை கையளித்துள்ளது.



காவல்துறை ஊடகப் பேச்சாளர், உதவி காவல் அத்தியட்சகர் ருவன் குணசேகர ஊடாக இந்த மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## யுத்தத்தில் இறந்தோருக்கு மனித உரிமை தினத்தில் அஞ்சலி

மட்டக்களப்பில் சர்வதேச மனிதவுரிமைகள் தினமான இன்று யுத்தத்தில் கொலை செய்யப்பட்ட மற்றும் காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடந்த பல ஆண்டுகளாக யுத்தத்தினால் கொலை செய்யப்பட்ட மற்றும் காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்த முடியாத சூழ்நிலை உள்ளதாகவும், இதனைக் கருத்தில் கொண்டு மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற ஒன்றியங்களின் அமைப்பான இணையத்தின் சார்பாக இந்த அஞ்சலி நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டதாக இணையத்தின் செயலாளர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு செல்வநாயகம் மண்டபத்தில் இணையத்தின் செயலாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பெண்கள் அமைப்புக்கள், காணாமல் போகச்செய்யப்பட்டவர்களின் உறவுகள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.



## ஆற்று மணல் ஏற்றியவருக்கு அபராதம்

**புதூர்**

அம்பாறை, சவளக்கடை பிரிவுக்கு உட்பட்ட சவளக்கடை பிரதேசத்தில் சட்டவிரோதமாக ஆற்று மணல் ஏற்றிய ஒருவருக்கு கல்முனை நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.யூட்சன் கடந்த வியாழக்கிழமை 05 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்துள்ளார்.

சவளக்கடை காவல்துறையினர் கடந்த (09) புதன்கிழமை மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

## பொதுமக்களுக்கான நடமாடும் சேவை

**கோறளைப்பற்று**

சர்வதேச மனித உரிமைகள் தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட பிரஜைகள் சபையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு, கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொதுமக்களின் நலன் கருதி சட்ட ஆவணங்கள் தொடர்பான நடமாடும் சேவை கடந்த வியாழக்கிழமை பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

இதன்போது, பொதுமக்களுக்கு நீண்டகாலமாக பெற்றுக் கொள்ளமுடியாமல் இருந்த ஆள் அடையாள அட்டை, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு பத்திரங்கள், வெளிநாட்டு கடவுச் சீட்டு தொடர்பான காவல்துறை முறைப்பாட்டு பிரதி மற்றும் இலவச நிழற் பிரதி சேவைகள் போன்றன இடம்பெற்றன. மாவட்ட பிரஜைகள் சபையின் தலைவர் க.நடராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கோறளைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.தினேஸ் நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்தார்.

## “நலிவுற்றோரை பாதுகாப்போம்”

செமட்ட செவண நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினூடாக சீமேந்துப் பைகளை வழங்கி வைக்கும் நிகழ்வானது கடந்த 09ம் திகதி காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந் தலைமையில் நடைபெற்றது.

கிராமங்களில் உள்ள ஆலயங்களை மாத்திரம் புனரமைப்பு செய்வதனை மட்டுப்படுத்தி அந்தக்கிராமங்களில் உள்ள நலிவுற்ற மக்களை இனங்கண்டு அவர்களுக்கான வாழ்வாதாரப் பணிகளைச் செய்ய அனைவரும் முன் வர வேண்டும் என கிழக்கு மாகாணசபை உறுப்பினர் தவராசா கலையரசன் கூறினார். மேலும் அவர் காரைதீவு பிரதேச செயலகத்தினை பொறுத்தவரையில் அங்கு கடமையாற்றும் அனைவரும் தங்களது பணிகளை மக்கள் நலன்சார்ந்ததாக செயற்படுத்தி வருவது பாராட்டுதற்குரிய விடயமாகும் என்றார்.

## 12ஆக பிரிக்கப்பட வேண்டும் – அமைச்சர் ஹிஸ்புல்லா

**காத்தான்குடி**

காத்தான்குடி நகரசபை 12 வட்டாரங்களாக பிரிக்கப்பட வேண்டுமெனக் கோரி எல்லை நிர்ணயம் தொடர்பான ஆணைக்குழுவிடம் மீள்குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கடந்த வியாழக்கிழமை கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

இது தொடர்பாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், “எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வட்டாரங்கள் பிரிக்கப்பட்டு வருகின்ற நிலையில், காத்தான்குடி நகரசபை தற்போது 10 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு வர்த்தமானி மூலம் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

கடந்த ஆட்சிக்காலத்தின் போது, காத்தான்குடி நகரசபை 12 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு அது முன்மொழியப்பட்டு அங்கிகரிக்கப்பட்டிருந்தது. எனினும், தற்பொழுது இந்த நகரசபை 10 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு வர்த்தமானியில் உள்வாங்கப்பட்டுள்ளது.

காத்தான்குடியை விட குறைவான சனத்தொகை மற்றும் குறைவான நிலப்பரப்பைக் கொண்ட பல பிரதேசங்களுக்கு கூடுதலான வட்டாரங்கள் பிரிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் காத்தான்குடி நகரசபை ஆகக்குறைந்தது 12 வட்டாரங்களாக பிரிக்கப்படும்போதே, எதிர்காலத்தில் இலகுவாக தங்களுடைய பணிகளை செய்ய முடியும்” என்றார்.

## வைத்திய சான்றிதழ் பெறுவதில் அசௌகரியம்

**கல்லடி**

மோட்டார் சாரதி அனுமதிப்பத்திரத்துக்காக தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தில் வைத்தியசான்றிதழ் அவசியமாகத் தேவைப்படுவதனால் அதனைப் பெற்றுக் கொள்வதற்காக அதிகாலை 4 மணிக்கே மட்டக்களப்பு கல்லடியிலுள்ள தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்திற்கு வருகை தந்து வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையினை மாற்று நடவடிக்கை எடுக்குமாறு தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் பணிப்பாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதிகாலை 4 மணிக்கே பொது மக்கள் வந்து வீதியில் வரிசையில் காத்திருக்கின்ற போதும் 100 பேருக்கே இந்த பரிசோதனை ஒருநாளில் மேற்கொள்ளப்படுகிறது. இந்த 100 சிட்டைகளுக்குள் வராது விட்டால் மறுநாளும் இதே போன்ற மீண்டும் வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்படுவதாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## மீள்பதிவு செய்வதற்கான முடிவுத் திகதி அறிவிப்பு

**மட்டக்களப்பு**

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்பு மற்றும் புறநிலை கற்கைகள் நிலையத்தின் கலை, கலாசாரப்பீடத்துக்கு 2012, 2013ஆம் கல்வியாண்டுக்கான மூன்றாம் வருட கற்கைநெறியைத் தொடர்வதற்கு தகுதியுள்ள மாணவர்கள் தம்மை மீள்பதிவு செய்யுமாறு அப்பல்கலைக்கழக பதில் பதிவாளர், கடந்த வியாழக்கிழமை அறிவித்தார். தங்களின் பெயர், முகவரி, பதிவிலக்கம், மீள்பதிவு செய்ய வேண்டிய ஆண்டு போன்ற விவரங்களை உதவிப் பதிவாளர், வெளிவாரிக் கற்கைகள் மற்றும் புறநிலை கற்கைகள் நிலையம், கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, செங்கலடி எனும் முகவரியில் எழுத்து மூலம் சமர்ப்பித்து மீள்பதிவு செய்வதற்குரிய விண்ணப்பப்படிவங்களைப் பெறமுடியும். பூரணப்படுத்தப்பட்ட மீள்பதிவு விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னராக அனுப்புமாறும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்வாதிகள் கைவிட்டுவிட்டனர் சட்டத்துறை அகதியாக்கிவிட்டது


## -தமிழ் அரசியல் கைதிகள்-

மகசின் சிறைச்சாலையில் இரண்டாவது தமிழ்க் கைதியும் தனது உண்ணா நோன்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ள நிலையில் அவர்கள் தமது விடுதலை தொடர்பான கடும் ஏக்கங்களுடன் இருப்பதாக அருட்தந்தை சக்திவேல் தெரிவித்துள்ளார்.

"தமிழ் அரசியல்வாதிகள் எம்மைக் கைவிட்டு விட்டார்கள். இலங்கையின் நீதித்துறை எம்மை அகதிகளாக்கி விட்டது" என்று அவர்கள் தெரிவித்திருப்பதாக அங்கு சென்று திரும்பிய அருட்தந்தை சக்தி வேல் தெரிவித்தார்.

கொழும்பு மெகஸின் சிறைச்சாலையிலுள்ள அரசியல் கைதிகளைப் பார்வையிடுவதற்காக அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் நேற்று அங்கு சென்றிருந்தார்.

யாழ். சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்த நிலையில், கொழும்பு மெகஸின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ள ஜீவன் என்ற அரசியல் கைதியுடன் மகசீன் சாலையிலுள்ள மற்றொரு கைதியான கோமகன் என்பவரும் உண்ணா நோன்பை ஆரம்பித்துள்ளார்.



வடக்கிலுள்ள நீதிமன்றங்கள் ஒரு வழியாகவும் தெற்கிலுள்ள நீதிமன்றங்கள் வேறு வழியாகவும் செயற்படுவதாகத் தெரிவித்துள்ள அரசியல் கைதிகள் தாம் நீதித்துறையின் மீது வைத்துள்ள நம்பிக்கை தகருமானால் தமிழர்களுடைய எதிர்காலத்தைத் தகர்க்கின்ற அரசியல் செயலாகும் எனக் கூறிக்கொள்ள அவர்கள் விரும்புவதாக அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்தார்.

மலைமுரசு
MALAIMURASU
இலங்கைச் செய்திகள்

## -மாணவர்கள் மீது தாக்குதல்-

# சிரேட்ட அதிகாரிகள் தப்பினர்

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எச்.என்.டீ.ஏ மாணவர்கள் மீது தாக்குதல் நடத்திய காவற்துறை உயர் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




தேசிய காவற்துறை ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

அவர்களுக்கு எதிரான சாட்சிகள் போதுமான ஆதாரங்கள் இல்லை என்பதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

குறித்த தாக்குதல் தொடர்பில் கிருலப்பனை காவற்துறை பரிசோதகர் ஒருவர் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த தாக்குதல்களால் மாணவர்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

அத்துடன் காயமடைந்த மாணவர்களுக்கு நட்ட ஈடு வழங்கவும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரைக்கப்பட்டது.

எனினும் இதற்கு போதுமான சாட்சிகள் இல்லாத நிலையில், உயர் காவற்துறை அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னார் புதைகுழி மனித எச்சங்களை

# சட்டத்தரணிகள் முன் பொதியிடுக

திருக்கேதிஸ்வரம் புதைகுழி மனித எச்ச மாதிரிகளை சட்டத்தரணிகள் முன்னிலையில் பொதியிட்டு பகுப்பாய்வுக்கு வெளிநாட்டுக்கு அனுப்ப மன்னார் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மன்னார் புதைகுழி சம்பந்தமான வழக்கு மன்னார் நீதிமன்றில் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா முன்னிலையில் நேற்று (11) விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அந்தவேளையில் காணாமல் போனவர்கள் சார்பாக ஆஜராகியிருந்த சட்டத்தரனி வீ.எஸ்.நிரஞ்சன், இந்த வருடம் ஜுலை மாதம் 15ஆம் திகதியன்று மன்றில் சமர்ப்பித்த நகர்த்தல் பத்திரம் மூலம் சட்டத்-தரணிகளாகிய நாங்கள் மூன்று நிறுவனங்களின் பெயர்களை சிபாரிசு செய்திருந்தோம்.

அந்த மூன்று நிறுவனங்களில் ஏதாவது ஒன்றை இந்த நீதிமன்றம் தெரிவு செய்து கால நிர்ணய வயதை அளவிடுவதற்கு ஏதுவாகும் என கண்டு கொண்டால் அதற்கு நாங்கள் சம்மதம் தெரிவிப்பதாக கோரியிருந்தார்கள்

சட்டத்தரணிகளின் கோரிக்கை - களை மன்று கவனத்தில் எடுத்து மூன்று நிறுவனங்களின் ஏதாவது ஒன்றுக்கும் நீதிமன்றின் அனுமதியுடன் மாதிரியை அனுப்பும் படியும் காணாமல் போனவர்களின் சார்பான சட்டத்தரணிகளுக்கு முன்னால் இந்த மாதிரிகள் பொதியிடப்பட்டு அனுப்பப் - படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது.

பெறப்படும் அறிக்கையை 2016.03.04ல் மன்றில் சமர்ப்பிக்கும்படியும் உத்தரவு இடப்பட்டுள்ளது.

# என்னை அமைதியாக வாழவிடுங்கள்



அநாவசிய தொந்தரவுகள் இன்றி தன்னை, வாழ விடுமாறு யசாரா அபேய-நாயக்க ஊடகங்க-ளிடமும், பொது-மக்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யோசித்த ராஜபக்ச மற்றும் படுகொலை செய்யப்பட்ட றக்பி வீரர் வசீம் தாஜுடீன் ஆகியோரின் முன்னாள் காதலி என்று அறியப்பட்டுள்ள யசாரா அபேயநாயக்க, ஒரு வேண்டுகோளை வெளியிட்டுள்ளார்.

நான் ஒருவிடயம் குறித்து உங்களுடன் கருத்துப் பரிமாறிக் கொள்ள விரும்புகின்றேன்.

அதாவது முழு இலங்கையும் என் வாழ்க்கை மற்றும் அதில் நடக்கும் சம்பவங்கள் தொடர்பில் அதீத கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றது.

சிங்களப் பெண்ணான நான் ஒரு முஸ்லிம் வாலிபரை திருமணம் முடித்திருப்பது குறித்து பலரும் பலவிதமான கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆனால் நான் சிங்களப் பெண்ணாக இருந்தாலும் சிங்களக் கிறித்தவர். இஸ்லாம் மார்க்கமும், கிறித்தவமும் அடிப்படையில் ஒன்று என்பதாலும்,


யாருக்கும் பாதிப்பில்லாத வகையில் மதசுதந்திரத்தை உறுதிப்படுத்திக் கொண்டதாலும் நாங்கள் இருவரும் திருமணம் முடித்துள்ளோம். நான் தொடர்ந்தும் கிறித்தவ மதத்தைப் பின்பற்றும் சிங்களப் பெண்ணாகவே இருப்பேன்.

எனது கணவர் முஸ்லிமாக இருந்தாலும் அவரது தலைமையில்தான் இலங்கை றக்பி அணி ஆசியாவின் மூன்றாவது அணியாக முன்னேறியுள்ளது. என் கணவர் நாட்டுக்குத் தேடித்தந்த பெருமையை எந்தவொரு சிங்களவரும் பெற்றுக் கொடுக்கவில்லை.

எனவே எங்களைப் பற்றி கவலைப்படுவதை விட்டுவிட்டு, உங்கள் குடும்பங்களில் உள்ள பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளியுங்கள்.

என்னை என் பாட்டில் வாழ விடுங்கள் என்று தனது வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

# மக்கள் மனமறிந்து எல்லைகளை நிர்ணயம் செய்யுங்கள் - சனாதிபதி



தேர்தல் தொகுதி எல்லைகளை அரசியல் கட்சிகளின் வெற்றியை எதிர்பார்த்து நிர்ணயம் செய்யாது பொதுமக்களின் கருத்துக்களை பிரதிபலிக்கும் வகையில் எல்லைகள் நிர்ணயிக்கப்படல் வேண்டுமென ஜனாதிபதி சிறிசேன வலியுறுத்தியுள்ளார்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் எல்லைகளை நிர்ணயிப்பது தொடர்பான சர்வகட்சி மாநாடு, நேற்று நடைபெற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட 64 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற இந்த சர்வக்கட்சி மாநாட்டில் சனாதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில், எல்லை நிர்ணயக் குழுவானது தனது பொறுப்புக்களை பக்கச் சார்பின்றியும், நியாயமாகவும் நிறைவேற்ற வேண்டும்.

முன்பிருந்த குழுமீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் புதிய குழுவின் மீது சுமத்தப்படாதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

குறுகிய கால எல்லையினுள் இந்நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது எதிர்பார்க்கப்படும் பணியினை உரியவாறு மேற்கொள்ள முடியாதபோது அது பயனளிக்காது எனவும், போதியளவு காலம் ஒதுக்கப்பட்டு இந்நடவடிக்கைகள் சரியான முறையில் உரியவாறு மேற்கொள்ளப்படவேண்டும். நீண்டகாலமாக தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் சுமத்தப்படும் குற்றச்சாட்டாகவும் தீர்க்கப்பட வேண்டிய ஒன்றாகவும் காணப்படுகின்ற வேட்பாளர்கள் தெரிவு செய்யும்போது பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பான பிரச்சினை தொடர்பாக கவனம் செலுத்தி கலந்துரையாடி தேவையான சட்ட விதிகளை தயாரிக்கும் நடவடிக்கையினையும் முன்னெடுக்குமாறு சனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

வட கொரியா

## ஹைட்ரஜன் குண்டுகளை வெடிக்க வைக்க தயார்

தங்கள் நாட்டின் இறையாண்மையை தக்கவைப்பதற்காக ஹைட்ரஜன் குண்டுகளை வெடிக்க தயார் என வடகொரிய அதிபர் கூறியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வடகொரியா அவ்வப்போது அணுகுண்டு-களை சோதித்து வருவது வழமை. இந்நிலையில் வடகொரியாவின் அதிபரான கிம் ஜோங் உன், வரலாற்று சிறப்பு மிக்க ராணுவத் தளத்தை பார்வையிட்டார்.

அப்போது ராணுவத்தினரிடம் பேசிய கிம் ஜோங் உன், தங்களது நாட்டின் இறையாண்மையை தக்க வைத்துக் கொள்ள ஹைட்ரஜன் குண்டுகளை வெடிக்க தயார் என தெரிவித்துள்ளார்.

இத்தகவலை அந்நாட்டின் அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனமான கேசிஎன்ஏ வெளியிட்டுள்ளது.

## சிரியாவிற்கும் ஐ.எஸ் இற்குமிடையில் வியாபாரம்

சிரியா

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் 50 கோடி அமெரிக்க டொலர்களுக்கும் மேற்பட்ட பெறும்தியான எண்ணெய்யினை சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாட்டிற்கு விற்பனை செய்துள்ளதாக அமெரிக்க திறைசேரியின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



சிரிய மற்றும் ஈராக் ஆகிய நாடுகளின் பெரும் நிலப்பரப்பை தம் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள், தாம் அங்கு மேற்கொண்டு வரும் பயங்கரவாத நடவடிக்கைகள் இஸ்லாத்தின் மேம்பாட்டிற்கே மேற்கொள்ளப்படுவதாக பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் இணைந்து ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் உறுதியாக இருக்கின்றனர்.

கடந்த மாதம் ரஷ்ய ஜெற் வானூர்தி ஒன்றை துருக்கி சுட்டு வீழ்த்திய போது, ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமீர் புட்டின் அதிக அளவிலான எண்ணெய் மற்றும் பெற்றோலிய பொருட்கள் எல்லை கடந்து துருக்கிக்கு செல்வதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குற்றவாளி சாட்சியாளரானார்

இந்தியா



கடந்த 2008ஆம் ஆண்டு மும்பையில் இடம்பெற்ற தாக்குதல்களுடன் தொடர்புபட்ட அமெரிக்கர் ஒருவருக்கு 35 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. இருப்பினும், அவர் அரச சாட்சியாக மாறுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதனை அடுத்து அவருக்கு இந்திய அரசாங்கம் பொது மன்னிப்பு வழங்கியுள்ளது.

டேவிட் ஹட்லி என்ற இவர் வீடியோ கொன்பரன்ஸ் முறைமையின் கீழ் மும்பாய் நீதிமன்றில் முன்னிலையாகி, மும்பாய் தாக்குதல் தொடர்பான திட்டமிட்டமை அதனை நிறைவேற்றியமை உட்பட சகல விபரங்களையும் வெளியிட முன்வந்துள்ளார். இதன் மூலம், அவருக்கு இந்திய சட்டத்திற்கு அமைய மரண தண்டனை வழங்கப்படாது என்பதுடன், அவர் இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட மாட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் துப்பாக்கிதாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்களின் போது 160இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரான்ஸில் மீண்டும் பதற்றம்

### ஆர்வலர்களுக்கும் காவல்துறைக்குமிடையே மோதல்

பிரான்ஸ்

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் பருவநிலை மாற்றத்துக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் சுற்றுச் சூழல் ஆர்வலர்களுக்கும் காவல்துறைக்கும் இடையே கடும் மோதல் வெடித்தது. இதனால் தடியடி நடத்தியும் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் போராட்டக்காரர்களை கலைத்தனர்.

பாரிஸில் பருவநிலை மாற்றம் தொடர்பான உச்சி மாநாடு தொடங்கியுள்ள நிலையில் பருவநிலை மாற்றத்துக்குக் காரணமாக உள்ள முதலாளித்துவ நாடுகளுக்கு எதிராக சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் போராட்டம் நடத்த முடிவு செய்திருந்தனர். ஆனால், பாரிஸில் கடந்த மாதம் தீவிரவாத தாக்குதலுக்கு 130க்கும் மேற்பட்டோர் பலியானதையடுத்து போராட்டத்துக்கு பொலிஸார் கட்டுப்பாடுகளை விதித்திருந்தனர். இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை ஆயிரக்கணக்கான சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் மனிதச் சங்கிலி அமைத்து ஊர்வலமாக சென்றனர். அப்போது டி லா ரிபப்ளிக் சதுக்கம் பகுதியில் முதலாளித்துவ நாடு-களுக்கு எதிராக போராட்டக்-காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட சுமார் 100 பேரை காவல் துறையினர் கைது செய்தனர். இதனால் பாரிஸ் நகரில் மீண்டும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

## யேமன் பள்ளிக் கூடங்களில் தாக்குதல்

ஜேர்மன்

சவுதி அரேபியாவும் அதன் கூட்டணியும் யேமனில் வேண்டுமென்றே பள்ளிக்கூடங்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக சர்வதேச மனித உரிமை பிரச்சார அமைப்பான அம்னெஸ்டி இண்டர்நேஷனல் குற்றஞ்சாட்டியுள்ளது.

சவுதி தலைமையிலான கூட்டணி யேமனில் கடந்த மார்ச்சில் விமானத் தாக்குதல்களை ஆரம்பித்தது முதல் அந்நாட்டில் ஆயிரத்துக்கும் அதிகமான பள்ளிகூடங்கள் இயங்க-வில்லை என்றும், அவற்றில் கால்வாசி அளவானவை முற்றிலுமாக அழிந்து போயுள்ளன என்றும் அவ்வமைப்பு கூறுகிறது.

சவுதி அரேபியா யேமனில் சர்வதேச விதி மீறல்களைச் செய்யப் பயன்படுத்துவதால், அந்நாட்டுக்கு ஆயுதங்கள் விற்பதை அமெரிக்காவும் பிரிட்டனும் நிறுத்த வேண்டும் என அம்னெஸ்டி குரல்கொடுத்துள்ளது.

யேமன் மோதல்களில் இதுவரை ஆறாயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



## முன்விரோதத்தினால் நிகழ்ந்த விபரீதம்

உக்ரைன்

உக்ரைன் தலைநகரான கிவ்வில் அமைத்துள்ள அந்நாட்டு பாராளுமன்றமன்றத்தில் பிரதமர் Arseny Yatsenyuk முக்கிய உரை ஒன்றை நிகழ்த்திக்கொண்டு இருந்தார். அப்போது, கையில் பூச்செண்டுடன் அமைதியாக நடந்துச்சென்ற ஜனாதிபதிக்கு ஆதரவான பாராளுமன்ற உறுப்பினர், பிரதமரிடம் பூச்செண்டு கொடுத்துவிட்டு அவரை குண்டுக்கட்டாக தூக்கி அருகில் வீசினார். பின்னர், பிரதமருக்கு ஆதரவான எம்.பிக்கள் அவர் மீது பாய்ந்து சரமாரியாக தாக்கியுள்ளனர். இந்த சம்பவத்தால் பாராளுமன்றம் தள்ளிவைக்கப்பட்டதுடன் அங்கு பெரும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது.

இந்த சம்பவத்திற்கு பிற்கு பேசிய பிரதமர், "இதற்காக நான் அவமானப்படவில்லை. ஆனால், பாராளுமன்றத்தில் சில மிருகங்கள் இருக்கின்றன. அவர்கள் அனைவரையும் ஒரு முடிவுக்கு கொண்டு வர வேண்டும்" என பேசியுள்ளார்.



## போலி கடவுச்சீட்டை அச்சிட்டனரா ஐ.எஸ் அமைப்பு

ஐ.எஸ் தீவிரவாதிகளிடம் சொந்தமாக கடவுச்சீட்டு அச்சடிக்கும் இயந்திரம் இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதென அமெரிக்க நாட்டின் புலனாய்வு துறை அதிகாரிகள் அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளனர். அதன் மூலம் அகதிகள் போர்வையில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குள் தீவிரவாதிகள் நுழைய சாத்தியக்கூறுகள் உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் 13ம் திகதி பாரிஸில் ஐ.எஸ் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலை படை தாக்குதலில் பலியான தீவிரவாதிகளின் கடவுச்சீட்டுகளும் போலியாக அச்சடிக்கப்பட்டுள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இந்த சந்தேகத்தை வலுப்படுத்து-வதாக உள்ளது என கூறியுள்ளனர். எனினும், ஐ.எஸ் தீவிரவாதிகள் சொந்தமாக கடவுச்சீட்டு அச்சடிக்கும் இயந்திரம் வைத்திருக்க முடியாது என சிலர் மறுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
தாயகச் செய்திகள்

# வடக்கு மாகாண சபையை புறக்கணித்ததா மைத்திரி அரசு?

வடக்கு மாகாண சபை முதலமைச்சரை புறக்கணித்து விட்டு ஏனைய மாகாணங்களின் முதலமைச்சர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளார் சிறிலங்கா அதிபர்.

ஏனைய எட்டு மாகாணங்களுக்கான முதலமைச்சர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் வடக்கு முதலமைச்சருக்கு அழைப்பு விடுக்கப்படாமை குறிப்பிடத்தக்கது. அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் மாகாண சபைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டதையும், அரசின் வலுப்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்தும் இந்த முதலமைச்சர்கள் விசனம் தெரிவித்திருந்ததை அடுத்தே இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

இக் கலந்துரையாடலில் அதிபர், தான் எக்காரணத்திற்காகவும் மாகாண சபைகளின் அதிகாரங்களை குறைக்க மாட்டேன் எனவும் 13வது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் பலப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பேன் எனவும் நிதி ஒதுக்கீடுகளை நிதி அமைச்சின் ஊடாக ஏற்பாடு செய்வேன் எனவும் தெரிவித்ததாக தெரிய வருகின்றது.

கடந்த வியாழக்கிழமை நடந்த மாகாண சபை அமர்வில் உரையாற்றும் போது, சிறிலங்காவின் தற்போதைய அரசாங்கமும், வடக்கு மாகாண சபையை புறக்கணித்தே செயல்படுகின்றது என விசனம் தெரிவித்துள்ளார்.



# உதவிகள் வேண்டாம் உறவுகளை மீட்டுத் தாருங்கள்

## சனாதிபதி ஆணைக்குழுவிடம் மக்கள்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு இதுவரை 91 பேர் சாட்சியமளித்துள்ளனர். காணாமல் போனவர்கள் குறித்து நேற்று நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த 235 பேர் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டனர்.

இந்நிலையிலேயே மதிய போசன இடைவேளை வரை 91 பேர் சாட்சியமளித்துள்ளதாகவும், 42 பேர் புதிதாக பதிவுகளை மேற்கொண்டுள்ளதாகவும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அத்துடன் ஈ.பி.டி.பி., இராணுவம், கடற்படை, குற்றப் புலனாய்வு பிரிவு, வெள்ளை வேன் ஆகியவற்றினால் தமது பிள்ளைகள் மற்றும் உறவுகள் காணாமல் போகச் செய்யப்பட்டுள்ளதாக பலர் சாட்சியமளித்துள்ளனர்.

அத்துடன் காணாமல் போனவர்களுக்கான மரண சான்றிதழ்களை தற்போது பெற்றுக்கொள்ளுமாறும், அவர்களை தாம் கண்டுபிடித்து தருவதாகவும் காணாமல் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


எனினும் தமக்கு எந்தவொரு உதவிகளும் வேண்டாம் எனவும் தமது உறவுகளை கண்டறிந்து தருமாறும் சாட்சியமளித்த மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.



# விசாரணைக்கு எடுக்கப்பட்டது - மன்னார் புதைகுழி

**திருக்கேதீஸ்வரம்** மன்னார் புதைகுழி சம்பந்தமான வழக்கு நேற்று மன்னார் நீதிமன்றில் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா முன்னிலையில் விசாரனைக்காக எடுக்கப்பட்டது. நகர்த்தல் பத்திரம் மூலம் சட்டத்தரணிகளாகிய நாங்கள் மூன்று நிறுவனங்களின் பெயர்களை சிபாரிசு செய்திருந்தனர்.

சட்டத்தரணிகளின் கோரிக்கைகளை மன்று கவனத்தில் எடுத்து மூன்று நிறுவனங்களில் ஏதாவது ஒன்றுக்கு இந்த மாதிரிகளை அனுப்பும்படியும் இதை அனுப்புவதற்கு முன் நீதிமன்றின் அனுமதியை பெற வேண்டும் எனவும் அத்துடன் பாதிப்படைந்த அதாவது காணாமல் போனவர்களின் சார்பாக ஆஜராகியிருக்கும் சட்டத்தரனிகளுக்கு முன்னால் இந்த மாதிரிகள் பொதியிடப்பட்டு அனுப்பப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் சட்டத்தரணிகளால் சுட்டிக்காட்டப்பட்ட மூன்று நிறுவனங்களில் ஒன்றில் பெறப்பட்ட அறிக்கையை 2016ம் ஆண்டு மார்ச் மாதம் நாலாம் திகதி மன்றில் சமர்பிக்கும்படி நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.



# தாமதமின்றி விடுவிக்கப்பட வேண்டும்

வடக்கு மாகாண சபையின் அமர்வு, சர்வதேச மனித உரிமைகள் தினமான கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த அமர்வில் கலந்துகொண்டு, சர்வதேச மனித உரிமைகள் தினத்துக்கான விசேட உரையை நிகழ்த்துகையில்,

ஐ.நா. சபை இந்த ஆண்டு முற்பகுதியில் டிசெம்பர் 9ம் திகதியை இனப்படுகொலையில் பலியானோரை நினைவுறுத்தும் நாளாகப் பிரகடனப்படுத்தியிருந்தது.

தனிப்பட்ட தமிழ் மக்களுக்கான உயிருக்கான உரித்து கூட அரசாலும் அதன் முகாமைகளாலும் நீதிக்குப் புறம்பான படுகொலைகளால் வழிநடத்தப்பட்டுள்ளன. நடந்த மனிதப் படுகொலைகளுக்கு இதுவரையில் பதிலளிக்கப்படவில்லை. எனவே தாமதமின்றி தமிழ் அரசியல் கைதிகளை உடனே விடுவிப்பது அரசின் தலையாய கடமையாகும். அவ்வாறு விடுவித்தால்தான் எமது நாட்டில் எமது ஆட்சியாளர்களிடையே மனித உரிமையைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கம் உண்டென்று உணரக் கூடியதாக இருக்கும்.

தமிழ் மக்களின் அவலங்களை நீக்கும் விதத்தில் அவர்களின் சுயநிர்ணய உரிமையை மதித்து அவ்வுரித்தின் அடிப்படையில் ஒரு நிரந்தரமான தீர்வைப் பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும். அப்பொழுதுதான் சர்வதேச மனித உரிமைகள் தினம் இலங்கைக்குப் பொருந்தும் ஒருதினமாக ஏற்றுக் கொள்ளப்படலாம்" - என்றார்.

# 30,000றிற்காக மிரட்டியோர் விளக்கமறியலில்

**பருத்தித்துறை**

தென்மராட்சியைச் சேர்ந்த யுவதிக்கும் பருத்தித்துறையைச் சேர்ந்த இளைஞன் ஒருவருக்கும் அலைபேசி மூலம் பழக்கம் ஏற்பட்டுள்ளது. இருவரும் நேரில் சந்தித்த வேளையில், இளைஞன் யுவதியின் புகைப்படம் ஒன்றை கேட்டுப் பெற்றுள்ளார். பின்னர் பெற்றுக்கொண்ட புகைப்படத்தை மார்பிங் முறையில் ஆபாசமாக இணையத்தில் வெளியிடப் போவதாகவும் அவ்வாறு செய்யாமல் இருக்க தனக்கு 30 ஆயிரம் ரூபாய் பணம் தரவேண்டும் என இளைஞன், யுவதியை மிரட்டியுள்ளார். இது தொடர்பில் யுவதியின் தாயார், கொடிகாமம் காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து இளைஞன் ஒருவனையும் 17 வயதான மாணவன் ஒருவனையும் காவல்துறையினர் கைது செய்துள்ளனர். பணம் கோரிய சந்தேகநபரை எதிர்வரும் 16ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட சாவகச்சேரி நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரன், அதற்கு உடந்தையாகவிருந்த 17 வயது பாடசாலை மாணவனை ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் செல்ல அனுமதியளித்துள்ளார்.

# வடக்கிற்கு 41,000 வீடுகள்



இந்திய அரசினால் வழங்கப்பட்ட இந்தியன் வீட்டுத் திட்டத்தில் 41 ஆயிரம் வீடுகள் வடக்கிற்கு வழங்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா-வுக்கான இந்திய தூதுவர் வை.கே. சிங்கா குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பொறியியல் பீடங்களிற்கான கட்டட தொகுதிகளுக்கான திரை நீக்கம் செய்துவைத்து உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்திய ஸ்ரீலங்கா அரசின் ஒத்துழைப்புடன் வடக்கில் உதவிகள் மேற்கொள்ளப்படுகின்றமை தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், வட மாகாண ஆளுநர் உள்ளிட்ட பலருக்கு நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

மேலும், கிளிநொச்சி பீடத்திற்கான கேட்போர் கூடம் அமைப்பதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும், அதனை அமைப்பதற்கு தான் ஏற்பாடுகள் செய்து தருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, யாழ். நூலகம், யாழ். பல்கலைகழக கிளிநொச்சி வளாகம் மற்றும் வவுனியா வைத்தியசாலைக்கு இந்திய அரசினால் கிடைத்துள்ள உதவிக்கு இந்திய அரசிற்கும் இந்திய மக்களிற்கும் வட மாகாண ஆளுநர் நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளத்தில் நான் .....



மழை வரும் என்று தானே
நினைத்தேன் கூடவே !
வெள்ளமும் வரும் என்று நான்
ஒரு போதும் நினைத்ததில்லையே....

கால் கையை நனைத்து
விளையாடலாம் என்று நினைத்தேன்
கழுத்துவரை வெள்ளத்தில்
மூழ்கிக் கிடப்பதை நினைத்ததில்லையே...

மூழ்கி மூழ்கி முட்டி தேய்ந்தது தான்
மிச்சம் எவரும் வரவில்லையே !
முழுதாய் நனைந்து விட்டேன்
முழு நாளும் தண்ணீரில் மிதந்து விட்டேன்....

மிதவை ஒன்று தெரிகிறது
வெள்ளத்தில் ஆறுதல் கொண்டு
சற்றே கண் அயர்ந்தேன்
தூக்கினார்கள் நாலுபேர் வந்து
தூரத்தில் என்னை புதைப்பதற்காய்....

வே. மேனுகா
வரேதய நகர்

## வரம் ஒன்று

சாலையோரம் சரிந்து கிடந்த
சருகென நானிருக்க:
உனை தாலாட்டும் தாயென
நானென்றும் உன்னுடனே
என காதோரமாய் கவிபாடி:
எனை வருடிய தென்றலே
மீண்டும் உனை கவியினை கேட்டிட
என் செவிகளவை உன்
காலடித் தடத்தின் ஓசையை தேடுகின்றதே
பாவம் இந்த பாவியென
உன் தரிசனம் என்ற
வரம் ஒன்று எனக்கு தாராயோ!

ஸ்ரீ கயல்

# கவி முரசு

## சிரிப்பு.....

நோயற்ற வாழ்வே
குறைவற்ற செல்வம் - எனின்
வாய் விட்டு சிரி(யு)ங்கள்- உங்கள்
நோய் விட்டுப் போகும் !

ஊர் விட்டுப் போங்கள்
உல்லாசப் பயணம் - உங்கள்
உளம் விட்டுச் சிரி(யு)ங்கள்
மனக் குறை விட்டுப் போகும் !

சினம் விட்டு நீங்கள்
சிரித்து மகிழ்ந்திருந்தால்
இனம் சனம் சேரும் !
இல்லத்தில் மகிழ்ச்சி ததும்பும் !

துயர் விட்டு நீங்கள்
தூங்கலாம் சிரி(யு)ங்கள் !
உயர் அழுத்த நோய் நீக்கும்
ஊசி மருந்துதான் சிரிப்பு !

பகை விட்டு நீங்கி - புன்
நகை பூத்து வாழ
நகைச் சுவை தன்னை நாடு !
சின்னத் திரை தன்னை மூடு !

கவலைகள் விட்டுச் சிரி !
கல கல கலவெனச் சிரி !

கண்ணீர் விட்டுச் சிரி – அதில்
கரைந்திடும் நோய் நொடி !

ந.அருட்செல்வன்
ஈச்சந்தீவு




## பொல்லாப்பு வேண்டாம் நல்லதே வேண்டும்!

சொல்லடி சிவ சக்தி : தமிழர்
சோகங்கள் தீர்வ தெப்போ?
நல்லாட்சி யுக மென்றார்கள்
வல்லுறவு தொடர்கின்றதே

ஆட்சிதான் மாற்ற மாச்சு : பல
காட்சிகள் மாற வில்லை
கட்சிகள் கூடிப் பேச்சு : நச்சு
பேச்சுகள் பர வலாச்சு!

ஆர்ப் பாட்ட ஊர்வலங்கள்
அதிகரிக்க லாச்சி தின்று : தமிழர்
தீர்வுத் திட்டத்திற்கு அரசியல்
தீர்வுக்கு வழியைக் காணோம்!

மாணவர் போராட்டத்தில்
வன் முறை காணக் கண்டோம் :
ஊடகங்கள் மூலம் : இந்த
உண்மைகள் பரவலாச்சு!

சொல்லடி சிவ சக்தி எங்களை
சோதிக்க வேண்டாம் : மேலும்
நல்லதே நடக்க வேண்டும் : இங்கு
பொல்லாப்பு வேண்டாம் வேண்டாம்!




கவிக்குயிலன்
சேனையூர்

## இராஜராஜ சதுர்வேதி மங்கலம் (கந்தளாய்)

நிற்றிகல அன்டியகந்த என்னும் இடத்தில் இருக்கிறது. அம்பாந்தோட்டையின் மண்டகல என்ற இடத்தில்பூதி எனும் பிராமணனின் குகையும், மகாஸிதுல்பவுவ என்ற இடத்தில் வச்ச என்ற பிராமணது குகையும் கண்டுபிடிக்கப்பட்டது. கண்டியிலுள்ள பம்பறகல என்ற இடத்தில் பிராமணப்பெண் தத்த என்பவளது குகை கண்டுபிடிக்கப்பட்டது. இப்பெண் கொஜற என்ற பிராமணனின் மகள் என்பதுடன் நாக அரசன் பொசனி என்பவனின் மனைவி என்பதை பிரமிச்சாசனம் உறுதிப்படுத்துகிறது. பிரமிச்சாசனங்களில் பெரும்பாலானவை குகைதானம் தொடர்பானவை. இவை பிராமணர்களால் பௌத்த சங்கத்துக்குகுகை தானமளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. ஆரம்பத்தில் இருந்தே பௌத்தம்அரச ஆதரவுடன் பரப்பப்பட்டுக் கொண்டிருந்தமையால் பிராமணர்கள் சுயவிருப்பின் பெயரில் இத்தானங்களை மேற்கொண்டார்களா? இல்லை தானமளிக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்களா? என்பதைப் புரிந்துகொள்வது கடினமானது. எனினும் பௌத்த மத வருகையின் பின்னர் சரிந்து சென்ற தமது செல்வாக்கினை நிலைநிறுத்த பிராமணர்கள் முயன்றிருக்கிறார்கள் எனக் கருத இடமுண்டு.

ராஜகிரிகந்த (அனுராதபுரம்) இல் பிராமணன் மகன் "ரெத" என்பவனின் குகையும். ஹந்தகல விகாரையில் பிராமணன் மகன் புஸ்ஸதேவனின் குகையும், ஸிதுல்பவுவ (அம்பாந்தோட்டை) இல் கோதம என்ற பிராமணனின் குகையும், கோங்கலவில (அம்பாறை) அதிமதக என்ற பிராமணனின் குகையும் பௌத்த சங்கத்திற்கு கொடுக்கப்பட்டதை சாசனங்கள் மூலம் ஆதாரப்படுத்த முடிகிறது.



குகைத்தான சாசனங்களில் தானம் கொடுத்த பிராமணர்களின் சமூக நிலையுடன் தொடர்புடையது மூன்றாவது வகை. இங்கு தானம் அளித்த பிராமணர்களை பிராமிச்சாசனங்கள் பருமகர் (பிராகிருத மொழியில்) என அழைக்கின்றது. இதன் தமிழ் வடிவம் பருமகன் அல்லது பெருமகன் என்பதாகும். பெருமகன் என்னும் சொல் சங்கநூல்களில் குடிமக்களின் தலைவரைக் குறிக்கப் பயன்படுவதாக உள்ளது. இவர்கள் சிற்றரசர்களாக, அமைச்சர்களாக, வரிவசூலிப்பவர்களாக, படைத்தளபதிகளாக, வணிகர்களாக, அரச தூதுவர்களாக இருக்கின்றார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தியபத்த விகாரையில் (குருநாகல்) மொக்கலி என்ற பிராமணனின் மகனும் பருமகர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்தவருமான மஜ்ஜிம என்பவனின் மகன் தத்தவின் குகை தானமளிக்கப்பட்ட செய்தி இருக்கின்றது. அதுபோல பருமகர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்த திஸ்ஸ என்ற பிராமணனின் குகை தம்புள்ளையிலும் , பருமகர் என்ற பட்டம் பெற்ற ஸுரிய எனும் பிராமணனின் மகன் தத்தக என்பவனின் குகை மொலகொடவிலும் (கண்டி) பௌத்த சங்கத்துக்கு தானமாக வழங்கப்பட்டதை அறிய முடிகிறது.




**கந்தளாயில் பிராமணக் குடியிருப்பு :**

இதுவரை நாம் பார்த்து வந்த வரலாற்றுத் தகவல்களின் மூலம் இலங்கையின் பல பாகங்களிலும் பிராமணர்கள் பண்டைய காலம் முதல் வாழ்ந்து வந்திருப்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது. இதன் தொடர்ச்சியாக கி.பி 3ம் நூற்றாண்டில் மகாசேன மன்னன் (கி.பி. 277 – 304) இலங்கையின் கிழக்குக் கடற்கரையில் புகழ்பெற்று விழங்கிய பிராமணக் கடவுளுக்கான கோவிலை (திருக்கோணேச்சரத்தை) அழித்து கோகர்ண விகாரையை நிறுவினான் என்பதை மகாவம்சம் பதிவு செய்கிறது. எனவே திருகோணமலையின் கந்தளாய்ப் பகுதியில் பிராமணக் குடியிருப்பு உருவாவதற்கு ஏற்றதான பின்னணி இருந்ததை இவற்றின் மூலம் புரிந்துகொள்ளலாம்.

வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

தொடரும்.. .. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் அந்தச் சிங்களத்து முற்போக்குச் சிந்தனையாளர்கள்

## "தென்னிலங்கை முற்போக்குவாதிகளுடன் இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிப்போம்" என குரல் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

நப்பின்னை

தென்னிலங்கை முற்போக்குவாதிகளுடன் இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிப்போம் என்ற குரல் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. இப்பொழுதும் சிலர் அக்குரலை ஒலிக்கின்றனர். இவ்வாறு கூறுபவர்கள் அந்த முற்போக்குவாதிகள் யார் என்று அடையாளப்படுத்தாமல் வெறுமனே முற்போக்குவாதிகள் என்று கூறி வருகின்றனர். இவ்வகையான குரல்கள் 1947 இல் இருந்தே வந்து கொண்டிருக்கின்றன.

தமிழினத்தின் உரிமைகள் பறிக்கப்பட்ட பொழுதெல்லாம் தமிழினத்தின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தவர்களை இனவாதிகள் என்று முத்திரை குத்தினர். குறிப்பாகத் தமிழினத்தின் நிம்மதியான வாழ்வுக்கு இணைப்பாட்சியே (சமஷ்டி) ஒரே வழி என்று கூறிய தமிழர் தரப்பை இனவாதிகள் என்று கூறினர். தமிழினத்தின் உரிமைகளைப் பறித்தவர்களைப் பற்றி இவ்வாறு சுட்டி அழைத்தவர்கள் யாருமில்லை. இதிலே சிங்கள அரசியல்வாதிகள் மட்டுமல்ல தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் இடதுசாரிக் கட்சிகள் என அழைக்கப்பட்ட சமசமாசக் கட்சி கம்யூனிஸ்டுக் கட்சிகள் முற்போக்குக் கட்சிகள் எனவும் தமிழரசுக் கட்சி இனவாதக் கட்சி எனவும் குற்றம் சுமத்தினர்.

இச் சிங்கள முற்போக்குக் கட்சிகளுடன் தமிழ் மக்கள் இணைந்தால் தான் தமிழ் மக்கள் தமது உரிமைகளுடன் வாழமுடியும். ஏன்று இவர்கள் கூறிவந்தனர். "தன் கையே தனக்குதவி தமிழரசே நமக்குதவி" என்ற குரலுடன் தமிழ் மக்கள் தந்தை செல்வா தலைமையை ஏற்றனர். இது தான் அன்றைய வரலாறு. முற்போக்குவாதிகள் என்று அழைக்கப்பட்ட இடதுசாரிகள் தமது உண்மையான உருவத்தை 1964 இல் காட்டிவிட்டனர். தொழிலாளர் வர்க்கத்தின் உற்ற தோழர்கள் தாங்களே என்று கூறிவந்த இவர்களை நம்பித் தொழிலாளர்கள் இவர்களின் பின்னால் ஒன்றாக இருந்தனர். வலுவான தொழிற்சங்க அமைப்புகள் இவர்களின் பின்னால் இருந்தன. தொழிலாளர்கள் 21 கோரிக்கைகளை வைத்து போராட்ட அறிவித்தல் கொடுத்த போது அதற்காக ஓங்கி ஒலித்தவர்கள் அவ்வாண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசுடன் இணைந்து அமைச்சர்களானார்கள். அதிலும் நிதியமைச்சு இடதுசாரித் தலைவர் கலாநிதி என்.எம்.பெரராவிற்கு வழங்கப்பட்டது.

அன்றே தொழிலாளர்களைக் கைவிட்டனர் 21 கோரிக்கைகளும் இவ்வாறே கைவிடப்பட்டது. தொழிலாளர்கள் தமது தலைமை தங்களை ஏமாற்றிவிட்டது என்பதைப் புரிந்து கொண்டனர். இதன் விளைவு இலங்கைத் தீவில் தொழிற்சங்கங்கள் பிளவுண்டன. தொழிலாளர்கள் வலுவான போராட்டங்களை நடத்த முடியாமல் போனார்கள். இதுதான் இடதுசாரி முற்போக்கு வாதிகளின் நிலையாகும்.

இவ்வாறு தொழிலாளர்களை ஏமாற்றிய இடதுசாரி முற்போக்கு வாதிகள் எனப்படுவோர் தமிழினத்தின் உரிமைகள் பற்றி என்ன செய்தார்கள். 1958 ஆம் ஆண்டு தமிழ் மொழி உபயோகம் பற்றி பண்டாரநாயக்காவால் ஒரு சிறப்புச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டிருந்தது. அச்சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாகச் சில சட்ட விதிகளை 1966 ஆம் ஆண்டின் அரசு நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தது. அற்ப சலுகைகளை வழங்கும் அச்சட்ட மூலத்தை தோசை வடை நல்லெண்ணை என்ற சொற்களைப் பயன்படுத்தி மிகவும் கேவலமான இனவாதத்தைக் கக்கி அந்த முற்போக்கு இடதுசாரிகள் தமிழ் மக்களுக்கு எதிரான ஊர்வலங்களை நடத்தினர். இதே முற்போக்குக் கும்பல் 1961 ஆம் ஆண்டு நடைபெற்ற அறப்போராட்டத்தை முறியடிக்கப் பலத்த முயற்சிகளில் ஈடுபட்டதும் வரலாறாகும்.

இதே முற்போக்கு இடதுசாரிகள் தான் 1972 ஆம் ஆண்டு இலங்கைத் தீவைச் சிங்கள பௌத்த குடியரசுக்கும் குடியரசு அரசியல் யாப்பை கொண்டு வந்தனர். தமிழ் மக்கள் தங்களின் குறைந்த பட்ச உரிமைகளுக்கான திருத்தங்களை அரசியல் யாப்பில் கொண்டு வந்த பொழுது அவற்றை முழு மூச்சாக எதிர்த்தவர்களும் இம் முற்போக்குவாதிகளே.

மார்க்சியம் லெனினிடம் என்று பிதற்றிக் கொண்டு தமிழினத்தின் அடிப்படை உரிமைகளை ஏற்காதவர்களை முற்போக்கு வாதிகள் என்று எவ்வாறு அழைக்க முடியும். 1972 ஆம் ஆண்டு மட்டுமல்ல 1978 ஆம் ஆண்டு மீண்டும் புதிய அரசியல் யாப்பிலும் கூட எந்த ஒரு சிறு சலுகை கூடத் தமிழினத்திற்கு வழங்கப்படக் கூடாது என்பதில் ஐக்கிய தேசியக் கட்சி சிறீலங்கா சுதந்திரக் கட்சி லங்கா சம சமாசக் கட்சி கம்யூனிஸ்டுக் கட்சி ஆகிய அனைத்துச் சிங்களக் கட்சிகளும் ஓரணியாக ஒற்றுமையாகவே இருந்துள்ளன. இருந்து வருகின்றன. விரல் விட்டு எண்ணக் கூடிய இரண்டு அல்லது மூன்று அரசியல் வாதிகளே விக்ரமபாகு கருணாரத்தினா வாசுதேவ நாணயக்கார ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர்களாகும். ஆனால் பின்னர் வாசுதேவ நாணயக்காரா தன்னை ஒரு தீவிர சிங்கள இனவாதியாக மாற்றிக் கொண்டார். விக்கிரமபாகு கருணாரத்தினா தமிழினத்துக்கு சுயநிர்ணய உரிமையைக் கைவிடாமல் போட்டியிட்டார். இவரைத் தமிழ் மக்களின் கட்சி என்று கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்காது போரை தவறை மட்டுமல்ல தமிழினத்துக்கும் பெரும் துரோகத்தையும் இழைத்தது. மஹிந்த ராஜபக்சவை அகற்ற வேண்டும் என்ற அமெரிக்க இந்திய ஆட்சியாளர்களின் எண்ணங்களுக்கு அமைவாகத் தமிழ் மக்களின் உரிமைகளுக்கான குரலாக ஒலிக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறிவிட்டது. இன்றும் அதே நிலையிலேயே அது உள்ளது.



சுமந்திரன் [illegible]

கூறிவந்த கலாநிதி விக்கிரமபாகு கருணரட்ணா மஹிந்தவின் ஆட்சி மாற்றத்தை விரும்பினார். அதற்காகப் பாடுபட்டார். தற்பொழுது அவரின் வாயிலிருந்தும் சுயநிர்ணய உரிமை என்ற சொல் வருவது நின்று விட்டது.

இவர்களை விட மக்களிடம் செல்வாக்கு ஏதுமற்ற ஒருவரோ இருவரோ தான் தமிழினம் ஒரு தேசிய இனம் அவர்களுக்கு பிரிந்து செல்லக் கூடிய சுயநிர்ணய உரிமை உண்டு என்று கூறுபவர்களாக உள்ளனர். இந் நிலையிலே தான் தற்பொழுது ஒரு குரல் தென்னிலங்கை முற்போக்கு வாதிகளுடன் இணைந்து தமிழினப் பிரச்சினைக்கு தீர்வு காணப்போவதாக ஒலிக்கின்றது. இக்குரலுக்குரியவர் இதற்காக யார் யாருடன் தொடர்பு கொண்டுள்ளார் என்பது வியப்புக்குரியதாகும். சிங்கள இனவாதச் சிந்தனையில் முற்றாகவே மூழ்கியவர்கள் அவ்வகையானவர்களை எதற்காக இவர் சிங்கள முற்போக்கானர்கள் என்று கூறுகின்றார் என்பது வினாவாக எழுந்துள்ளது.

இதேநேரம் மேலும் ஒன்றை நினைவு கூற வேண்டியும் உள்ளது. தமிழின உரிமைக்காக ஆயுதம் ஏந்திய சில ஆயுதக் குழுக்கள் பின்னர் தாங்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பி விட்டதாகவும் தென்னிலங்கை முற்போக்கு வாதிகளுடன் இணைந்து தமிழ் மக்களின் உரிமைக்காக உழைக்கப் போவதாகவும் கூறினர். அத்துடன் நில்லாது அவர்கள் யார் யாரை முற்போக்கு வாதிகள் என்று கூறினார்களோ அவர்களது அரசியல் மேடைகளிலும் ஏறினர். ஆனால் கண்ட பலன் எதுவுமில்லை. அவர்கள் சிங்கள மேலாதிக்கச் சிந்தனையிலிருந்து விலகவும் இல்லை. தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை ஏற்றுக் கொள்ளவும் இல்லை.

இந் நிலையில் தான் பாதிரியார் இமானுவேல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து சிங்கள முற்போக்குச் சிந்தனையாளர்களுடன் கலந்துரையாடி உழைக்கப் போவதாகவும் அதற்காக ஆட்சியாளர் அமைப்பு விடுத்த பின் கால நேரம் பார்த்து நாடு திரும்பவுள்ளதாகவும் அறிவித்துள்ளார். இவர் கூறும் முற்போக்குச் சிந்தனையாளர்கள் யாவர்? இவர் ஏற்கனவே சந்திரிகா பண்டாரநாயக்கா மங்கள சமரவீரா ரணில் ஆகியோருடன் பேசியுள்ளார். எனவே இவர்கள் தான் சிங்கள முற்போக்குச் சிந்தனையாளர்கள் என்று பாதிரியார் கருதுகின்றாரா? அல்லது தமிழ் மக்களுக்குச் சுட்டிக் காட்டுகின்றாரா? இவர்களுடன் மைத்திரிபால சிறிசேனாவும் சிங்கள முற்போக்குச் சிந்தனையாளர்களில் அடங்குவதாகவே அவர் குறிப்பிடுகின்றாரா?

போரின் வெற்றி மஹிந்தவுக்கு மட்டும் உரியதல்ல தனது ஆட்சிக் காலத்திலேயே யாழ்ப்பாணக் குடாநாட்டை இராணுவம் கைப்பற்றிவிட்டது. இதன் மூலம் 75 விழுக்காடு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது தானே என்று கூறும் சந்திரிகாவை முற்போக்குவாதி என்று கூறுகின்றாரா? சந்திரிகா ஆட்சியில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பது இன்னமும் தெரியவில்லை. அவரது ஆட்சியில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்கள் விசாரணைகள் ஏதுமின்றி இன்றும் சிறைகளில் வாடுகின்றனர். இவ்வாறு கொடுமைகளைச் செய்த சந்திரிகா முற்போக்குச் சிந்தனை கொண்டவரா? ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் மருமகனும் இன்றைய பிரதமரும்



முற்போக்குச் சிந்தனையாளரா.

நீதி விசாரணை இன்றித் தமிழ் இளைஞர்கள் சிறைகளில் வாடுவதற்குக் காரணமான பயங்கரவாதச் சட்டத்தைக் கொண்டு வந்த ஜே.ஆர் அரசின் அமைச்சராக இருந்த ரணில் முற்போக்குவாதியா? தமிழீழ விடுதலைப் புலிகளைப் பிரித்து அதனைப் பலவீனமடையச் செய்த பெருமை எனக்குத் தான் உரியது அதுதான் இராணுவ வெற்றிக்குக் காரணம் என வீரம் பேசும் ரணில் முற்போக்குவாதியா? புலிகளைச் சர்வதேச ரீதியில் பலவீனமடையச் செய்யவே அவர்களுடன் ஒப்பந்தம் செய்தேன் என்று கூறும் ரணில் முற்போக்குவாதியா? சந்திரிகாவுக்கு என்றுமே வலது கரமாக இருந்து அவருக்கு ஆலோசனைகள் வழங்கி வந்தவரும் வருவருமான மங்கள சமரவீர ஒரு முற்போக்குவாதியா? சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் பல ஆண்டுகளாக இருந்து வரும் மைத்திரிபால சிறிசேனா முற்போக்குச் சிந்தனை கொண்டவரா? மஹிந்தவின் காலத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த மைத்திரிபால முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்குத் துணை நின்றவரல்லவா? இவரை முற்போக்குச் சிந்தனையாளர் என்று கூற முடியுமா? இவர்கள் அனைவரும் சிறையில் இருக்கும் தமிழ் இளைஞர்கள் பற்றி எவ்வாறு இன்று நடந்து கொள்கின்றார்கள் என்பது வெளிப்படையாக உள்ளது.

இவ்வாறான சிந்தனையுடையவர்களுடன் தான் பேசித் தமிழ் மக்களது பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாகக் கூறுகின்றார் பாதிரியார். இது சாத்தியமா? இவரை ஏன் அழைக்கின்றார்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். சிலவேளை தாங்கள் அவரை அழைக்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூறலாம் உண்மையில் சுமந்திரன் இவரைச் சந்தித்து உரையாடியதன் பின்பே இவர் மங்கள சமரவீரரைச் சந்தித்தார். அப்பொழுது சுமந்திரனும் உடனிருந்துள்ளார். எனவே பாதிரியாரை இங்கே அழைத்து வந்து இவர் சந்திரிகா காலத்தில் நாட்டை விட்டு ஓடிய காட்சியை மறைத்து மக்களை முட்டாள்களாகத் தொடர்ந்து வைத்திருக்கலாம் என்ற முயற்சியே இது எனலாம்.

மார்க்சிய லெனினிய சித்தாந்தங்களை முகமூடியாக வைத்திருந்த பொதுவுடமை பேசிய இடதுசாரிகளின் தோலை உரித்து இவர்கள் முற்போக்குச் சிந்தனையாளர்கள் அல்ல இவர்கள் இனவாதிகளே என்ற நிலையில் புதிய முற்போக்குச் சிந்தனையாளர்களாக தற்போதைய ஆளும் தரப்பைக் காட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாதிரியார் இமானுவேலைப் பயன்படுத்துகின்றது. அதற்குத் துணைபோக அவரும் தயாராகி விட்டார். தமிழினம் தன் உரிமைகளை இவர்கள் மூலம் அடையுமா? அல்லது இருக்கும் கொஞ்ச நஞ்சத்தையும் முற்றாக இழக்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 83

# உறவுகளும் பிளவுகளும்

(வி. என். சந்திரகாந்தி)



**நாம்** வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த வாழ்க்கை இறைவன் எமக்கு தந்த பரிசு ஆகும். எமது உடலானது நிலம், நீர், தீ, காற்று, ஆகாசம் ஆகிய பஞ்ச பூதங்க-ளால் ஆனது. எமது உயிர் ஆன்மா ஆகும். ஆன்மாவானது பேரான்மாவின் அம்சமாகும். ஆன்மா தன்னை பேரான்மாவில் இணைத்துக்கொள்ள எடுக்கும் முயற்சியே வாழ்க்கை. பேரான்மாவில் இணைவதில் தான் பேரானந்தம் இருக்கின்றது. அதனை ஒவ்வொருவரும் தத்தம் தகுதிக்கேற்ப உணர்ந்து கொள்வர். இயற்கையாகவே நாம் சமூகத்துடன் இணைந்து கொள்வதற்கு காரணமாக அமைந்திருப்பதே பேரான்மா மீதான எமது நாட்டம் தான்.!

பெற்றோர், உற்றார், உறவினர், சுற்றத்தவர், நண்பர் அனைவருடனும் எமது வாழ்க்கையை எடுத்துச் செல்வதில் எமக்கு பேரானந்தம் கிட்டாவிட்டாலும் கூட நிச்சயமாக ஆனந்தம் கிட்டுகின்றது. சுற்றம் என்பது இங்கு குறிப்பிடப்பட்ட உறவுகளையே. திருவள்ளுவர்கூட 'சுற்றம் தழால்' என்று ஒரு அதிகாரத்தை தனது நூலில் உள்ளடக்கியுள்ளார்.

இன்று எமது உறவுகள் இணையத்தில் முகநூல் வரைக்கும் வளர்ச்சி அடைந்து-ள்ளது. நேரில் காணாதவர்கள் சொந்தமோ பந்தமோ அற்றவர்களுடன் கூட நாம் உறவு பாராட்டக்கூடியதாக உள்ளது. அவர்களுடன் மணித்தியாலக் கணக்கில் CHAT பண்ணுகின்றோம். பெற்ற தாய், சகோதரங்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறாவிட்டாலும் கூட முகநூல் நண்பர்களுக்கு தப்பாது பிறந்தநாள் வாழ்த்து கூறுகின்றோம். முன்னேற்பாடாக 'பிறந்தநாள் நினைவூட்டல்கள்' ஒவ்வொரு முகநூல் நண்பர்கள் சார்பிலும் வருகின்றது. அப்படியே அவர்களும் எமக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றார்கள். எமக்கு பரிசுப்பொருட்களையும் சிலர் அனுப்ப செய்கின்றார்கள். முகநூலில் ஆண்பால், பெண்பால் என்ற பேதமில்லாது சினேகம் கொள்வதால் நட்பு காதலாக மலரும் சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றது. முகநூல் நண்பர்களை குடும்பமாகவே அறிந்திருப்பதால் ஏன் காதலுக்கும் கூட பச்சை விளக்கு சிக்னல் கிடைக்கின்றது. முன்னர் பேனா நண்பர்களுக்கு இருந்த மவுசை இந்த முகநூல் இல்லாமல் செய்துவிட்டது. அயலவர்களை அறியாத-வர்கள் கூட உலகின் பல நாடுகளிலும் உள்ள மனம் கவர்ந்தவர்களுடன் நட்பு பூண்டு இருக்கின்றார்கள். இதை நாகரீக வளர்ச்சியென்றோ? விஞ்ஞான வளர்ச்சி-யென்றோதான் கூறவேண்டியுள்ளது.

உண்மையில் எமக்கு பிரதானமானவர்கள் யாரென்று பார்த்தால் அவர்கள் நெருக்கமாக எம்மை சுற்றியிருப்பவர்களே ஆகும். ஆறு வயது வரையிலும் குழந்தையை பெற்றோர் பராமரிக்க வேண்டி இருக்கின்றது. அதே போல் அறுபது வயதுக்குமேல் ஒருவனுக்கு தளர்ச்சி உண்டாகின்றது. அப்போது அவனது பிள்ளைகளோ, மருமக்களோ அவனை பராமரிக்க வேண்டியுள்ளது. நாம் வீரியத்துடன் எமது வாழ்க்கையில் செயற்படும் பொழுது எமது இரத்த உறவுகளும் அயலவரும் நண்பர்களும் எமக்கு உறுதுணையாக இருக்கின்றார்கள். அன்பு, பாசம், நேசம் மிக்க உறவுகள் கிடைக்கப்பெறுவது எமது அதிர்ஷ்டம் என்றே கருத வேண்டும். எமது வாழ்க்கையின் வெற்றிப் படிகள் ஒவ்வொன்றுக்கும் ஆக்கமும் ஊக்கமும் தருபவர்கள் அவர்கள் என்றே கொள்ளல் வேண்டும். அதே போன்று எமக்கு ஆபத்தோ வீழ்ச்சியோ நேரும்போதெல்லாம் கைகொடுத்து தூக்கி விடக்கூடியவர்களும் அவர்களே. எமது இளம் வயதில் இரத்த துடிப்பான நேரத்தில் நாம் சிந்திக்காமல் தவறான வழிகளில் செல்லவும் நேரலாம்.... அல்லது தவறான நண்பர்களுடன் நட்பு பூண்டு தீயவழியில் செல்லவும் நேரலாம். அப்போதெல்லாம் எமக்கு துணிவுடன் சரியான பாதையை இடித்துரைக்க கூடியவர்கள் எம்மேல் அக்கறை கொண்ட உறவுகளே. கல்வி தொழில் வாய்ப்பு ஆகிய துறைகளில் எமக்கு பொருத்தமான சந்தர்ப்பங்களை சுட்டிக்காட்டுவது பொருத்தமான விவாக துணையை சிபார்சு செய்வது, மனை அமைக்க பொருத்தமான காணி விற்பனைக்கு வரும் போது தகவல் தருவது யாவும் எம்மேல் அன்பு பூண்ட உறவுகளின் பங்களிப்பே ஆகும் அல்லவா!.

மறுவளமாக நாமும் எமது உறவுகள் மீது அன்பும் மதிப்பும் வைக்க வேண்டும். எமது உறவுகளில் பலர் கல்விமான்களாக இருப்பார்கள். மற்றும் சிலர் பணம் படைத்தவர்களாகவோ நல்ல இதயம் படைத்தவர்களாகவோ மக்கள் சேவையை பிரதானமாக கொண்டவர்களாகவோ இருக்கலாம். அவர்கள் ஒவ்வொருவரதும் தகுதிகளை அறிந்து அவர்களது மனம் நோகாமல் பணிந்து நடக்க வேண்டும். அவர்களது நன்மை, தீமைகளில் தவறாது கலந்து கொள்ள வேண்டும். அவசியமான உதவிகளை நாமாக செய்ய வேண்டும் அல்லது பிறரிடம் பெற்றுக்கொடுக்க வேண்டும். சிலசமயம் நாம் உறவுகளை விட்டுப் பிரிந்து தூர விலகி இருக்க நேரலாம். அச்சமயங்களில் கூட அவர்களுடன் தொடர்புகளை பேண வேண்டும்.



எம்மிடம் செல்வம் இருக்கலாம். அது எமது அகந்தையை வெளிப்படுத்துவதாக இருக்க கூடாது. எமது செல்வத்தில் உறவினர்களுக்கும் பங்கு உண்டு என்று நினைப்பவனை அனைவரும் போற்றி மதிப்பர். எமது தேவைகள் போன்றே உறவுகளுக்கும் தேவைகள் இருக்கும். எமது வீட்டு பெண்ணுக்கு வரன் வேண்டப்படுவது போலவே அவர்கள் இல்லப் பெண்ணுக்கும் வரன் அவசியமாகும். அப்படியான சமயங்களில் இன்சொல் பேசியும் பொருளுதவி வழங்கியும் உதவி செய்தால் அந்த நன்றியை அவர்கள் வாழ்நாள் பூராகவும் மறவாது போற்றுவர்.

நாம் எவ்விதம் உறவுகளை மதித்தும் அணைத்தும் நடக்கின்றோமோ அவ்வாறு அவர்களும் எம்மேல் பாசம் பொழிவர். ஒருவரில் ஒருவர் தங்கியிருத்தலே வாழ்க்கை என்பது எமது அடிமனதில் பதிந்திருக்க வேண்டும்.

பெற்றோர் பிள்ளை பாசம் சகோதர பாசம், கணவன் மனைவி பாசம் காதலர் அன்பு நண்பர்களின் நட்பு இவையெல்-லாமே சரித்திரம் படைத்த உறவுகளேயாகும். சந்தர்ப்பம் சூழ்நிலை சிறு சிறு மனஸ்தாபங்களை உண்டு பண்ணினாலும் உண்மையான அன்பு அவற்றை மறந்து மன்னித்து விடுவதை நாம் அனுபவத்தில் கண்டுள்ளோம்.

இனி உறவுக்கு பகையான அம்சங்கள் பற்றி சிறிது அவதானிப்போம். ஒருவரிடம் கோப உணர்வு மிகுந்திருந்தால் அவரை உறவுகள் அண்டி நடக்க மாட்டாது. கோபம் சரியான சிந்தனையை தடை செய்ய கூடியது. இன்னும் சொல்லப்போனால் பழிவாங்கும் எண்ணத்தை ஊக்குவிக்க வல்லது. பணிவும் இனிய சொல்லும் அவரிடம் இருக்க மாட்டாது. அதே போன்று சுயநலம் உடையவர் எப்போதும் தனது தேவையை மட்டுமே கருத்தில் கொண்டவராய் இருப்பார். தனது காரிய சித்திக்காக பிறருக்கு ஏற்படக்கூடிய கஸ்டங்களையும் துன்பங்களையும் பொருட்படுத்த மாட்டார். அகங்காரம் அவர்களிடம் குடிகொண்டிருக்கும். தன்னைவிட்டால் உயர்ந்தவர் யாரும் இல்லை என்று பிடிவாதம் பிடிப்பார். சாதாரணமாக சூழ்ச்சிகள் பல செய்வார். தன்னை பாதிக்க கூடிய கருமம் என்று எண்ணுபவற்றை பிறர் தலையில் சுமத்தி தப்பித்துக்கொள்வார். உறவுகள் இவர் பற்றி எப்போதும் விழிப்புடன் இருப்பதுடன் எப்போதும் விலகியே நடப்பர்.

தவிர பொய் பேசுதல் களவு லஞ்சம் நேர்மையின்மை ஆகியன உறவுக்கு பகையாகும். அவர்களை உறவுகள் மட்டுமல்ல உலகமே மதிக்க மாட்டாது.

சிலரிடம் மற்றவர்களை தண்டிக்கவேண்டும் அதன்மூலம் அவர்களுக்கு பாடம் புகட்ட வேண்டும் என்ற பிடிவாதம் மிகுந்து இருக்கும். அவர்களை யார்தான் அனுசரித்து நடப்பர். வெளிநாடுகளில் பெற்றோர் தமது பிள்ளைகளை தண்டிப்பதையே சட்டம் மறுக்கின்ற போது உறவுகளுக்கிடையே இந்த நடைமுறையை யார்தான் ஏற்பார்.

சிலர் தமது தவறுகளை பிறர்மேல் போடும் பழக்கம் உடையவர்கள். எம்மவர் பலரில் பிறரை விமர்சிக்கும் தன்மை ஒன்று உண்டு. இதனால் மனஸ்தாபங்கள் உருவாகுமே தவிர உறவு உருவாகாது. நாம் எமது சுற்றத்தாருடன் அமைதியாகத்தான் வாழ்ந்து கொண்டிருப்போம். புதிதாக ஒருவர் தான் தூரத்து உறவு என்று கூறி சொந்தம் பாராட்டுவார். நாம் ஏமாந்தால் போதும். தான் வந்த நோக்கத்தை நிறைவேற்றி விட்டு எம்மையும் சிக்கலில் மாட்டிவிட்டு போவார்.

எந்த வகையான உறவையும் நீங்கள் யாருடன் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் ஒரு விடயத்தில் மட்டும் நீங்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும். எவரையும் உங்கள் குடும்ப விவகாரங்களில் அதிகாரம் செலுத்த அனுமதிக்காதீர்கள்.!

# இனி மீன் சாப்பிடுவீர்களா??




**தி**ருகோணமலையில் மடத்தடி பகுதியில் இடம்பெற்ற ஓர் நிகழ்வு...

இற்றைக்கு இரு வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த ஓர் சம்பவம்.

அன்று வெள்ளிக்கிழமை. மிகவும் ஆச்சார்யமான ஓர் இந்து குடும்பம் அது. அம்மா, அப்பா, இரு ஆண் பிள்ளைகள் உட்பட அப்பாவின் தாயாரும் அவர்களுடன் வசித்து வந்தார். அவ் வயதானவருக்கு கடவுள் மீது அதீத நம்பிக்கை உண்டு. ஆனால் சில வாரங்களாக அவரது நடவடிக்கைகள் சற்று ஆச்சர்யமூட்டுவதாய் காணப்பட்டது. இதைக் கவனித்த குடும்பத்தலைவியான பிரியா தன் கணவரிடம் இது குறித்து உரையாடினால். அவர் ஒரு நாள் தன் தாயுடன் மனந் திறந்து பல கதைகளும் கதைத்தார். தன் தாயார் தன்னுடன் பகிர்ந்து கொள்வார் என எண்ணிக்கொண்டார் போலும்.

எனினும் பிடிவாதமாக இருந்த அந்த வயதானவர் வாய் திறக்கவே இல்லை. சரிம்மா என மகன் எழுந்த போது அவரது அம்மா எனக்கு கொஞ்ச நாட்களாக ஏதோவொரு அசம்பாவிதம் இங்கு நடக்கப் போவதாக மனதினுள் தோணிக் கொண்டே இருக்கின்றது. என்ன செய்வதென்று புரியவில்லை என்றார்.

பக்கத்தில் வந்தமர்ந்து தோலைக் கட்டிக் கொண்ட மகன் அம்மா! என விழித்து அவ்வாறு எதுவும் நடக்காது. சும்மா மனதைப் போட்டு குழப்பாமல் மனஉளைச்சலின்றி இருங்கள். நான் உங்களை சற்று காற்றாட வெளியில் கூட்டிச் செல்கின்றேன். வாருங்கள் என கூட்டிக் கொண்டு சென்றார்.

மீண்டும் வீட்டிற்குள் வரும்போது வழியில் விற்றார்கள் என கூறி மிகவும் நீட்டமான மீன் ஒன்றை வாங்கி வந்தார் தந்தை. பிரியா தன்னால் இம் மீனை துப்பரவு செய்ய இயலாது என வாயை மூடிக் கொண்டு வெளியில் சென்று விட்டாள்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த மூத்த மகன் நான் வெட்டித் தாறேன் இரவுக்கு பொரித்துத் தர வேண்டும் எனும் உடன்படிக்கையுடன் பெரிய இரு கத்திகளையும் பாத்திரங்களையும் எடுத்துக் கொண்டு முற்றத்திற்கு சென்றான்.

ஏனெனில் மீனோ அவ்வளவு பெரிதாக இருந்தது.

சென்று அமர்ந்தவன் முதலில் செதில்களை துப்புரவு செய்தான். ஆனால் மிகவும் கடினமாக கழன்று வரவே சிரமப்பட்டன அச்செதில்கள். ஆகட்டும், வெட்டிப்போட்டு துப்புரவு செய்வோம் என எண்ணியவன், வால் பகுதியை வெட்டினான். "தந்தை புது மீன் என்றாரே ஆனால் இதன் இரத்தம் கறுப்பு நிறத்தில் வருகிறதே" என எண்ணியவன் மேற்கொண்டு வெட்ட கத்தியை வைத்தான்.

தொலைவில் அனுங்கல் சத்தம் கேட்டது. எட்டிப் பார்த்தவன் தன் கடமையை தொடர்ந்தான். வாயில் எச்சில் ஊறிக் கொண்டிருந்தது. ஏனெனில் மிகவும் பருத்த மீன் அது. அதன் தசையை பார்க்கும் போது அதை எப்போது உருசிப்போம் என எண்ணத் தோன்றும்.

அனுங்கல் சத்தம் அவனை நெருங்கி அசைந்தது. சற்று நேரத்தில் மிக அண்மையில் அவ் அனுங்கல் சத்தம் கேட்டது. மிக அண்மையில்... காதோரத்தில் கேட்டது. என்னை வெட்டாதே எனும் ஒரு குரல் கேட்டது.

திடுக்கிட்ட அவன் இது எனது பிரமை என நினைத்துக் கொண்டு வயிற்றுப் பகுதியை வெட்டினான். இரத்தம் ஊற்றாய் பெருக்கெடுத்தது. உள்ளிருந்து பல மீன் குஞ்சுகள் கொட்டின. அதைப் பார்த்த அவன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு எழுந்தான். வடிந்த இரத்தம் தரையில் படுமுன். "இது என்னுடையது.... எனக்கே சொந்தமானது" என அகோர குரல் ஒன்று கேட்டது. இரண்டடி பின்னால் எடுத்து வைத்த அவனுக்கு தலை சுற்றியது. ஓர் பெரிய கரு நாக்கு அவற்றை நக்கி நக்கி குடித்து சாப்பிடுவதை கண்டான். தன்னை மீறி கத்தினான். வேறு யாரையும் அனுமதிக்காது வெளியில் வந்த பாட்டி அவன் மீது தண்ணீரை ஊற்றி பின்னால் திரும்பிப் பாராமல் உள்ளே செல் என்றார்.

விடியற் காலை பெரிய முள் மாத்திரம் முற்றத்தில் கிடந்தது.

(தன்யா)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சினிமுரசு




## திரை விமர்சனம் "144"

### ஓவியா,ஸ்ருதி நடிக்கும்

மதுரையில் உள்ள இரண்டு கிராமங்களுக்கு இடையே பிரச்சனை ஏற்படுகிறது. இதனால் கலெக்டர் 144 தடை உத்தரவு விதிக்கிறார். இதில் ஒரு கிராமத்தை சேர்ந்தவர் மதுசூதனன். நகை வியாபாரியான இவர் பல கோடி மதிப்புள்ள தங்கத்தை திருடி பதுக்கி வைக்கிறார். மற்றொரு கிராமத்தை சேர்ந்தவர் சிவா. இவர் திருட்டு தொழில் செய்து வருகிறார். திருடி அடிக்கடி போலீசில் மாட்டிக் கொள்ளும் சிவாவை, போலீஸ்காரர்கள் திருடுவதற்கு தகுதி இல்லாதவன் என்று கேலி செய்கிறார்கள். இதனால் கோபமடையும் சிவா, மதுசூதனனின் நகை கடையில் கொள்ளையடிக்க திட்டமிடுகிறான். அதன்படி, பாலியல் தொழில் செய்து வரும் ஓவியா மூலம் மதுசூதனின் நகை கடையில் கொள்ளையடித்து, நகைகளை ஓவியாவிடம் கொடுத்து ஒரு பங்களாவில் தங்க வைக்கிறார் சிவா.

மறுபுறத்தில் மதுசூதனின் மகளான ஸ்ருதி ராமகிருஷ்ணனை, மதுசூதனின் டிரைவர் அசோக் செல்வன் காதலித்து வருகிறான். ஸ்ருதி ராமகிருஷ்ணனிடம் மதுசூதனன் பதுக்கி வைத்துள்ள நகைகளின் சாவி இருக்கிறது. இதனால், மற்றொரு திருடனான முனிஸ்காந்த், ஸ்ருதி ராமகிருஷ்ணனை கடத்தி ஒரு பங்களாவில் வைக்கிறார். இவரை தேடி அசோக் செல்வன் அதே பங்களாவிற்கு வருகிறார். சிவா, ஓவியா, அசோக் செல்வன், ஸ்ருதி ராமகிருஷ்ணன், முனிஸ்காந்த் அனைவரும் ஒரே பங்களாவில் சந்திக்கிறார்கள். அப்போது முனிஸ்காந்த் பல கோடி மதிப்புள்ள நகைகளை திருடவே ஸ்ருதி ராமகிருஷ்ணனை கடத்தினேன் என்று கூறுகிறார்கள். இதைகேட்ட மற்றவர்கள் அந்த நகைகளை எடுத்து வாழ்க்கையில் செட்டிலாக எண்ணுகிறார்கள். ஊருக்குள் 144 தடை உத்தரவு இருப்பதால் அந்த நகைகளை அவர்கள் எடுத்தார்களா? அசோக் செல்வன், ஸ்ருதி ராமகிருஷ்ணன் இருவரும் காதலில் ஒன்று சேர்ந்தார்களா? என்பதே மீதிக்கதை.

**மொத்தத்தில் '144' வலுவில்லை**

## "ஈட்டி"

ரவி அரசு இயக்கத்தில்
அதர்வா, ஸ்ரீதிவ்யா

திரைப்படத்தின் திரை விமர்சனம் அடுத்த வார இதழில்

### தெறி படத்தில் விஜய்யின் பலவிதமான தோற்றங்கள்

விஜய் நடிக்கும் புதிய படம் தெறி. இதில் கதாநாயகிகளாக சமந்தா, எமிஜாக்சன் நடிக்கின்றனர். அட்லி டைரக்டு செய்கிறார். இதன் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடக்கிறது. இந்த படத்தில் விஜய் பலவிதமான தோற்றங்களில் வருகிறார். அவரது கதாபாத்திரம் சஸ்பென்ஸ் ஆக வைக்கப்பட்டு உள்ளது. இந்த படம் அதிரடி கதையம்சத்துடன் குடும்ப பாங்கான படமாக தயாராகிறது என்று அட்லி கூறினார். ரசிகர்களை கவரும் வசனங்களையும் படத்தில் வைத்துள்ளனர்.

முந்தைய படங்களில் விஜய்யின் அறிமுக பாடல்களை அதிக பொருட்செலவில் ஏராளமான துணை நடிகர், நடிகைகளை வைத்து படமாக்கியது போல் இந்த படத்திலும் அறிமுக பாடல் இடம்பெறுகிறது. இந்த பாடலில் விஜய் நடன கலைஞர் களுடன் இணைந்து நடனம் ஆடுகிறார். விரைவில் இந்த பாடலை மட்டும் இணைய தளங்களில் வெளியிட உள்ளனர். சென்னையிலும் வெளிமாநிலங்களிலும் இதன் படப்பிடிப்பு நடந்து வருகிறது.

இந்த படத்துக்கு ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைக்கிறார். ஜார்ஜ் ஜி. வில்லியம்ஸ் ஒளிப்பதிவு செய்கிறார். எஸ்.தாணு தயாரிக்கிறார்.

### அனுஷ்காவுடன் இணையும் ஐந்து அதிர்ஷ்டசாலிகள் யார்?

ருத்ரமாதேவி, இஞ்சி இடுப்பழகி போன்று பெண்கள் சம்பந்தப்பட்ட கதையில் நடித்து அனைவரின் பாராட்டுக்களை பெற்றவர் அனுஷ்கா. இவர் மீண்டும் தமிழ், தெலுங்கில் உருவாக இருக்கும் ஒரு புதிய படத்தில் நடிக்க இருக்கிறாராம்.கிருஷ்ண வம்சி இயக்கும் இப்படத்திற்கு ருத்ராக்ஷா என்று பெயரிட்டுள்ளனர். அதோடு அனுஷ்காவுடன் இணைந்து இப்படத்தில் 5 நாயகர்கள் நடிக்க இருக்கின்றனராம்.

### ஜாக்கி சானுடன் நடிக்கும் தனுஷ் நாயகி

ஆசியத் திரையுலகத்திலிருந்து ஹாலிவுட் திரையுலகம் வரை புகழ் பெற்ற ஆக்ஷன் ஹீரோ ஜாக்கி சான். இவருடன் நடிக்க பலபேர் முயற்சி செய்து வருகின்றனர். இந்நிலையில் ஜாக்கி சான் நடிக்க இருக்கும் Kung Fu Yoga என்ற படத்தில் நடிக்க அனேகன் பட நாயகி அமைரா தஸ்துருக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.ஆங்கிலம், ஹிந்தி, மண்டரின் என மூன்று மொழிகளிலும் தயாராகும் இந்த படத்தை ஸ்டான்லி டாங் இயக்குகிறார். மேலும் இந்த படத்தில் சோனு சூத் மற்றும் இலியானாவும் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர்.



### "பிறந்தநாளைக் கொண்டாடவேண்டாம் ரஜினி வேண்டுகோள்"

டிசம்பர் 12ம் தேதி, தனது 65-வது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார் ரஜினிகாந்த். இந்நிலையில் தனது பிறந்தநாளை இந்த வருடம் கொண்டாடவேண்டாம் என்று ரசிகர்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறார்.

சென்னையில் பெய்த கனமழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்ட நிலையில் தனது ரசிகர்கள், நிவாரணப் பணிகளில் ஈடுபடவேண்டும். எனவே டிசம்பர் 12 அன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுவதற்குப் பதிலாக மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என தன் ரசிகர்களுக்கு ரஜினி வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

### பொங்கல் ரேஸில் ரஜினிமுருகன்!

திருப்பதி பிரதர்ஸ் பிலிம் மீடியா நிறுவனம் தயாரித்திருக்கும் படம் "ரஜினிமுருகன்". சிவகார்த்திகேயன், கீர்த்தி சுரேஷ், சூரி, ராஜ்கிரண், சமுத்திரக்கனி ஆகியோர் நடித்துள்ளார்கள். பொன்ராம் இயக்கியுள்ளார். இந்தப் படம் வெளியாவது பல வாரங்களாகத் தள்ளிப் போன நிலையில், டிசம்பர் 4-ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், கடந்த வாரம் சென்னையில் பெய்த கனமழையால், ரஜினிமுருகன் வெளியாகவில்லை.

### தனுஷ் இரட்டை வேடத்தில் நடிக்கும் கொடி!


தனுஷ்ன் அடுத்தப் படமான கொடி, வேலைகள் ஆரம்பமானது. இப்படத்துக்கான பூஜை நடந்தது.
எதிர்நீச்சல், காக்கிசட்டை ஆகிய படங்களை இயக்கிய துரை செந்தில் குமார் இப்படத்தை இயக்குகிறார். இது அரசியல் கதை கொண்ட படம். இரட்டை வேடத்தில் நடிக்கிறார் தனுஷ். த்ரிஷா, ஷாம்லி ஆகியோரும் இப்படத்தில் நடிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

MOBILE

## சம்சுங் கைப்பேசியில் நவீன தொழில்நுட்பம்



சம்சுங் நிறுவனமானது அடுத்ததாக Samsung Galaxy S7 ஸ்மார்ட் கைப்பேசியினை விரைவில் அறிமுகம் செய்யவுள்ள நிலையில் அக் கைப்பேசி-தொடர்பான பல தகவல்கள் வெளியாகி உள்ளன.
இந்நிலையில் தற்போது மற்றுமொரு தகவல் வெளியாகியுள்ளது.
அதாவது, Samsung Galaxy S7 கைப்பேசியில் இருந்து வெப்பம் அதிகளவில் வெளியேறுவதை தவிர்ப்பதற்காக வெப்பக் குழாய்கள் (Heat Pipes) இணைக்கப்படவுள்ளன.

இது தவிர இக் கைப்பேசியானது Exynos 8990> Qualcomm Snapdragon 820 ஆகிய Processor களைக் கொண்ட இரு பதிப்புக்களாக வெளிவரவுள்ளதாகவும், இதன் திரையானது 5.2 அங்குல அளவுடையதும், 2560 x 1440 Pixel Resolution உடையதாகவும் இருக்கும் என சில தினங்களுக்கு முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

INFOMATION TECHNOLOGY

## குறைந்த மின்சக்தியிலும் இயங்கும் தொடுதிரை

தற்போது அதிகளவில் பாவனையிலுள்ள ஸ்மார்ட் மொபைல் சாதனங்களின் தொடுதிரையானது மின்சக்தியை வெகுவாக நுகர்கின்றது.
இதனால் அவற்றில் இணைக்கப்பட்டிருக்கும் மின்கலங்கள் விரைவாக சார்ஜ் இறங்குகின்றன. இப் பிரச்சினைக் தீர்வாக குறைந்த மின் சக்தியிலும் இயங்கக்கூடிய தொடுதிரையினை உருவாக்குவதற்கான முயற்சியில் ஐக்கிய இராச்சிய விஞ்ஞானிகள் வெற்றிகண்டுள்ளனர்.
Germanium-Antimony-Tellurium (GST) திரவியத்தினைக் கொண்டு 7 நனோமீற்றர்கள் தடிப்பு உடைய படைகளைக் கொண்டு இத் தொடுதிரைகள் உருவாக்கப்படும்.
இத் தொடுதிரைகள் அடுத்த 12 மாதங்களில் ஸ்மார்ட் மொபைல் சாதனங்களில் பாவனைக்கு வரலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.




OTHER

## புற்றுநோயுடன் போராடக்கூடிய நனோ டேமினேட்டர்கள்

திரவ உலோகத்தினைக் கொண்டு புற்றுநோய்க் கலங்களுடன் போராடக்கூடிய நனோ டேமினேட்டர்களை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.
இதனை சாதாரண மாத்திரைகளை வழங்குவது போன்று புற்றுநோய்க் கலங்களை நோக்கி செலுத்தி அவற்றுடன் போராடி அழிவடையச் செய்ய முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இது பற்றி North Carolina's State பல்கலைக்கழகம் மற்றும் பயோ மெடிக்கல் பொறியலாளரான Zhen Gu என்பவர் தெரிவிக்கையில் இது வைத்தியர்களுக்கு மிகவும் இலகுவான முறையாக காணப்படும் எனவும், புற்றுநோய்க் கட்டிகளை விரைவாக கண்டறிவதற்கும் உதவும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த டேர்மினேட்டர்கள் 100 நனோ மீற்றர்கள் விட்டம் கொண்ட திரவத்துளிகள் போன்ற வடிவில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



## கார்பனின் அளவை கணிப்பிட செயற்கைக்கோள்கள் உருவாக்கம்


வளிமண்டலத்தில் அதிகரிக்கும் கார்பன், காபனீரொட்சைட்டுக்களினால் வளிமண்டலம் விரைவாக மாசடைந்து வருகின்றமை அறிந்ததே.


இதனை தடுப்பதற்கான ஆய்வில் பல்வேறு நாடுகள் ஈடுபட்டு வருகின்ற அதேவேளை சீனாவும் இவ்வருட ஆரம்பத்தில் ஆய்வின் அடிப்படையில் அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்தது.

இதன்படி வளிமண்டலத்தில் ஒரு பில்லியன் தொன்கள் நிறைகொண்ட காபனீரொட்சைட் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாக வளிமண்டலத்திலுள்ள காபனீரொட்சைட்டின் அளவை கண்காணிக்க இரு செயற்கைக்கோள்களினை விண்ணில் ஏவ சீனா முயற்சித்துவருகின்றது.

அடுத்த வருடம் இத்திட்டத்தினை நிறைவேற்ற எண்ணியுள்ளதுடன், இதன் மூலம் பூமியிலிருந்து வெளியேற்றப்படும் கார்பன் அல்லது காபனீரொட்சைட்டின் அளவினை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.






## youtubeக்கு போட்டியாக vimeo

முன்னணி வீடியோ பகிரும் தளங்களில் ஒன்றாக விளங்கும் Vimeo ஆனது யூடியூப்-தளத்திற்கு போட்டியாக புதிய வசதி ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது.
அதாவது 4K எனப்படும் அதி துல்லியம் வாய்ந்த வீடியோக்களை பார்த்து மகிழும் வசதியினை முதன்முறையாக யூடியூப் அறிமுகம் செய்திருந்தது. அதனைத் தொடர்ந்து தற்போது Vimeo இவ் வசதியினை அறிமுகம் செய்துள்ளது,
இத் தொழிநுட்பம் சில வகை தொலைக்காட்சிகளிலும் காணப்படுவதுடன், ஸ்மார்ட் தொலைக்காட்சிகள் ஊடாக யூடியூப், Vimeo ஆகியவற்றினைப் பயன்படுத்துபவர்களும் இவ் வசதியினைப் பெறமுடியும்.

எனினும் அப்பிள் தொலைக்காட்சிக்கான அப்பிளிக்கேஷனை விரைவில் வெளியிடவுள்ள Vimeo நிறுவனம் iPhone 6 மற்றும் அதற்கு பின்னர் அறிமுகம் செய்யப்பட்ட கைப்பேசிகளில் 4K வீடியோக்களை எடிட் செய்யக்கூடிய வசதியினை ஏற்கணவே வழங்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.


## புதிய வடிவமைப்பில் Yahoo Messenger



பேஸ்புக் மெசஞ்சர் அப்பிளிக்கேஷனைப் போன்று குறுஞ்செய்திகள், படங்கள் என்பவற்றினை நண்பர்களுடன் பரிமாற்றிக் கொள்ளக்கூடிய அப்பிளிக்கே-ஷனை யாகூ நிறுவனம் ஏற்கனவே அறிமுகம் செய்திருந்தது.
ஆனால் குறித்த அப்பிளிக்கேஷன் பாவனையில் பின்னடைவை சந்தித்து வந்ததை தொடர்ந்து சில புதிய அம்சங்களை உள்ளடக்கியதாகவும், இடைமுகத்தில் மாற்றத்தினை மேற்கொண்டும் புதிதாக அறிமுகம் செய்துள்ளது.

இந்த வாரம் வெளியிடப்பட்ட Yahoo Messenger அப்பிளிக்கேஷன் ஆனது விரைவாக-செயற்படக்கூடியதாகவும், கவர்ச்சியான பயனர் இடைமுகத்தினைக் கொண்டாகவும் இருக்கின்றது.
இதில் iMessage எனப்படும் உயர் பிரிதிறன்கொண்ட புகைப்படங்களை பரிமாறிக்கொள்ளும் வதியும் தரப்பட்டுள்ளதாக இந்த அப்பிளிக்கேஷனை உருவாக்குவதில் பங்குபற்றிய மூத்த இயக்குனரான Austin Shoemaker என்பவர் தெரிவித்துள்ளார்.

## iPhone 8



ஸ்மார்ட் கைப்பேசியினை-அறிமுகம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியானது.
மேலும் அதில் OLED தொழில்நுட்பத்தினைக்-கொண்ட தொடுதிரை பயன்படுத்தப்படவுள்ளதா-கவும் தகவல் வெளியானது.

இந்நிலையில் iPhone 8 கைப்பேசியினை-வடிவமைக்கும் போது அதற்கான OLED திரைகளை வடிவமைப்பதற்கு Japan Display Inc (JDI) நிறுவனத்தை அப்பிள் நிறுவனம் அணுகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொடுதிரைகள் JDI நிறுவனத்தினால் 2017 ஆம் ஆண்டு அப்பிள் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும் எனவும், 2018 ஆம் ஆண்டு iPhone 8 கைப்பேசி அறிமுகம் செய்யப்படும் எனவும் அத்தகவல் மேலும் தெரிவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# யார் பிச்சைக்காரன்!!

ர. மனோஜ்குமார்



பகல் நேரம், கண்களுக்கு நேராக டார்ச்லைட் அடித்தாற் போல் அவ்வளவு வெயில். சாலையில் குழந்தை தன் கையில் உள்ள ஐஸ்கிரீம் உருகுவதற்கு முன் அதை உண்ண வேகமாய் முயற்சி செய்து கொண்டிருந்தாள்.

அருகில் இருந்த ஓட்டலில் அவர்களது பணிகள் மும்முரமாய் நடைபெற்று கொண்டிருந்தது. சுற்றுலா பூங்கா பிசியான சாலை ஆகியவற்றிற்கு அருகே அமைந்ததால் அந்த ஓட்டலில் எப்பொழுதும் மக்கள் கூட்டம் இருந்து கொண்டே தான் இருக்கும். பூங்காவின் உள்ளே சிறுவர்கள் விளையாடி கொண்டிருக்க வெளியில் இளைஞர்கள் குமரிகளை நோட்டமிட்டு கொண்டிருந்தனர்.

இந்த சூழலில் அந்த சாலையில் கையில் தடியுடனும், முகத்தில் தாடியுடனும் வளைந்த முதுகுடனும் கிழிந்த ஆடையுடனும், கையில் ஒரு பாத்திரத்தை ஏந்தி கொண்டு ஓர் பெரியவர் அவ்வழியே நடந்து கொண்டிருந்தார். அவரது வயிர் புலி போல் உறுமியது. மிகுந்த பசி. அவர் நடந்துகொண்டிருக்க ஐஸ்கிரீம் சாப்பிட்டு கொண்டிருந்த குழந்தையை பார்த்தார். அக்குழந்தை ஐஸ்கிரீம் குச்சிகளை தன் வாயில் செலுத்தி அதை சிறிது கீழே சிந்தியது. இதை பார்த்த பெரியவர் எச்சிலை முழுங்க அக்குழந்தை அவரை பார்த்து சிரித்தது. இப்பெரியவரும் மெல்லிய சிரிப்பை பதிலாக கொடுத்தார்.

இதற்கிடையில், "திவ்யா! என்ன பண்ணிட்டிருக்க?" என்று அவளது அப்பா கேட்க "அப்பா! அவரு நம்ம தாத்தா மாதிரி இருக்காரப்பா!" என்று அவள் கூறினாள்." அவனை பார்க்காதே! அவன் பிச்சைகாரன்" என்றார். "அப்பா எனக்கு ஒரு புது நோட்டு வாங்கி கொடுப்பா" என்று அக்குழந்தை கேட்க அதெல்லாம் இப்ப வாங்கி தரமுடியாது என்றார் அவர் அப்பா. அவர்கள் காரில் ஏறி சென்றனர்.

மெதுவாக அப்பெரியவர் சாலையை நோக்கி நடந்தார். அங்கு ஒருவன் "டார்லிங் நான் கார் ஷோரூம் வெளியே நிற்கிறேன். ஒரு லச்சத்துக்கு வண்டி எடுக்கவா இல்ல ரெண்டு லச்சத்துக்கு எடுக்கவா" என்று பேசி கொண்டிருந்தார். அப்பொழுது இப்பெரியவர் தன் கையில் உள்ள பாத்திரத்தை நீட்டினார்." காசு இல்ல போ" என்று அவன் சொல்ல பெரியவர் மெல்லிய புன்னகையுடன் அவ்விடம் விட்டு சென்றார். மாதம் ஆயிரக் கணக்கில் சம்பாதிக்கும் ஒரு காவல் அதிகாரி நூறு ருபாய்க்காக ஒரு வாகனத்தை நிறுத்திக்கொண்டிருக்க அப்பெரியவர் சாலையை கடந்து சென்றார். அவருக்கு பசி மிகுதியாய் இருந்தது.

அங்கு ஓர் காய்கறி கடை இருந்தது. அங்கு செல்வந்தன் ஒருவன் காரில் இறங்கி காய்கறி வாங்கிக்கொண்டிருந்தான். "என்னப்பா 150 ரூபாய் சொல்ற கொஞ்சம் கம்மிப்பண்ணிக்கோ 140க்கு போடு" என்று பத்து ரூபாய்க்காக பேரம் பேசி கொண்டிருந்தான் பல லட்சம் மதிப்புள்ள காரை வைத்திருந்த அச்செல்வந்தன். இதை பார்த்துக்கொண்டே பெரியவர் அவர்களை கடந்து ஓட்டலுக்கு சென்றார்.

அங்கு ஓட்டல் முதலாளி, "இன்னைக்கு எவ்வளோ கலக்சன்" என்று கேட்க"நிறைய தேறும்"என்றான் வேலை செய்பவன். இப்பெரியவர் "ஐயா!தர்மம் பண்ணுங்க!" என்று கேட்டார்." தொழில் நடத்துற இடத்துல இவன் வேற அடிச்சு துரதுங்கடா இவன" என்று சொல்ல வேலையாள் ஒருவன் போ! போ! என்று சொல்லி கொண்டே வந்தான். பெரியவர்க்கு பசி மயக்கம் வந்தது.

கடவுள் யாரையும் கைவிடமாட்டார் என்பது இப்பெரியவருக்கு நிஜம் ஆயிற்று. நீர்நிரம்பிய கண்களில் சற்று தெளிவு ஏற்பட்டது. மெல்ல நகர்ந்த கால்கள் கோவில் வெளியே பிரசாதம் தந்துகொண்டிருந்த கரம் நோக்கி வேகமாய் சென்றது. ஒரு கப் அவர் கையில் விழுந்ததும் அந்நியர்களிடம் இருந்து மக்கள் விடுதலை பெற்றது போல் பசியில் இருந்து விடுதலை பெற்று விடலாம் என்று எண்ணி மகிழ்ச்சி அடைந்தார்.

பூங்காவின் வெளியே இருந்த மேஜையில் அமர்ந்து ஒரு கை எடுத்து தன் வாயில் போட்டுகொண்டார்.அது அவரது நாக்கில் பட்டு உணவு குழாய் வழியாய் வயிற்றிற்கு செல்வது அவரால் உணர முடிந்தது. அவர் மீண்டும் ஒரு கை எடுக்க அருகில் யாரோ சிணுங்குவது போல் அவர் உணர்ந்தார்.அருகில் நாய் ஒன்று நீர்நிரம்பிய கண்களுடன் அவரை பரிதாபமாய் பார்த்தது.

அது பசியால் இருந்ததை உணர்ந்த பிச்சைக்காரன் தன் கையில் இருந்த பிரசாதத்தை அந்த நாய்க்கு தந்தார். அது மெல்ல உண்ண பெரியவர் புன்னகைத்துக்கொண்டே கையில் பாத்திரத்தையும், குச்சியையும் எடுத்து கொண்டு மெதுவாய் நடந்தார். நாயின் கண்களில் அவர் கடவுளாய் தெரிந்தார். உடனே அவரை பின்னோக்கி சென்றது!!!!!

சாதாரமானவனின் மனது

# கலைகள் கற்பிக்கப்படுகின்றனவா? விற்கப்படுகின்றனவா?

சஞ்சயன் செல்வமாணிக்கம்

"இந்தாளால தான் நான் தமிழ் படிப்பதை நிறுத்தினேன்" என்றும், இவரால்தான் நடனம்மீது எனக்கிருந்த ஆசை இல்லாதுபோனது, இவரிடம் படிக்கமுடியாது, இவருக்கு கதைக்கத்தெரியாது, ஏனோ தானோ என்று படிப்பிப்பார், இப்படி எத்தனையோ கதைகளை நாம் கேட்பதுண்டு. இவற்றில் உண்மையில்லை என்று நாம் யதார்த்தத்தை மறந்துவிடலாகாது.

மாணவர்களின் பல தோல்விகளுக்கு ஆசிரியர்களே காரணகர்த்தாவாக இருந்திருக்கிறார்கள், இருக்கிறார்கள். ஆசிரியர்களின் கற்பிக்கும்முறை அவர் கற்றுக்கொண்ட காலத்தில் இருந்ததை விட, பல மடங்கு மாறியிருக்கிறது. தவிர பயிலும் மாணவர்களும், அவர்கள் பிறந்து வளர்ந்த நாடும், சூழலும்கூட மாறியிருக்கிறது. இவற்றை கவனத்தில் எடுத்து கற்பிப்பவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

தான் கற்றதையே தனது மாணவர்களுக்கு அப்படியே மாற்றமின்றி ஒப்புவிப்பதை கற்பித்தல் என்பது மகா தவறு. இதை கிளிப்பிள்ளையும் செய்யுமே. தனது மாணவர்களின் நிலையறிந்து, குறிப்பறிந்து, ஆர்வமூட்டி, உரையாடி, வழிகாட்டி, ஊக்குவித்து, மாணவனின் சிந்தனையைத் தூண்டி கற்பிக்கும் ஆசிரியனே உண்மையான ஆசிரியராகிறார். இப்படியான எண்ணங்களுடன் ஆசிரியர் கிடைப்பது அரிது. அப்படிக் கிடைத்தால் அது மாணவனின் அதிஸ்டம். கலையின் பேரதிஸ்டம்.



வெளிநாடுகளில் கலைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களில் எத்தனைபேர் மேற்கூறியவாறு கலைமீதான ஈடுபாட்டுடன் கற்பிக்கிறார்கள்? அப்படியானவர்கள் இல்லை என்று கூறமுடியாது. இருக்கிறார்கள். அவர்களைத் தேடிக்கண்டுபிடித்து குழந்தைகளை ஒப்படைப்பதில் பெற்றோரின் பங்கு அதிமுக்கிய இடத்தைப்பெறுகிறது.

கலை வியாபாரமாகிவிடும்போது போலியான விளம்பரங்களும், பகட்டும், தற்பெருமைகளும், சக கலைஞர்களையே ஒதுக்கும் குறுஞ்சிந்தனைகள் போன்றவையும் வெளிப்படையாகவே நடைபெற ஆரம்பிக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

ஒரு ஆசிரியரிடம் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து நாம் ஆசிரியரின் தரத்தை எடைபோடுவதில் ஏற்பில்லை எனக்கு. எனது பார்வையில் கலையைக் கற்பிக்கும் ஆசிரியர் என்பவரை நாம் அவரின் படைப்புக்கள், படைப்புக்களின் தரம், நுணுக்கங்கள், கலைபற்றிய அவரது அறிவு, கலை மீதுள்ள பிரக்ஞை, கற்பித்தல் மீதுள்ள ஈர்ப்பு, கற்பிக்கும்விதம், உரையாடும் விதம், சுயவிமசனத்தன்மை, உண்மைத்தன்மை, தொடர்ச்சியான தேடல் என்று பலவிதமான கோணங்களில் இருந்து அறியலாம்.

பல ஆசிரியர்களுக்கு மாணவர்களுடன் மனம்விட்டு உரையாடுவதற்கு நேரம் போதாதிருக்கிறது. கும்பலில் ஒருவராய் மாணவன் கற்பிக்கப்படுதே வழமையாக இருக்கிறது. மாணவனுக்கும் ஆசிரியருடன் உரையாடும் தேவையிருக்கும், ஆசிரியருக்கும் அத்தேவை மாணவனைவிட பல மடங்கு அதிகமாக இருக்கவேண்டும். அப்போதுதான் குரு, சிஸ்யன் என்ற ஆத்மார்த்தமான உணர்வு உருவெடுக்க ஆரம்பிக்கிறது. உரையாடல் என்பது கற்றலின் முக்கிய செயற்பாடு.

உரையாடல் என்பது மிகப்பெரிய கலை. உரையாடலே ஒருவர் மீது இன்னொருவருக்கு நம்பிக்கை, பிடிப்பு, ஆர்வம் போன்றவற்றை ஏற்படுத்துகிறது. இதன் மூலமாகவே நாம் கற்றலுக்கும், தேடலுக்குமான விடைகளைப் பெற்றுக்கொள்கிறோம். இந்த உரையாடல் நிலைக்கு எத்தனை புலம்பெயர் குருக்களும் சிஸ்யர்களும் சென்றிருக்கிறார்கள்?

எனது பாடசாலைக்காலங்களில் என்னுடன் உரையாடி, கண்டித்து, அணைத்து, வழிகாட்டி அறிவுரைகூறிய எனது ஆசிரியர்களே எனக்குள் இன்றும் பெருவிருட்சமாய் இருக்கிறார்கள். எனக்குக் கற்பித்த பல ஆசிரியர்கள் என் நினைவுகளில் இல்லவே இல்லை. காரணம் அவர்கள் கற்பித்தல் என்னும் கலையை கற்றிருக்கவில்லை.

கற்பித்தலை ஒரு கலையாகவே பார்க்கும் ஆசிரியர்கள் மிக மிகக் குறைவு. கற்றுத் தேர்ந்தபின்பும் தொடர்ச்சியாக தங்களை கலைப்புலமையை புதுப்பித்துக்கொள்ளும், கலையின்பால் தேடலையும் உடைய ஆசிரியர்கள் மிகச் சிலரே. அரங்கேற்றமானது தனது கலைவாழ்வின் உச்சம் என்னும் சிந்தனை எத்தனை பரிதாபமானது என்பதனை பல ஆசிரியர்கள் இன்னும் புரிந்துகொள்ளவில்லை.

அரங்கு ஏறுதல், என்னும் அந்நிகழ்வானது கலைவாழ்வின் ஆரம்பம் என்பதை பலர் மறந்துவிடுகிறார்கள்.

குழந்தைகளை கலைகளை கற்றுதேர்ச்சியடையாமைக்கு, எவ்வித சுயவிமர்சனமும் இன்றி வாராந்தம் ஏற்றி இறக்கும் பெற்றோர்களும் ஒரு காரணம். உங்கள் குழந்தைகள் கற்பிக்கப்படும் விதத்தை, குழந்தையின் மனநிலைகளை, கொடுக்கப்படும் பயிற்சிகளை இப்படி பல விடயங்களில் பெற்றோரின் அசமந்தப்போக்கும் குழந்தைகளின் கலைமீதான ஆர்வத்தை மழுங்கடிக்கின்றன.

ஒரு விடயத்தை பொதுத்தளத்தில் உரையாடும்போது உரையாடும் நபர்கள் எதிராளிகளாகமாறி வாதம்புரிவதை காணக்கூடியதாக இருக்கிறது. வாதத்திற்கும் உரையாடலுக்கும் இடையில் மிகப்பெரிய வித்தியாசம் உண்டு. போரும் சமாதானமும் போன்றதானது அது. உரையாடல் புரிந்துணர்வை அடிப்படையாகக் கொண்டது. வாதம் தன் கருத்தே சரி என்னும் ஒருவித சர்வதிகாரப் போக்கினையுடையது.

சுயவிமர்சனம், தன்னடக்கம் என்பன ஒரு கலைஞனை உயர்த்தும் ஏணிப்படிகள். ஆனால் துரதிஸ்டவசமாக சுயவிளம்பரம் என்னும் மாயைக்குள் பல கலைஞர்கள் சிக்கிவிடுகிறார்கள். பல ஆசிரியர்களிடம் கலையை கற்பிக்கவேண்டும், வளர்க்கவேண்டும் என்னும் சிந்தனையைவிட, கலையை பணமாக்கிக்கொள்வதில் அவர்கள் பலத்த ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதே உண்மை. இப்படிப்பட்டவர்களது படைப்புக்களில் பாரிய மாற்றங்களோ, புரட்சிகரமான சிந்தனைகளோ இருக்கமாட்டாது. அரைத்த மாவையே அரைத்துக்கொண்டிருப்பார்கள். இப்படியானவர்களே பெருங்கலைஞர்களாக உலாவருகிறார்கள் என்பதே முறண்நகை.

சிறந்த கலைஞர்கள் சக கலைஞர்களுடன் சுமூகமாக உரையாட, கருத்துப்பகிரக் கூடியவர்களாக இருப்பார்கள். விமர்சிப்பவர்களை நண்பர்களாக ஏற்கும் வளர்ந்த மனநிலையும், கலை, சமுகம் பற்றிய பிரக்ஞையும் இருக்கும். இவர்களின படைப்புக்கள் உயர்ந்த் தரமுடையவையாக இருக்கும். பல வித்தியாசமான கற்பனைகளில், தலைப்புக்களில், மரபுசார்ந்து, புதிய சிந்தனைகளைக் கலந்து இவர்களது நிகழ்வுகள் அமையும். பெற்றோரின் விருப்பத்திற்காகவோ, ஆசிரியரின் கட்டாயத்திற்காகவோ போலியான பெருமைகளுக்காகவோ அன்றி, கலைமீதுள்ள பற்றின் காரணமாக கலையைக் கற்றுக்கொண்டு, தொடர்ச்சியான தேடலுடன் உள்ள ஒரு சிஸ்யனை ஒரு ஆசிரியர் உருவாக்குவார் எனின் அவரே சிறந்த ஆசிரியன் என்பேன் நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமையல் சமையல்

## இறால் பிரியாணி

**தேவையான பொருட்கள்**

பச்சரிசி - அரை கிலோ, இறால் - கால் கிலோ, வெங்காயம் - கால் கிலோ, தக்காளி - மூன்று, பச்சைமிளகாய் - நான்கு, பூண்டு - பத்து பல், இஞ்சி - 2 அங்குல துண்டுகள், மிளகாய்தூள் - 3 தேக்கரண்டி, மஞ்சள் தூள் - ½ தேக்கரண்டி, எண்ணெய் - 1 குழி கரண்டி, நெய் - 2 மேசை கரண்டி, கறிவேப்பிலை - 1 கொத்து, கொத்தமல்லி - 1 பிடி, புதினா - 1 பிடி, உப்புதூள் - 2 தேக்கரண்டி, பட்டை - 2 துண்டுகள்



**செய்முறை**


முதலில் பச்சரிசியை ஒட்டாதவாறு வடித்து கொள்ளவும். இறாலை நன்கு சுத்தம் செய்துக்கொள்ளவும். ஒரு அகலமான பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணெய்யை ஊற்றவும், காய்ந்ததும் வெங்காயம் தக்காளி, பச்சைமிளகாய், ஆகியவற்றை நீளவாக்கில் நறுக்கிப் போடவும். பிறகு பட்டை, கறிவேப்பிலை, இறாலை போட்டு நன்கு வதக்கவும். பொன். நிறமாக வதங்கியதும் தட்டி வைத்துள்ள இஞ்சி பூண்டு, மிளகாய்தூள், மஞ்சதூள், உப்புதூள் போட்டு நன்கு கிளறவும். பின் அரை கோப்பை தண்ணிர் ஊற்றி வேகவைக்கவும். மசாலா தொக்கு போல் ஆன உடன் கொத்தமல்லி, புதினாவை போட்டு கிளறவும். பிறகு வடித்து வைத்துள்ள சோற்றை கொட்டி, நெய்யை ஊற்றி நன்றாக கிளறிவிட்டு இறக்கி வைக்கவும். சுவையான இறால் பிரியாணி தயார்.

## கண்புரை எப்போது ஏற்படுகிறது?



கண் புரை நோய் எனப்படுவது, கண்களில் உள்ள திரை அல்லது லென்ஸ், ஒளி அனுப்பும் தன்மையை இழப்பதால் கண்பார்வை குறைவதேயாகும். இந்த நோய் பெரும்பாலும் முதுமையின் தொடக்கத்தில் இருந்து ஏற்படலாம்.

**காரணங்கள் என்ன?**




கண் புரை நோய் முதுமையில் ஏற்படும் என்றாலும், மேலும் சில கண் புரை தொடர்பான நோய்கள் இருப்பதாக மருத்துவம் கூறுகிறது.

அதில், இரண்டாம் நிலை கண் புரை நோய் என்பது, நமது உடலில் ஏற்படும் வேறுபல நோய்கள் காரணமாக கண்கள் பாதிக்கப்பட்டு கண் புரை நோய் ஏற்படலாம்.

அடுத்த வகை, சில குழந்தைகள் பிறக்கும் போதே அவர்களின் லென்ஸ் பாதிக்கப்பட்டு அதனால் பார்வை குறைபாட்டுடன் பிறக்கலாம்.

ஆனால் இந்த வகை கண் புரையை, அந்த லென்ஸ் நீக்குவதன் மூலம் குணப்படுத்த முடியும்.

4வது வகை, கதிர்வீச்சு காரணமாக கண்கள் பாதிக்கப்பட்டு, அதனால் கண் புரை நோய் ஏற்படலாம்.

மேலும், நீரிழிவு நோய் காரணமாகவும், மது மற்றும் புகைப்பிடித்தல் காரணமாகவும், சுற்றுச்சூழல் காரணமாக அதிகரிக்கும் வெப்பத்தினாலும் கண் புரை நோய் ஏற்படலாம்.

தொடரும்.. ..

## டிசைன்ஸ்



## அழகு குறிப்பு

### பொடுகு தொல்லையிலிருந்து விடுபட



பொதுவாகவே பெண்கள், ஆண்கள் என பொடுகு பிரச்னைகளில் அவதிப்படுபவர்கள் ஏராளம்.

இதனால் தலைமுடி அதிகம் உதிரும், இதற்கு தலையில் ஈரப்பசை இல்லாததே காரணம்.

☞ ஒரு கரண்டி கற்பூரவள்ளி எண்ணெயுடன் 5 கரண்டி தேங்காய் எண்ணெயை சேர்த்து தலையில் தடவி 5-10 நிமிடங்கள் மசாஜ் செய்ய வேண்டும், பிறகு ஷாம்பூ அல்லது சிகைக்காய் கொண்டு குளித்தால் பொடுகு நீங்கும்.

☞ இரண்டு கரண்டி எலுமிச்சை சாறுடன், இரண்டு கரண்டி தேங்காய் எண்ணெய் சேர்த்து தலையில் தடவி 20 நிமிடங்கள் ஊறவைக்க வேண்டும். பின்னர் குளிர்ந்த நீரில் கூந்தலை அலச வேண்டும்.

☞ தினமும் இரவில் தேங்காய் எண்ணெயில் கற்பூரத்தை போட்டு ஊறவைத்து, அதனை தேய்த்து வந்தாலும் பொடுகு நீங்கும்.



☞ தேங்காய் எண்ணெய், ஆலிவ் ஆயில் மற்றும் தயிர் மூன்றையும் சரிசம அளவில் கலந்து கொண்டு கூந்தலில் தேய்த்து மசாஜ் செய்து, பின்னர் குளிர்ந்த நீரில் அலசவும்.

---

### குளிர் காலத்தில் கவனியுங்கள்

- கல்கண்டை பொடியாக்கவும். கொஞ்சம் சமையல் எண்ணெய் எடுத்து, அதில் கல்கண்டு பொடி, 1 துளி பெர்கமாட் ஆயில், 2 துளி ஓலிவ் ஆயில் கலந்து, கைகள் மேல மென்மையா தேய்ச்சு, மசாஜ் பண்ணி, 10 நிமிடம் கழித்து கழுவினா, குழந்தையோட சருமம் மாதிரி உங்க கைகள் மிருதுவா மாறியிருக்கும்.
- பனிக்காலத்தில் உதடுகள் வறண்டு வெடிக்கும். அடிக்கடி எச்சிலால் ஈரப்படுத்திட்டே இருப்போம். அது உதடுகளை இன்னும் வறண்டு போக வச்சு, கருப்பாக்கும். எப்போதும் கையில் லிப் பாம் வைத்திருந்து உதட்டுக்கு பூசுவது நல்லது. பீட்ரூட் சாறில், 1 தே.கரண்டி தேன், 10 துளி லெமன் ஆயில், 5 துளி ரோஸ் ஆயில் கலந்து, பஞ்சில் தொட்டு உதடுகளில் தடவினால், கருமையும் மறையும். வறட்சியும் நீங்கும்.
- இக்குளிர் காலத்தில் தாகமே எடுக்காது. தண்ணீரே குடிக்க மாட்டோம். ஆனால், அது ரொம்பத் தப்பு. தாகம் எடுக்காவிட்டாலும், அடிக்கடி தண்ணீர் குடிக்கணும். குளிரின் தாக்கத்தில் முடி உதிரும், பொடுகு அதிகமாகும். கண் மற்றும் பாத எரிச்சல் வரும். மலச்சிக்கல் இருக்கும். வியர்வையே இல்லாததால, சருமத் துவாரங்கள் சுருங்கி, பொலிவிழக்கும்.






## இப்படியும் நடக்கலாம்

### பாவிக்காத உணவுப்பொருட்களை இலவசமாக வழங்க வேண்டும்

நாடு முழுவதும் உள்ள பலசரக்கு கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகளில் விற்பனை ஆகாத மற்றும் விற்பனை காலம் முடிந்த உணவு பொருட்களை உபயோகம் இல்லாமல் வீதிகளில் வீசி வருவது அதிகரித்து வருகிறது. இதை தடுப்பதற்காக ஒவ்வொரு பலசரக்கு கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகளில் விற்பனை ஆகாத மற்றும் விற்பனை காலம் முடிந்துள்ள உணவு பொருட்களை வீணாக குப்பை தொட்டிகளில் வீசுவதற்கு பதிலாக ஏழை, எளிய மக்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும் என அரசு வலியுறுத்தியுள்ளது.

### தொழிநுட்பத்தினால் நாய்க்குட்டிகள் உருவாக்கம்

உலகிலேயே முதன் முறையாக அமெரிக்காவில் சோதனைக் குழாய் முறையில் நாய்க்குட்டிகள் பிறந்துள்ளன.

அமெரிக்காவின் கார்னெல் பல்கலைகழக கால்நடை மருத்துவ துறையை சேர்ந்த விஞ்ஞானிகள் இணைந்து சோதனைக் குழாய் முறையில் இவற்றை உருவாக்கியுள்ளனர். கடந்த ஜூலை மாதம் பிறந்த இந்த நாய்க் குட்டிகள் ஏழும் வெவ்வேறு இனம் மற்றும் கலப்பின வகையை சேர்ந்ததாகும்.

இதன் மூலம் அரிய வகை நாய்களை பாதுகாப்பதற்கும், மனிதர்கள் மற்றும் விலங்கினங்களின் நோய்களுக்கு சிகிச்சை அளிக்கவும் முடியும் என விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நாய்களை உருவாக்கியிருப்பதே அமெரிக்க விஞ்ஞானிகளின் சாதனை என Public Library Of Science One என்ற இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



### பொய்யான குற்றத்திற்காக தண்டனை

கனடாவின் வான்கூவர் மாகாணத்தில் வசித்து வந்த இவான் ஹென்றி (தற்போதைய வயது 69) என்பவர் மீது 8 பெண்களை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியதாக கடந்த 1983ம் ஆண்டு குற்றம் சாட்டப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு அவருக்கு 27 வருடங்கள் சிறை தண்டனை விதித்து அப்போதைய நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளனர்.

எனினும், தான் குற்றவாளி அல்ல என்ற கோரிக்கையுடன் அவர் மேல் முறையீடு செய்துள்ளார். இந்நிலையில், கடந்த 2010ம் ஆண்டு ஹென்றி குற்றமற்றவர் எனக்கூறி பிரித்தானிய கொலம்பியா நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது. சிறையில் இருந்து வெளியே வந்த ஹென்றி, தன் மீதான பொய்யான குற்றத்திற்காக 43 மில்லியன் டொலர் இழப்பீடு பெறும் முயற்சியில் ஈடுப்பட்டு தற்போது வழக்கும் தொடர்ந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆண் பெண் ஜனாஸாக்களுக்கு, ஒரே நேரத்தில் தொழுகை நடத்தலாமா?



தொழுகை நடத்தும் போது முதலில் கிப்லாவை நோக்கி பெண் மையத்தையும் அதற்கடுத்து (சிறுவர்களின் ஜனாஸாக்கள் இருந்தால் அவர்களது மையத்துக்களையும்) அதற்கடுத்து ஆண் மையத்தையும் வைக்க வேண்டும். அதற்கடுத்து தொழுகை நடத்தக்கூடிய இமாமும், இமாமுக்கு அடுத்து தொழக் கூடியவர்களும் (ம.'மூம்களும்) நிற்க வேண்டும்.

இப்னு உமர் (ரலி) அவர்கள் ஒன்பது ஜனாஸாக்களக்கும் சேர்த்து ஒரே (ஒரு முறை) தொழுகையாக தொழுவித்தார்கள். (அதில் ஆண், பெண் ஜனாஸாக்கள் இருந்தன). கிப்லாவை நோக்கி பெண் ஜனாஸாக்களையும் அதற்கடுத்து ஆண் ஜனாஸாக்களையும் அதன் பின் இமாமை அடுத்து மக்களையும் ஒரே அணியாக வைத்து (தொழுவித்தார்)கள்.

இன்னுமொரு ஜனாஸா தொழுகையின் போது) அலி (ரலி) அவர்களின் மகளும், உமர் (ரலி) அவர்களுடைய மனைவியுமான உம்மு குல்ஸும் (ரலி) அவர்களுடைய ஜனாஸாவும் ஸைத் என்று அழைக்கப்படும் அவரது மகனுடைய ஜனாஸாவையும் சேர்த்து வைக்கப்பட்டன. அன்றைய தினத்தில் ஜனாஸா தொழுகையை நடத்தும் இமாமாக ஸயீத் பின் அல் ஆஸ் என்பவர் இருந்தார். இப்னு உமர் (ரலி) அபூ ஹுரைரா (ரலி) அபூ ஸயீத் (ரலி) அபூ கதாதா (ரலி) ஆகியோர் அக்கூட்டத்தில் (ஜனாஸா தொழுகையில்) இருந்தனர்.

(தொழுகை நடத்துவதற்கு) இமாமுக்கு முன்னால் சிறுவரின் ஜனாஸாவும் அதற்கு முன்னால் (கிப்லாவை நோக்கி) அவரது தயாரின் ஜனாஸாவும்) வைக்கப்பட்டன. இது எனக்கு வெறுப்பாக தோன்றியது. உடனே நான் இப்னு உமர் (ரலி) அபூஹுரைரா (ரலி) அபூ ஸயீத் (ரலி) அபூ கதாதா (ரலி) ஆகியோரை நோக்கி இது என்ன முறை? (ஏன் இப்படி தொழுகை நடத்த வேண்டும்) என்று கேட்டேன். அதற்கு அவர்கள் இதுதான் நபிவழி என பதிலளித்தார்கள். (அறிவிப்பவர்: நாபி.', (ரஹ்) நூல்: நஸா

முற்றும் .. ..

– எம்.ஜே.எம். நிஷ்வான் –

## ஜெபம்



புனிதர்கள் கடவுள் அல்ல. புனிதர்களுக்கு, அன்னை கன்னிமரியாள் உட்பட அனைவருக்கும் நாம் வணக்கம் மட்டுமே செலுத்துகிறோம். புனிதர்கள் இந்த உலகில் வாழ்ந்தபோது இறைவனுக்கு ஏற்புடைய வாழ்கை வாழ்ந்து மரித்தவர்கள்(உம் - அன்னை தெரசா). புனிதர்கள் இறைவனோடு விண்ணகத்தில் இருப்பதால் புனிதர்களிடம் நாம் நமக்காக இறைவனிடம் பரிந்துபேச அழைப்பு விடுவிக்கின்றோம்.

***கடவுளாகிய இயேசு ஏன் ஜெபம் செய்தார்?***

இயேசு கடவுளும் மனிதனுமானவர். இந்த உலகில் இயேசு முழு மனிதனாக அவதரித்தார். அவர் கடவுளாயிருந்தாலும் இந்த உலகின் மனிதரைப் போல் மனிதராக வாழ்ந்தார். அவர் இறை தந்தையைச் சார்ந்து வாழ்ந்தார். எல்லாவற்றிலும் இறை தந்தையின் சித்தத்தையே நிறைவேற்றுகின்றார். இறை தந்தையை முழுமையாக அன்பு செய்து அவரில் வாழ்வதே வாழ்வாகக் கொண்டிருந்தார். ஆகவே அவரோடு உரையாடுவதில் அதிக நேரத்தை கழிக்கின்றதை நாம் நற்செய்திகளில் காண்கின்றோம்.

அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில், தம்மைச் சாவிலிருந்து காப்பாற்ற வல்லவரை நோக்கி உரத்த குரல் எழுப்பி, கண்ணீர் சிந்தி, மன்றாடி வேண்டினார். அவர் கொண்டிருந்த இறைப்பற்று கலந்த அச்சத்தை முன்னிட்டு, கடவுள் அவருக்குச் செவி சாய்த்தார்.

அவர் இறைமகனாயிருந்தும், துன்பங்கள் வழியே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். எபிரே 5:7-8

***கடவுள் நம் தேவைகளையும் அறிந்திருப்பவர். பின்னர் நாம் ஏன் நம் தேவைகளுக்காக ஜெபிக்க வேண்டும்? ஏன் மீண்டும் மீண்டும் ஜெபிக்கவேண்டும்?***

நாம் ஜெபம் செய்யும் போது தாழ்ச்சியான உள்ளத்தையும் கடவுள் முன் நம்முடைய இயலாமையையும் வெளிப்படுத்துகிறோம்.

www.bible.me

தொடரும் ...

## கூலாக வாழ்க்கை செல்வதற்கு என்ன வழி??

சச்சரவுகள், சமாதானங்கள் நிறைந்ததே வாழ்க்கையாகும். ஒருவர் சண்டையிட்டால் மற்றவர் சமாதானப்படுத்த வேண்டும். இருவரும் ஒரே குணங்களை கொண்டு வாழ்க்கையை நடத்தினால் அதில் ஒரு சுவாரசியமும் இருக்காது. பொதுவாக, பொறுமையாக இருக்கும் பெண்கள் என்றால் ஆண்களுக்கு பிடிக்கும், அதே போன்று பெண்களும், தங்களது குணத்திற்கும், பண்பிற்கும் எதிர்மறையாக இருக்கும் ஆண்களை தான் விரும்புவார்கள். இவ்வாறு வெவ்வேறு ரசனைகள் ஒன்றாக இணைந்தால் தான், வாழ்வு ஒளிமயமாகும் என்பதை தெரிந்துகொள்ளுங்கள்.

எந்த ஒரு எதிர்பார்ப்பும் இன்றி நமது இன்ப துன்பங்களில் பங்கெடுத்துக் கொள்ளும் ஓர் நபர் தான் நமது வாழ்க்கைத் துணையாக இருக்க முடியும். அந்த வகையில், எவ்வித பிரச்சனைகளையும் கூலாக எடுத்துக்கொள்ளும் ஆண்களைத்தான் பெண்கள் அதிகமாக விரும்புவார்கள்.

பெண்கள் பொதுவாகவே கோவம் அதிகம் கொள்பவர்கள். இதில், ஆணும் தீயாக கொந்தளிக்கும் குணம் கொண்டிருந்தால் வீடு தாங்காது. பெண்களை ஒருநாளும் ஆண்களால் முழுதாய் கட்டுப்படுத்த முடியாது. ஆனால், ஓர் பெண்ணால் ஆணை ஓர் பார்வையில், கட்டுப்படுத்த முடியும். ஆண்கள் என்னதான் அறிவுத்திறன் அதிகம் கொண்டிருந்தாலும், செயல்பாட்டில் சிறிய தடுமாற்றம் ஏற்பட்டால் கூட உடைந்து போய்விடுவார்கள்.

எனவே, இந்த நேரங்களில் ஆண்கள் தங்களை தாங்களே கூலாக்கி கொள்ள வேண்டும். மேலும் ஆண்களே... திருமண வாழ்வில் நேர்மையாக இருங்கள், ஏனெனில் இந்த நேர்மை தான் உங்கள் துணையின் மனதில் நச்சென்று நங்கூரம் போன்று இருக்கும். மேலும், உங்கள் மனைவி, காதலி செய்யும் எவ்வித பிரச்சனைகளையும் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல், அதனை சரியான முறையில் கையாண்டால், உங்கள் துணை காதல் மழை பொழிவது நிச்சயம்.








என் மனைவி ஒரு புடவை செலக்ட் பண்ண ஒரு நாள் ஆகும்டா!

பரவாயில்ல மச்சான். என் மனைவி புடவை கடை செலக்ட் பண்ணவே ஒரு நாள் எடுப்பாடா!!

ரொம்ப நேரம் என்னால இருக்கமுடியாது... உடனே கிளம்பணும்

**உன் வீட்டுல அப்பா அம்மா தேடுவாங்களா?**

இல்லை ஸ்கூலில் இருந்து வந்து என் பையனும் பொண்ணும் தேடுவாங்க!!

## இவ்வார ராசிபலன்கள்



**மேஷம்** : மனதில் உற்சாகமும் செயல்களில் பொறுப்புணர்வும் ஏற்படும். திட்டமிட்டு செயலாற்றுவீர்கள். பணவரவு சீராகும். எதிரியால் இருந்த தொந்தரவு குறையும்.



**ரிஷபம்** : மனதில் உறுதி நிறைந்திருக்கும் பணியில் வரும் குறுக்கீடுகளை மாற்று உபாயத்தால் சரி செய்யலாம். தொழிலில் உற்பத்தி விற்பனை சுமாராக இருக்கும்.



**மிதுனம்** :மனதில் சில குழப்பங்கள் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை நன்மை தரும். உடல்நலம் ஆரோக்கியம் பெறும். வியாபாரம் வளர புதியவர் ஆதரவு தருவர்.



**கடகம்** : எதிர்கால தேவைகளுக்காக திட்டமிடுவீர்கள். வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை செழிக்கும். சேமிப்பு கூடும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்



**சிம்மம்**: அதிக முயற்சியால் பணி ஓரளவு நிறைவேறும். உடல்நிலைக்கு சிகிச்சை தேவைப்படலாம். தொழில், வியாபாரத்தில் இடையூறு இருக்கலாம். பொறுமை தேவை.



**கன்னி** : பணிகளில் திறமை பளிச்சிடும். எதிர்பார்த்த சுபசெய்தி கிடைக்கும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து லாபம் அதிகரிக்கும்.



**துலாம்** : கெடன் வாங்கும் சூழ்நிலை வரும். உடல்நிலையில் சிறு பாதிப்பு வரலாம். துணையின் ஆதரவால் மனதில் தைரியம் கூடும். வியாபாரம் வளர்ச்சி பெறும்.



**விருச்சிகம்** : உங்கள் மீதான மற்றவர்களின் பார்வை மதிப்பு மிக்கதாக இருக்கும். நோய் தொந்தரவு குறையும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.



**தனுசு** : வாழ்வில் மிகப்பெரிய மாற்றம் உருவாகும். அதிக பணவரவால் குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். சிலர் வீடு இடம் மாறுவர். உடல்நிலை நன்றாக இருக்கும்.



**மகரம்** :குடும்பத்தின் தேவையை தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள். கடனில் ஒரு பகுதியை அடைத்து விடுவீர்கள். வியாபாரம் புதியவர்களின் ஆதரவினால் செழிக்கும்



**கும்பம்** : பகைவர் மனதிலும் உங்கள் மீது நல் எண்ணம் ஏற்படும். மனைவியின் தியாகம் நிறைந்த மனதை புரிந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் ஆர்வத்துடன் பணிபுரிவீர்கள்.



**மீனம்** : பகைவர்களிடம் விலகுவது நல்லது. உடல்நலத்தில் சிறு தொந்தரவு வந்து நீங்கும். வியாபாரம் செழிக்கும். பணியாளர்கள் கேட்ட கடன் தாமதமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 07

*01.* ஆங்கிலத்தை எழுதுக

I.  ____________ ii.  ____________

*02.* xii + vi = _____ பொருத்தமான விடையை வெற்றிடத்தில் எழுதுக

*03. 1லீ தேங்காய்எண்ணெய்யின் விலை ரூ.100.00 எனின், 2லீ 500மி.லீ தேங்காய் எண்ணெய்யின் கொள்வனவு செய்வதற்கு செலவாகும் பணம்?*

..................................................

*04.* எமது சூழலை சுத்தமாக வைத்திருப்போம் உயிர்கொல்லி டெங்கு நோய் வராமல் எம்மைப் பாதுகாப்போம் கட்டுரை வரைக.

1. ..................................................
2. ..................................................
3. ..................................................
4. ..................................................
5. ..................................................

இலக்கம் 5- 9 வரையுள்ள வினாக்களுக்கு உரிய சரியான விடையை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக. பரீட்சைக்குத் தோற்றுவதற்கு 5பாடசாலைகளில் இருந்து ஒரு பரீட்சை நிலையத்திற்கு வந்திருந்த மாணவர்களின் விபரங்கள் பின்வருமாறு

*05.* சிங்களமொழி மூலம் ஆண் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..................................................

*06.* மலை மகள் பாடசாலையில் இருந்து வந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..................................................

*07.* சிங்கள மொழி மூல மாணவர்களுக்கும் தமிழ் மொழி மூல மாணவர்களுக்கும் வித்தியாசம் யாது?

..................................................

*08.* விடைகள் எழுதுவதற்கு ஆரம்பத்தில் ஒவ்வொரு மாணவனுக்கும் 5கடதாசிகள் வீதம் பகிர்ந்தளிக்கப்படுகின்றது தமிழ் மொழிமூல மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட கடதாசிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

..................................................

*09.* ஒரு வகுப்பறையில் அமரக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 20 மேற்படக்கூடாதெனவும் ஒரு மொழி மூல மாணவர் மட்டும் ஒரு வகுப்பறையில் அமர வேண்டுமெனவும் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது தமிழ் மொழிமூல மாணவர்களுக்கு தேவையான வகுப்பறைகள் எத்தனை?

..................................................

| பாடசாலை | சிங்கள மொழி மூலம் | | தமிழ் மொழி மூலம் | |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| பாத்திமா ம.வி | 82 | 78 | - | - |
| கரவில ம.வி | 132 | - | - | - |
| பந்துவில ம.வி | - | - | 43 | 35 |
| மலை மகள் ம.வி | 76 | 69 | 41 | 40 |
| மகளிர் ம.வி | - | - | - | - |
| | 437 | | 239 | |

*10.* வளர்ந்த மனிதன் ஒருவனின் வாயிலுள்ள பல்?
1. 32
2. 30
3. 28
4. 36



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு






## முட்டாள் வேலைக்காரன்

ஓர் ஊரில், வணிகன் ஒருவன் இருந்தான். பணக்காரனான அவன் சரியான கஞ்சன். எனவே, முட்டாளான ஒருவனை வேலைக்காரனாக வைத்திருந்தான் வணிகன்.

ஒருநாள் அவனை அழைத்து, "நம் வண்டியை எடுத்துக்கொண்டு பனங்காட்டுக்குப் போ... அங்கே பலர் பனைமரங்களை வெட்டி வண்டியில் ஏற்றிக்கொண்டு இருப்பர். அதேபோல் நீயும் மரங்களை வெட்டிக்கொண்டு வா!" என்றான்.

அப்படியே அவனும் வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றான். அங்கே சிலர் மரங்களை வெட்டி வீழ்த்திக் கொண்டு இருந்தனர். சிலர், கீழே கிடக்கும் மரங்களை முயன்று வண்டியில் தூக்கிப் போட்டுக்-கொண்டிருந்தனர். இதைப் பார்த்ததும் வேலைக்கார-னால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

"என்ன இவர்கள் எல்லாரும் முட்டாள்களாக இருக்கின்றனர். மரம் வெட்டும் போதே அதற்குக் கீழாக வண்டியை வைத்தால் மரம் அதில் சரியாக விழும். வீணாக ஒரு முறை பூமியில் கிடக்கும் மரத்தை வண்டியில் ஏற்ற வேண்டாமே!" என்று நினைத்தான்.

என் திட்டத்தை இவர்கள் கண் முன்னாலேயே செய்து காட்டி, நான் எத்தகைய அறிவாளி என்பதைப் புரிய வைப்பேன் என்ற எண்ணத்தில், தான் வெட்ட வேண்டிய பெரிய மரத்தை தேர்ந்தெடுத்தான்.

கோடாரியால் அந்தப் பனை மரத்தின் அடிப்பகுதியைப் பாதி அளவு வெட்டி முடித்தான். பிறகு, அந்த மரம் விழக்கூடிய இடத்திற்கு நேராக மாட்டுடன் வண்டியை நிறுத்தினான். மரம் வெட்டிக் கொண்டிருந்த மற்றவர்கள், "ஏன் இவன் இப்படிப் பைத்தியக்கார வேலை செய்கிறான்!" என்று நினைத்தனர்.

சிறிது நேரத்தில் அந்த மரம், சடசடவென்ற சத்தத்துடன் வண்டியின் மீது வேகமாக விழுந்தது. அவ்வளவுதான், வண்டி தூள் தூளானது. கால் உடைந்து குற்றுயிரும் குலை உயிருமாக மாடு துடித்துக் கொண்டிருந்தது. இதைக்கண்டு அவன் திகைத்து விட்டான். தன் திட்டத்தில் என்ன குறை என்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

என் திட்டம் நல்ல திட்டம் தான். வண்டிக்குத்தான் வலிமை இல்லாமல் போய்விட்டது என்ற முடிவுடன் வீடு திரும்பினான். நடந்ததை அறிந்த வணிகன், முட்டாளாக இருக்கிறாயே! இப்படி செய்யலாமா? என்று வேலைக்காரனைத் திட்டினான்.

சில நாட்கள் சென்றன. திடீரென்று அந்த ஊரில் மண்ணெண்ணெய் பஞ்சம் வந்துவிட்டது.

தன்னிடம் இருக்கும் இருபத்தைந்து பீப்பாய் எண்ணெயைப் பதுக்கி வைத்தால் நிறைய லாபம் கிடைக்கும்! என்று நினைத்தான் வணிகன். உடனே வேலைக்காரனை அழைத்து, கடையில் இருக்கும் மண்ணெண்ணெய் எல்லாவற்றையும் இன்றிரவு நம் தோட்டத்தில் பள்ளம் தோண்டிப் புதைத்துவிடு. யாருக்கும் தெரியக் கூடாது! என்றான்.

வணிகன் சொன்னபடியே, நள்ளிரவில் பெரிய பள்ளம் தோண்டினான் வேலைக்காரன். ஒவ்வொரு பீப்பாயாக உருட்டிச் சென்று அதிலுள்ள எண்ணெயைப் பள்ளத்தில் ஊற்றினான். இப்படியே எல்லாப் பீப்பாய்களில் உள்ள எண்ணெயையும் ஊற்றி முடித்தான். இப்போது அவன் உள்ளத்தில், இந்தக் காலிப் பீப்பாய்களை என்ன செய்வது? இது குறித்து முதலாளி ஒன்று சொல்லவில்லையே! என்ற சிந்தனை எழுந்தது.


சரி, அவரையே கேட்டு விடுவோம் என்ற எண்ணத்தில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த வணிகனை எழுப்பினான். "ஐயா! நீங்கள் சொன்னபடி மண்ணெண்ணெயைப் பள்ளம் தோண்டிப் புதைத்துவிட்டேன். காலி பீப்பாய்களை என்ன செய்வது" என்று கேட்டான்.

"ஐயோ, மண்ணெண்ணெய் எல்லாம் பேச்சே!" என்று அலறிய வணிகன், அன்றே அவனை வேலையிலிருந்து நீக்கினான்.".



## சிந்திக்க ....

எதை செய்கிறாய் என்பதை
அறிந்து, விரும்பி, நம்பிக்கையோடு செய்
வெற்றி நிச்சயம்....




தரப்பட்டுள்ள இப்படத்திற்கு நிறந்தீட்டி கீழ்வரும் மலைமுரசு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

வயதெல்லை : 10 வயதான மாணவர்கள் மாத்திரம்

***அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159ஏ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.***



உழைப்பாளி
செல்வன். க.நிருஜன்



கயல்விழி.மா
தரம் - 5ஏ
ஸ்ரீ.சண்முகா இந்து மகளிர்
கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. 2.08 *l* ஐ மில்லிலீற்றரில் காட்டுக.
02. ரூ. 450 இற்கு வாங்கிய ஒரு கதிரையை ரூ.425 இற்கு விற்கும் போது ஏற்படும் நட்டம் யாது?
03. சுருக்குக. 0.1 x 0.1
04. சதுரம் ஒன்றின் ஒரு பக்கத்தின் நீளம் 5 அலகுகள் ஆகும். அதன் பரப்பளவு எத்தனை சதுர அலகுகள்?

பகுதி . 02

உருவில் செவ்வகப் பகுதியையும் ஓர் அரைவட்டப் பகுதியையும் கொண்ட ஒரு பூங்கா நிழற்றப்பட்டுள்ளது. அதனைச் சுற்றி *7m* அகலமுள்ள ஒரு பாதை உள்ளது.




(1) பூங்காவின் அரைவட்டப் பகுதியின் ஆரையைக் காண்க.

(2) பூங்காவைச் சுற்றியுள்ள பாதையின் பரப்பளவைக் காண்க.

(3) பூங்காவின் மொத்தப் பரப்பளவைக் காண்க.

(4) பாதைக்குப் புறத்தே AB ஓர் எல்லையாக இருக்குமாறு 180m பரப்பளவைக் கொண்ட ஒரு செவ்வக வாகனத்தரிப்பிடத்தை மேற்கு றித்த உருவில் வரைக.

(5) வாகனத்தரிப்பிடத்தின் தரையில் 30உ.அ நீளமும் 20உ.அ அகலமும் உள்ள கொங்கிறீற்று அரிகற்களின் குறைந்தபட்ச எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

## பாடம் : வரலாறு

01. இங்கிலாந்து மகாராணியார் இலங்கை அரசின் தலைவர் என்ற நிலையை அற்றுப் போவதற்கு ஏதுவாய் அமைந்த காரணி யாது?
   (1) 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியலமைப்பு
   (2) 1947 ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பு
   (3) 1972 ஆம் ஆண்டு குடியரசு அரசியலமைப்பு
   (4) 1977 ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு

02. பின்வருவோரில் எவர் சீனாவில் விவசாயிகளால் புரட்சி வெற்றிகரமாக நிறைவேற்றப்படும் என்று கூறினார்?
   (1) சன் யத் ஷென் (2) சௌ என் லாய்
   (3) யுவாங் சீ காய் (4) மாஓ சே துங்

03. பின்வருவனவற்றுள் எது வருங்காலத்தில் ஏற்படக்கூடிய உலக யுத்தத்தின் விளைவாகலாம்?
   (1) போரிலே றோபோ தொழில்நுட்பம் பயன்படுவதால் மனித உயிர்களின் அழிவு குறைக்கப்படும்.
   (2) போரிலே அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதால் வாழும் உலகின் பெரும் பாகம் அழிந்து விடும்.
   (3) வளர்ச்சி பொருந்திய நாடுகளில் பெரும்பாலானவை அழிந்துவிடும்.
   (4) வளர்ச்சியடைகின்ற நாடுகளிற் பெரும்பாலானவை அழிந்துவிடும்.

**வரலாறு - யாப்பு**
ஆசிரியர் . திரு.த.ராஜ்குமார்
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

## பாடம் : பௌதீகவியல்

01. மீடிறனை அளக்கும் அலகு.
   (1) மீற்றர் (2) ஹேற்ஸ் (3) யூல் (4) செக்கன்

02. பின்வருவனவற்றுள் நெட்டாங்கு அலை.
   (1) நீரலைகள் (2) ஒளி அலை
   (3) ஒலியலை (4) மின்காந்த அலை

03. ஒளியியல் முதன்மை நிறங்கள்.
   (1) சிவப்பு, நீலம், பச்சை (2) சிவப்பு, மஞ்சள், நீலம்
   (3) மஞ்சள், நீலம், வெள்ளை (4) நீலம், ஊதா, சிவப்பு

04. ஒலி எதனூடாக விரைவான கதியுடன் ஊடு கடத்தப்படும்.
   (1) வெற்றிடத்தினூடாக (2) வாயுவினூடாக
   (3) திரவத்தினூடாக (4) திண்மப் பொருளினூடாக

05. திரவம் ஒன்றிலுள்ளே இருக்கும் புள்ளி ஒன்றில் உள்ள அமுக்கத்திற் செல்வாக்கு செலுத்தும் காரணி
   (1) திரவத்தின் அடர்த்தி
   (2) திரவத்தின் கனவளவு
   (3) ஈர்வையினாலான ஆர்முடுகள்
   (4) சுயாதீனப் பரப்பிலிருந்து அப்புள்ளியின் ஆழம்

06. திரவப் பாரமானிகளைச் செய்யப் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் திரவம் இரசமேயாகும். இதற்கு முக்கிய காரணம்.
   (1) மற்றைய திரவங்களிலும் பார்க்க இரசத்தின் அடர்த்தி கூடுதலாக இருக்கின்றமை.
   (2) சாதாரண நிலைமைகளிலே திரவமாக இருக்கும் ஒரே உலோகம் இரசமாக இருக்கின்றமை.
   (3) இரசமானது சிறந்த மின் கடத்தியாகவும் சிறந்த வெப்பக் கடத்தியாகவும் இருக்கின்றமை.
   (4) இரசம் கண்ணாடிக் குழாய்களின் உட்பரப்பை நனைக்காமை

06. வீட்டு மின் சுற்றிலே தடக்கு ஆளியைச் சேர்ப்பதன் நோக்கம்
   (1) தலைமை ஆளிக்குப் பாதுகாப்பு அளித்தல்
   (2) மின்மானிக்குப் பாதுகாப்பு அளித்தல்
   (3) மின் சாதனங்களுக்குப் பாதுகாப்பு அளித்தல்
   (4) மின் வடங்கள் மிகையாக வெப்பமாதலைத் தடுத்தல்

07. ஒலி அலை ஒன்றின் மீடிறன் அதிகரிக்கப்படும் போது கேட்கும் ஒலியின்
   (1) சுருதி அதிகரிக்கும் (2) உரப்பு அதிகரிக்கும்
   (3) பண்பு மாற்றமடையும் (4) கதி அதிகரிக்கும்

**விஞ்ஞானம் (பௌதிகவியல்)**
**பல்தேர்வு**
ஆசிரியர் . பொன்னுத்துரை தவசீதன் BSC
மாணவர் ஒளி கல்வி அபிவிருத்தி மையம், திருகோணமலை.

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

### தொடர் மொழிக்கு ஒரு மொழி

1. அசகாய சூரன் - யாருடைய துணையுமின்றி தானே தனியாக நின்று தீர்மானம் எடுக்கும் திறமையுடையவன்.
2. அநாதை - தாய் தந்தையை இழந்தோர்.
3. அவிசு - வேள்வியிலே தேவர்க்கு சமர்ப்பிக்கும் உப்பின்றி சமைத்த சாதம்.
4. அறம்பாடுதல் - பிறர்க்கு தீங்கு விளைவிக்கக் கூடியனவான சொற்களையும் சொற்றொடர்களையும் சேர்த்து கவி பாடல்.
5. ஆவணம் - உரிமை கொண்டாட சான்றாக எழுத்துருவில் அமைந்த பத்திரம்.
6. உலோகாயுதன் - உலகமும் உலக இன்பங்களும் மாத்திரம் மெய்யென்றும் கடவுளோ மறுமையோ இல்லையென்றும் வாதிப்பவன்.
7. கட்டியம் - கடவுளர் அரசர் என்போர் உலா வரும்போது அவரது விருதுப்பெயர் வெற்றி என்பவற்றை எடுத்துக்கூறல்.
8. காவற்காடு - கோட்டையை சுற்றி அரணாக அமைந்த பெருங்காடு.
9. குரவர் - தாய் தந்தை அரசன் உபாத்தியாயன் தமயன் என்போர்.
10. சங்க நிதி - இலட்சம் கோடி அளவுடைய நிதி.
11. செய்குன்று - அரசனுக்குரிய சோலையில் செயற்கையாக



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,

## Grammar

**Fill in the blanks using the words given.**

Suraj's mother bought him a computer for his twelth birthday. By fifteen he had become very good at using his computer, but (1)............ was his only hobby. His (2)........ wanted him to go out (3)........... do things, but he had (4) .......... few friends. Nothing could make (5)............ turn his computer off. In (6).......... end, his mother threatened to (7).......... off the electricity. suraj went (8)......... bed and pretended to be (9)........... but at midnight he got (10)........... to work at the computer. (11)........... had become a computer addict. (12)............ morning suraj was found lying (13)........... the floor. He had collapsed (14).......... he was very tired. Two weeks in hospital made him realise that he should not allow his computer to control his life.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| away, | his, | it, | on, | him, | because, |
| he, | very, | off | asleep, | one, | up, |
| and, | the, | mother, | to, | the | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிகளை விட்டு...

இவ்விடயம் தொடர்பாக திருகோண - மலை மாவட்டத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்த கட்சியின் திருகோணமலை மாவட்டத் தலைவர் இரா.ஸ்ரீஞானேஸ்வரன் மற்றும் பிரதேசச் செயற்பாட்டாளர் ஜீவேந்திரன் ஆகியோர் மேல் நடவடிக்கைகள் தொடர்பாகப் பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்துரையாடினர்.

குறித்த காணிகளின் ஊடாக அனல் மின்நிலையத்திற்கான குழாய்கள் செல்வதாலேயே அக்காணிகளை விட்டு வெளியேறுமாறு தமக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்த காணிகள் தமக்கு சந்திரிக்கா குமாரணதுங்க அம்மையார் சனாதிபதியாக இருந்தவேளையில் உறுதிப்பத்திரம் ஊடாக வழங்கப்பட்டதாகத் தெரிவித்தனர்.

குறித்த காணிகளை விட்டு அகலவதாயின் தற்போதுள்ள காணிகளுக்குச் சமான அளவு காணிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் தம்மால் ஏற்றுக்கொள்ளக் கூடிய இடத்தில் வழங்க வேண்டும் என்றும் அம்மக்கள் விடுத்த கோரிக்கைகள் மிக நியாயமானவை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்டத் தலைவர் இரா.ஸ்ரீஞானேஸ்வரன் தெரிவித்தார்.

அபிவிருத்திக்காக மக்களின் நிலங்களைக் கையேற்கும் போது பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் எவற்றையும் பின்பற்றாமல் மக்களை நட்டாற்றில் விட்டுவிட முயற்சிப்பது சனவரி 8ம் திகதிக்கு முன்னரான ஆட்சியின் எச்ச சொச்சங்கள் தற்போதும் நடைமுறையில் இருப்பதை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த மூன்று குடும்பங்களுக்குமான அனைத்து உதவிகளும் இடைநிறுத்தப் பட்டிருப்பதாகத் தெரிவித்த அவர் அயலவர்கள் மீளக்குடியேறும்போது கிடைக்கும் உதவிகள் இவர்களுக்கு மறுக்கப்படுவது மனித உரிமை மீறல் எனவும் தெரிவித்தார்.

குறித்த மூன்று குடும்பங்களுக்கும் நிவாரண உதவிகள், வீடமைப்பு உதவிகள் மற்றும் ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் உதவிகள் என்பவை நிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த காணிகளை விட்டு அவர்களைப் பலவந்தமாக வெளியேற்றும் நடவடிக்கைகள் தொடருவதாகத் தெரிவித்த அம் மக்கள் குறித்த பிரதேசத்திலுள்ள மாகாணத் தமிழ் அரசியல்வாதிகள் கூட இவ்விடயத்தில் தமது கோரிக்கைகளைப் புரிந்துகொள்ள மறுப்பதாகவும் தெரிவித்தனர்.

அதேவேளை இவர்கள் வெளியேறினால் மட்டுமே அடுத்த கட்ட குடியேற்றம் சம்பூரில் நடத்தப்படும் என மாகாண அதிகாரம் கொண்டவர்களால் தெரிவிக்கப்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட இம்மக்களின் குறைகளைக் களைவதற்கான முதற்கட்ட சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க உரிய அமைப்புக்களுடன் பேசியிருப்பதாகத் தெரிவித்த ஸ்ரீஞானேஸ்வரன் விடயத்தை சனாதிபதி மற்றும் அனைத்துத் தரப்பினருக்கும் தெரியப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க விருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## வட்டாரத் தேர்....

வட்டார தேர்தல் முறை என்பது கிழக்கு மாகாணத்துக்கு வெளியே உள்ள சிறு பான்மை மக்களுக்கு பாரிய பாதிப்பு ஏற்படும் என்பது அனைத்து கட்சிகளாலும், அறிவுள்ளவர்களாலும் எற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே தமிழ் , முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின், விகிதாசார பிரதிதித்துவ முறை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள கலாநிதி றியாஸ், தொகுதிவாரி தேர்தல் முறைக்கு ஆதரவளிக்கும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளை பொதுமக்கள் புறக்கணிக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கூட்டமைப்பிற்கு...

மகேஸ்வரனை சிறிலங்கா அதிபர் நியமித்திருந்தார்.

யாழ். மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே கூடுதல் ஆசனங்களை வென்ற நிலையில், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர பதவி, கூட்டமைப்புக்கு வழங்கப்படும் என்று சிறிலங்கா அரசாங்கம் உறுதியளித்திருந்தது.

எனினும், அந்த வாக்குறுதியை சிறிலங்கா அரசாங்கம் காப்பாற்றத் தவறியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை சிறிலங்கா நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உரையாற்றிய போது, யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் பதவி, கூட்டமைப்புக்கு வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டு ஏமாற்றப்பட்டதாக விசனம் வெளியிட்டிருந்தார்.

இதில், ஆறு வாக்குகளால் வெற்றி பெற்ற ஐதேக உறுப்பினருக்கு, மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்தநிலையில், யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த பின்னர், தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்கு நியமிக்கப்பட்ட அங்கஜன் இராமநாதனுக்கு இணைத்தலைவர் பதவியை சிறிலங்கா அதிபர் வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆறு ஆண்டு...

தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றார்.

யாழ். அச்சுவேலி பகுதியைச் சேர்ந்த குறிப்பிட்ட தமிழர், 2009 ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப் -பட்டுள்ளார்.

எனினும், அவர் கைது செய்யப்பட்டமைக்கான காரணம் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்படாத நிலையில் வழக்கு தொடர்ந்தும் ஒத்திவைக்கப்பட்டு வருவதாக அந்த கைதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், இந்த கைதியின் நிலைமை குறித்து தெளிவுடுத்தி சிறைச்சாலைகள் திணைக்களத் - தினால் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் கைதியின் தேகாரோக்கியம் குறித்து சிறைச்சாலை அதிகாரிகள் கவனம் செலுத்தியுள்ளதாக கூறியுள்ள சிறைச்சாலை ஆணையாளர், ஜனவரி மாத முற்பகுதியில் நடைபெறவுள்ள அடுத்த வழக்கு விசாரணையில் ஆஜராகி குறிப்பிட்ட கைதி மீதான குற்றச்சாட்டுகள் குறித்து நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத் - திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

## மட்டக்களப்பில்....

விடயம் குறித்து காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், காணி அபகரிப்பாளர்களுக்கு சிறப்பு அதிரடிப்படையினர் பாதுகாப்பு வழங்குவதாகவும் அந்தப் பகுதி மக்கள் குற்றம் சாட்டினர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்துக்குச் சென்று அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளனர்

## திருகோணமலை வதை...

சபையின் அதிகாரிகள் இவ் வதைமுகாம் களைப் பார்வையிடவும். பரீட்சிக்கவும் அனுமதிக்காது தடுத்திருந்தால், அத்தடையானது இலங்கை அரசு இரகசிய வதைமுகாம்களை இயக்கு- கின்றது என்ற தப்பபிப்பிராயத்தை உலகம் முழுவதும் உருவாக்கியிருக்கும் எனத் தெரிவித்தார்.

" வதைமுகாம்கள் இருப்பதாக அவர்கள் தெரிவித்தார்கள். ஆகவே தெரிவித்த நீங்களே சென்று ஆராய்ந்து பாருங்கள் என நாம் அனுமதித்தோம். இக்குற்றச்சாட்டுக்களில் இருந்து நாம் விடுபட வேண்டாமா? அவ்வாறு விடுபடுவதை இறையாண்மை என்ற பெயரால் நாம் தடுக்கலாமா? ஜநாவில் மட்டுமே நாம் எமது பிரச்சனைகளைப் பற்றிக் குரலெழுப்ப முடியும் என்பதால் ஐக்கிய அமெரிக்கா கொண்டிருக்கும் தப்பபிப்பிராயம் போன்று ஐக்கிய- நாடுகள் சபையும் எம்மீது தப்பபிப்- பிராயம் கொள்ள இடமளிக்க முடியாது" என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## திருகோணம......

இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே இலங்கை கடற்பரப்பில் மீட்கப்பட்ட சடலத்தின் ஆள் அடையாளம் குறித்து தமிழகத்தின் க்யூ பிரிபு காவல்துறையினர் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

உயிரிழந்த நபருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருக்குமா என்ற அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நபர் சென்னை வெள்ளத்தில் உயிரிழக்கவில்லை எனவும், ராமேஸ்வரம் பகுதியில் இந்த நபர் உயிரிழந்திருக்கலாம் எனவும் சடலம் இலங்கைக்கு அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் எனவும் தமிழக காவல்துறையினர் சந்தேகம் வெளியிட்டு- ள்ளனர்.

சாரதிகள் சங்கத்தில் தாம் அடையாள அட்டைக்காக விண்ணப்பம் செய்த போதிலும் தமக்கு அடையாள அட்டை கிடைக்கவில்லை என பூமிதுரை தெரிவித்துள்ளார்.

தாம் உயிரிழந்து விட்டதாக ஊடகங்களில் வெளியான செய்தி அதிர்ச்சி அளித்தாகவும் தமது பெயரிலான அடையாள அட்டை ஒன்றை வேறும் ஒர் நபர் எவ்வாறு நீண்ட காலமாக பயன்படுத்தினார் என்பது புரியவில்லை எனவும் பூமிதுரை தெரிவித்துள்ளார். தனது தகவல்கள் பரவுவதை அறிந்ததும்,பூமிதுரை டிசம்பர் 7ம் திகதி சென்னை காவல் துறை ஆணையாளரை தொலைபேசியில் தொடர்புகொண்டதை அடுத்தே விடயம் வெளிச்சத்திற்க வந்துள்ளது.

இதேவளை மாநில அரசாங்கம் இந்த விடயத்தில் இராசதந்திரரீதியில் தொடர்பு கொள்ளாத பட்சத்தில் தங்களால் எதுவும் செய்ய முடியாது என கியு பிரிவு காவல்துறை தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை கடற்பரப்பில் கரையொதுங்கிய சடலம் எதிர்வரும் 20ம் திகதிவரை அடையாளம் காண்பதற்காக மாவட்ட வைத்தியசாலையின் பிண - வறையில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதிய அரசிய...

நாங்களும் தற்போது ஒத்திகையொன்றைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

இந்த நாட்டில் ஒரு சிறப்பான அரசியலை, இந்த நாட்டில் உள்ள எல்லா மக்களும் இணைந்து வாழக் கூடிய ஒரு நடைமுறையை உருவாக்கிட முடியுமா என்று கிழக்கில் நாங்கள் அந்த ஒத்திகையைப் பாருத்துக்கொண்டு இருக்கின்றோம் என்றார்.

## செய்தித் துளிகள்

### சங்கிலித் திருடன் கைது

வெருகல் பகுதியில் தனிமையில் இருந்த பெண்ணொருவரின் தங்கச் சங்கிலிலியை இளைஞன் ஒருவன் அறுத்துச் சென்றுள்ளான்.

எனினும் அடையாளங்களை சரியாக அவதானித்த குறித்த பெண்ணால் அடையாளம் காணப்பட்ட இளைஞன் சந்தேகத்தின் பேரில் காவல் துறையி - னரால் கைது செய்யப்பட்டுள்ளான்.

### வடித்தவருக்கும் குடித்தவருக்கும் தண்டனை

மதுபோதையில் முச்சக்கர வண்டியை ஓட்டிச் சென்ற 26 வயதான இளைஞனைக் காவல்துறையினர் சம்பூரில் கைது செய்தனர்.

இவருக்கு ரூபா 5,000 அபராதமும். ஒரு மாத வாகன அனுமதிப் பத்திரத் தடையையும் விதித்த நீதிபதி ஒத்தி வைக்கப்பட்ட ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையையும் விதித்தார்.

கட்டைப்பறிச்சான், சம்பூர் சேனையூர் பிரதேசத்தில் கசிப்பு காய்ச்சி விற்றுவந்த ஒருவருக்கு 20,000 அபராதமும் விதிக்கப்பட்டது.

## செய்தித் துளிகள்

### மாகாண அபிவிருத்திக் குழுத் தலைவராக முதல்வர் ஹாபிஸ்

கிழக்கு மாகாண அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவராக கிழக்கு முதலமைச்சர் நஸீர் அஹமட் சனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரான நஸீர் அஹமட், இலங்கையில் சமாதானத்தையும் அபிவிருத்தியையும் நோக்காகக் கொண்டு செயற்படுவதற்காக பெங்களூர் நகரில் இந்திரா காந்தி நினைவு பரிசு வழங்கி கௌரவிக்கப்- பட்டமை குறிப்பிடத்தக்கது.

### சிறுமி மீது வன்புணர்வு முயற்சி

சூரியவெவ பிரதேசத்தில் சிறுமி மீது வன்புணர்வுக்கு முயன்ற அரை முதியவரை விளக்க மறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

நாற்பத்தியெட்டு வயதான இவ்வரை முதியவர் பழக்கமான சிறுமி மீது வன்புணர முயன்றதாக சந்துதேகத்தின் பேரில் கைதாகியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு.... மக்கள் முரசு




இன்றும் பலர் மனங்களில் ஆழ உச்சரிக்கப்படும் வாக்கு "எமது நிலம் எமக்கு வேண்டும்" ஆக எமது நிலத்தை மாற்றான் ஆள்வது எவ்வளவு பெரிய மனத்தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை நாம் அனுபவித்தே இருக்கிறோம் இல்லையா?

2ம் உலக யுத்தத்தில் ஜெர்மன் எப்படியும் இருந்திருக்கலாம். அது ஒரு யுத்தம். தீர்வுக்குள் கொண்டுவரப்பட்ட யுத்தம். ஆனால் அதற்குப் பிறகு அந்த ஜெர்மன் நாட்டை துண்டாடி, ஆக்கிரமித்து கொள்ளை இட்டதில் எந்த நியாயமும் இருக்காது. முன்னர் இருந்தது ஒரு ஹிட்லர். பின்னர் அதனை ஆண்டது நான்கு ஹிட்லர் முகங்கள். (சோவியத் ஒன்றியம், அமேரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ்) இப்படி ஜெர்மன் நாட்டை ஆக்கிரமித்ததில் இருந்து ஒன்று மட்டும் புரிகிறது, உலகம் ஜெர்மன் தேசத்துக்கு மேல் எவ்வளவு பயம் கொண்டிருந்தது? மட்டுமல்லாமல் அந்த ஜெர்மன் தேசத்தை அப்படியே விட்டால், ஹிட்லர் இல்லாவிட்டாலும் அவர்களின் மனித மூளைகள் மேலிருந்த பயம்தான்.

யுத்தம் முடிந்த பிற்பாடு கைப்பற்றிய தேசங்களை பிரித்து ஆள்வது சாதாரணமானதுதானே! கொரியாவையும் அப்படி பிரித்துத்தானே இன்றும் அதனை குட்டிச் சுவராக்கி வைத்து இருக்கிறார்கள். அது போலவே நாதியற்றுப் போன ஜெர்மன் பெருநிலப்பரப்பை அன்றைய ஆதிக்க அரசுகளான அமேரிக்கா, இரசிய, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகியன பிரித்து எடுத்து தமக்கு சார்பான ஒரு பொம்மை ஆட்சியை அமைத்துக் கொண்டன.

அவற்றை நிர்வகிக்க, மற்றைய அரசுகள் தலையிடாமல் இருக்க கல்லாலான, இரும்பாலான பெரும் மதில் சுவர்களை தமது வசதிக்கு ஏற்றாற்போல அமைத்துக் கொண்டன. ஆங்காங்கே எல்லைப் பிரச்சனைகளும் இடம் பெற்ற வண்ணமே இருந்திருக்கிறது. Berlin wall வரலாற்றில் தனக்கென அத்தியாயத்தை பிடித்துக் கொண்டது.

முதலாவதாக ஜெர்மன் தேசத்தை கிழக்கு ஜெர்மன், மேற்கு ஜெர்மன் என்று பிரித்துக் கொண்டார்கள். கிழக்கு ஜெர்மனி நிலப்பரப்பை இரசியா பிரித்து கம்யுனிச அரசை நிறுவிக் கொண்டது. மேற்கு ஜெர்மன் நிலப்பரப்பை மேல் பகுதியை பிரான்ஸும், நடுப்பகுதியை பிரித்தானி-யாவும், கீழ்பகுதியான கொஞ்சம் விசாலமான தேசத்தை அமெரிக்காவும் பிரித்து தமக்கு சார்பான முதலாளித்துவ அரசை அமைத்துக் கொண்டன.

கிழக்கு ஜெர்மன் அரசுதான் முதன் முதலில் இரசியாவின் அனுமதி பெற்று, தனிக்குடித்தனம் போக சுவர் எழுப்ப வேண்டும் என்று முடிவெடுத்து அதற்கான வேலைகளில் இறங்கியது. 1961 இல் இருந்து 1989 கம்மியுனிசம் வீழும் வரையும் அந்த சுவர்கள் தாங்கிய கண்ணீர்க் காவியங்கள் ஏராளம். அவற்றில் தெளிக்கப்பட்ட இரத்த கறைகள் ஏராளம், ஏராளம்.

மனித மனங்களின் ஏக்கங்களை, சுயங்களை அடிமை கொண்டு தான் இந்த நான்கு தேசங்களும் ஒரு தேசத்தை பிரித்து மேய்ந்தன. (பிரான்ஸ் உட்பட). எத்தனை உறவுகள் நிர்க்கதியாக்கப் பட்டார்கள். எல்லைகள் கடக்க முயன்று எல்லை ஓரங்களில் சுடப்பட்டு அழுகிப்போனவர்கள் எத்தனை பேர்? எல்லை கடக்க முயன்று கைது செய்யப்பட்டு தலை துண்டிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்? சுரங்கங்கள் தோண்டி எல்லை கடக்க முயன்று, சுரங்கங்களை விட்டு வெளியில் வராதவர்கள் எத்தனை பேர்? இன்னும் பலர் எங்கே என்றே தெரியாமல் எத்தனை பேர்? எல்லாமே மனித உறவுகளின் மேல் எழுந்த உச்ச பட்ச பிணைப்புகளே தவிர வேறில்லை.

Gunter Litfin இவர்தான் முதன் முதல் பேர்ளின் சுவர் கடக்க முற்பட்ட ஒரு தையல் தொழிலாளி. எல்லை கடக்க முற்பட்ட பொழுது கைது செய்யப்பட்டு தலையில் சுடப்பட்டு கொலை செய்யப்பட்டவர். இவரிலிருந்தே அனைத்தும் தொடக்கமாகியது...

இந்த சுவர்களால் பிரிக்கப்பட்ட காலங்களில் ஆட்கடத்தல் தரகர்கள் பெரும் பணக்காரர்கள் ஆனார்கள். சுவாரசியம் என்னவென்றால் அங்கே குடிகொண்டிருந்த அரசுகளே தரகு வேலை பார்த்ததுதான். உறவுகளை சந்திக்க, சேர மட்டும் எல்லை கடக்கவில்லை. இளைஞர்கள் அதிகம் கிழக்கில் இருந்து மேற்கிற்கும் மேற்கில் இருந்து கிழக்கிற்கும் எல்லை தாண்டினார்கள்.

# நிகழ்வுகள்

## கிண்ணியா முன்பள்ளியின் கலைநிகழ்ச்சியும் பரிசளிப்பு விழாவும்

தம்பலகாம நிருபர்



கிண்ணியா பைசல் நகர் அல் ஷர்பான் முன்பள்ளியின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த திங்கட்கிழமை (07.12.2015) மாலை அல் ஷர்பான் பாடசாலையில் நடைபெற்றது.

இதன் போது சிறார்களின் கலைநிகழ்சிகள் பல சிறார்களினால் நிகழ்த்தப்பட்டன. அத்துடன் ஆசிரியை சமினா முகம்மது அஸ்வர் அவர்கள் முன்பள்ளியில் கல்வி கற்கும் மாணவ மாணவிகளுக்கு பரிசில்களையும், சான்றிதல்களையும் வழங்கி வைத்தார்.



## முள்ளிப்பொத்தானை றினா முன்பள்ளியின் கலைநிகழ்வு

முள்ளிப்பொத்தானை றினா முன்பள்ளி பாலர் பாடசாலையின் வருடாந்த கலை நிகழ்வும் பரிசளிப்பும் 05.12.2015ம் திகதி பி.ப 3.00 மணியளவில் முள்ளிப் பொத்தானை அல்ஹிஜ்ரா மத்தியகல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. பிள்ளைகள் தமது திறமைகளை நிகழ்வுகள் மூலம் வெளிக் காட்டினர். தொடர்ந்து பிரதம விருந்தினரினாலும் கௌரவ விருந்தினரினாலும் பரிசு வழங்கப்பட்டன.




## "கப்பல்துறை கண்ணகி அம்மன் ஆலயம்" பசுமைத்திட்டம்



திருகோணமலை தம்பலகாமம் பிரதான வீதியில், முத்துநகர் உட்புற காட்டுப்பகுதியில் சுமார் 08 கி.மீ. தொலைவில் காடுசூழ அமைந்திருக்கும், ஏறத்தாழ 300 வருடகால சரித்திரம் வாய்ந்ததும், தம்பலகாமம் மக்களால் பரம்பரை பரம்பரையாக வழிபடப்பட்டு வருவதுமான "கப்பல்துறை கண்ணகி அம்மன் ஆலய வளாகம்" மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் அதன் ஆலய நிர்வாகத்தினரால் "பசுமைத் திட்டம்" ஒன்று 25.11.2015 அன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதற்கமைய ஆலய நிர்வாகசபை செயலாலர் திரு.ந.திருஞானசம்பந்தமூர்த்தியின் தலைமையில், திரு.பா.ஹம்சபாலன் (உறுப்பினர்) திரு.சி.கங்காதரன் (அனுசரணையாளர்), திரு.பொ.பற்குணராசா (தலைவர்), திரு.ம.இந்திரசூரியன் (பொருளாளர்) ஆகியோர் அடங்கிய குழுவினர் 25.11.2015 அன்று திருகோணமலை தம்பலகாமம் பிரதான பாதையில் முத்துநகர் சந்தியில் இருந்து உட்புறம் சுமார் 08கி.மீ தொலைவில் காடுசூழ அமைந்திருக்கும் "கப்பல்துறை கண்ணகி அம்மன் ஆலய வளாகத்துக்கு" விஜயம் செய்தனர்.

அத்துடன் வன இலாகாவினால் இந்த ஆலயத்துக்கென அன்பளிப்பாக வழங்கப்பட்ட காட்டுமர கன்றுகளான வேம்பு, விளா, பாலை, வீரை, நாவல், திருக்கொன்றை, வில்வம் ஆகியவற்றில் ஒரு தொகுதியை அப் பகுதியில் பரவியிருந்த வெள்ளத்தையும் சிரமம் பாராது கடந்து சென்று ஆலயம் அமைந்திருக்கும் பிரதேசத்தில் நடுகையிட்டனர்.

ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் ஆலயவளாகத்தில் தம்பலகாம கிராம மக்களால் விளக்கேற்றும் வைபவமும், வைகாசி பௌர்ணமியில் வருடாந்த பொங்கல் வைபவமும் விமர்சையாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

# விளையாட்டு முரசு

## அரச அதிபர் கிண்ண இறுதிப் போட்டிகள்

### முல்லைத்தீவு மாவட்டத்திற்கான

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் கிண்ண போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. அந்தவகையில், ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதிப் போட்டிகள், கடந்த வெள்ளியன்று முல்லைத்தீவு பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

இந்தப் போட்டியில், மாந்தை கிழக்கு பிரதேச செயலக அணியும் முல்லைத்தீவு மாவட்ட செயலக அணியும் மோதிக்கொண்டன.

இதில், மாவட்ட செயலக அணி, 05 கோல்களைப் பெற்று, வெற்றியைத் தனதாக்கி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளது.

அந்த வகையில், முல்லைத்தீவு மாவட்ட அரச கிண்ண இறுதிப் போட்டியில், ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில், முல்லைத்தீவு மாவட்ட செயலக அணியும் தபால் திணைக்கள அணியும், ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில், துணுக்காய் பிரதேச செயலக அணியும் மணலாறு பிரதேச செயலக அணியும், பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக அணியும் முல்லைத்தீவு மாவட்ட செயலக அணியும் மோதவுள்ளதாகவும், ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.

## கனிஷ்ட சம்பியன்ஷிப் கோல்ப் போட்டிகள்

இந்த வருடத்துக்கான இலங்கை கனிஷ்ட பகிரங்க கோல்.'.ப் சம்பியன்ஷிப், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (15) முதல் வியாழக்கிழமை (17) வரை, றோயல் கொழும்பு கோல்.'.ப் கழகத்தில் இடம்பெறவுள்ளது. இலங்கை கோல்.'.ப் சங்கத்தால் நடாத்தப்படும் இத்தொடருக்கு, பிறிமா சண்றைஸ் பாண், தொடர்ச்சியாக எட்டாவது வருடமாகவும் அனுசரணை வழங்குகிறது.

இந்தத் தொடருக்கு கண்டி, நுவரெலியா, கொழும்பிலிருந்து, எழுபதுக்கு மேற்பட்ட கனிட்ட கோல்.'.ப் வீரர்கள் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொடரில் பதினெட்டு வயதுக்குட்பட்ட, ஆண், பெண் இருபாலாரும் பங்கேற்கலாம். இந்தத் தொடரானது நான்கு வயதுப் பிரிவுகளிலில் இடம்பெறவுள்ளதோடு, சம்பியன்ஷிப்பில் எந்த வயதுப் பிரிவு வீரரும் கலந்து கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது. பதினைந்து தொடக்கம் பதினேழு வயதுடையோர், தங்கப் பிரிவாகவும் பன்னிரண்டு தொடக்கம் பதினான்கு வயதுடையோர், வெள்ளிப் பிரிவாகவும் பத்து தொடக்கம் பதினொரு வயதுடையோர் வெண்கலப் பிரிவாகவும் ஒன்பது மற்றும் அந்த வயதுக்குக் கீழானோர் இரும்புப் பிரிவிலுமாக, போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர்.



## ஒலிம்பிக்கில் உள்ளடங்குமா??

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தலைமை அதிகாரி டேவிட் ரிச்சர்ட்சன் சமீபத்தில் சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் தலைவரை சந்தித்து பேசினார்.

அப்போது ஒலிம்பிக் போட்டியில் 20 - 20 கிரிக்கெட் போட்டியை சேர்ப்பது பற்றி ஆய்வு செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்தி இருந்தார்.

இதுபற்றி ரிச்சர்ட்சன் கூறும்போது, "ஒலிம்பிக்கில் கிரிக்கெட் இடம் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு செய்யுமாறு சர்வதேச ஒலிம்பிக் சங்க தலைவரிடம் கேட்டுக் கொண்டேன். 2024 ஒலிம்பிக்கில் கிரிக்கெட்டை சேர்க்க வேண்டும் என்ற விருப்பத்தை தெரிவித்தேன். கிரிக்கெட் இடம் பெறுவதற்கான வாய்ப்பு அவ்வளவு எளிது அல்ல" என்றார் அவர்.



## தலைவரானார் அஸ்வின்

### கோஹ்லிக்கு ஓய்வு

தமிழக கிரிக்கெட் அணியின் அணித்தலைவராக அஸ்வின் நியமிக்கப்பட்டுள்ளார்.

விஜய் ஹசாரே கோப்பை கிரிக்கெட் போட்டியின் ஏ பிரிவில் இடம் பிடித்துள்ள தமிழக அணியின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்.அஸ்வின் (அணித்தலைவர்), தினேஷ் கார்த்திக் (விக்கெட் கீப்பர்), பாபா இந்த்ராஜித் (துணை அணித்தலைவர்), பயிற்சியாளர் எம்.சஞ்சய், பீல்டிங் பயிற்சியாளர், ஆர்.வெங்கடேஷ், பந்து வீச்சு பயிற்சியாளர்: எல்.பாலாஜி, மேலாளர்: ஆர்.ஐ.பழனி.

டெல்லி- பரோடா அணிகள் மோதுகின்ற ஆட்டத்தில் விராட் கோஹ்லிக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது

## மீண்டும் பயிற்சியில் செரீனா

காயம் காரணமாக ஓய்விலிருந்து வந்த செரீனா வில்லியம்ஸ் மீண்டும் பயிற்சிக்குத் திரும்பியுள்ளார். இந்த வருடத்தில் அமெரிக்கன் டெனிஸ் தொடரைத் தவிர ஏனைய சர்வதேச அந்தஸ்து பெற்ற தொடர்களையெல்லாம் கைப்பற்றி தொடர்ந்து முதலிடத்தில் நீடித்துவந்த செரினா வில்லியம்ஸ், காயம் காரணமாக தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீராங்கனைகள் மட்டும் பங்கேற்கும் தொடரில் இருந்து விலகியிருந்தார்.

இந்நிலையில் கடந்த இரண்டு மாதகால ஓய்வின் பின்னர் அவர் மீண்டும் பயிற்சிக்கு திரும்பியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## மன்செஸ்டர் யுனைட்டட் வெளியேற்றம்

சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டப் போட்டித் தொடரிலிருந்து, மன்செஸ்டர் யுனைட்டட் அணி அதிர்ச்சிகரமாக வெளியேற்றப்பட்டுள்ளது. வொல்ப்ஸ்பேர்க் அணிக்கெதிரான போட்டியில் அதிர்ச்சிகரத் தோல்வியைத் தழுவியே, அவ்வணி வெளியேற்றப்பட்டது.

ஜேர்மனியின் வோக்ஸ் - வாகன் எரினா மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் வெற்றி பெறுவது, சம்பியன்லீக் தொடருக்கான இறுதி 16 அணிகளுள் ஒன்றாக மன்செஸ்டர் யுனைட்டட் அணியை நிலைநிறுத்தும் என்ற நிலை காணப்பட்டது. இந்நிலையில். போட்டியின் ஆரம்பத்திலிருந்து, ஒருவிதமான தடுமாற்றத்தை யுனைட்டட் வெளிப்படுத்தியிருந்தது. போட்டியின் 3ஆவது நிமிடத்தில் வொல்ப்ஸ்பேர்க் அணியின் அன்ட்ரே ஷுர்லேக்கு வாய்ப்பொன்று கிடைத்தது. எனினும், அந்த வாய்ப்பை அவர், கோல் கம்பத்துக்கு மேலாக பந்தை அடித்து, தவறவிட்டிருந்தார். இரண்டாவது பாதியில் ஆரம்பத்தில், மன்செஸ்டர் யுனைட்டட் கோலொன்றைப் பெற்றதாக எண்ணப்பட்ட போதிலும், ஓப் சைட் என அறிவிக்கப்பட்டது.

## முரண்பாடான பதவிகளில் கங்குலி



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவராகவும், அச்சபையால் நடாத்தப்படும் இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றும் அணியான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியையும் என். ஸ்ரீனிவாசன் காணப்பட்டமையால், இந்திய கிரிக்கெட்டில் முரண்பாடான பதவிகளை வகித்தலென்பது அதிகக் கவனத்தை ஈர்த்திருந்தது.

அதுவே, ஸ்ரீனிவாச-னின் பதவியிழப்புக்கும் முக்கிய காரணமாகியிருந்தது. இந்நிலையில், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பூனே ஐ.பி.எல் அணியை உரிமைப்படுத்தியுள்ள நியூ றைஸிங் குழுமத்துடன் வியாபாரத் தொடர்புகளை வைத்திருப்பதே, கங்குலிக்கான சிக்கலாக அமைந்துள்ளது.

கால்பந்தாட்டக் கழகமான அத்லெட்டிகோ டி கொல்கத்தா என்ற அணியை, கங்குலியும் நியூ றைஸிங் குழுமத்தின் தலைவர் சஞ்சீவ் கோங்காவும் இணைந்து உரிமைப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில், இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் ஆளும் சபையிலும் கங்குலி இடம்பெற்றுள்ளதால், முரண்பாடு-களை ஏற்படுத்தக்கூடிய பதவிகளை அவர் வகிப்பதாக, குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது.

## மீண்டும் இணைத்துக் கொள்ளப்பட்டார் ஷோன் மார்ஷ்

நியூசிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பங்குபற்றுவதற்காக ஷோன் மார்ஷ், ஜேம்ஸ் பட்டின்ஸன் மற்றும் ஸ்டீபன் ஒஹீவ் ஆகியோர் அவுஸ்திரேலிய அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டு-ள்ளனர்.

உபாதைக்குள்ளான உஸ்மான் கவாஜா மற்றும் ஓய்வு பெற்ற மிச்சல் ஜோன்ஸன் ஆகியோருக்கு பதிலாகவே இவர்கள் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி முதன்முறையாக பகலிரவு போட்டியாக இடம்பெறவுள்ளது.

## கால்பந்து வீரர் சுட்டுக் கொலை

ஹோண்டுராஸ் நாட்டில் சர்வதேச கால்பந்து வீரர் அர்னால்டு பெரால்டா மர்மநபர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஹோண்டுராஸ் தேசிய கால்பந்து அணியின் வீரரான அர்னால்டு(26), 11.12.2015 இரவு தனது சொந்த ஊரான லா செய்பாவில் உள்ள ஒரு வணிக வளாகத்திற்கு சென்ற அர்னால்டு, கார் பார்க்கிங் பகுதியில் மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.



இதுபற்றி தகவல் அறிந்த காவல்துறை சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணை நடத்தி கொலையாளிகளை தேடி வருகின்றனர். தனிப்பட்ட காரணங்களுக்காக கொலை நடந்திக்கலாம் என்றும் காவல்துறை சந்தேகிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இறந்தவர் இந்தியாவில் உயிருடன்"

## இறந்தவர் புலி – கியூ பிரிவு சந்தேகம்

இலங்கையில் சடலமாக மீட்கப்பட்டதாக கூறப்பட்ட சென்னை சாரதியொருவர் தமிழகத்தில் உயிருடன் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


இச் செய்தி தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - பூமிதுரை என்ற சென்னை மகிழுந்துச் சாரதியொருவர், அண்மையில் இடம்பெற்ற வெள்ளப் பெருக்கில் அடித்துச் செல்லப் பட்டதாகவும் உயிரிழந்த அவரது சடலம் திருகோணமலை கடற்பரப்பில் மீட்கப்பட்டதாகவும் இலங்கை இந்திய ஊடகங்களில் தகவல் வெளியிடப் பட்டிருந்தன.

மீட்கப்பட்ட சடலத்தின் அருகில் சென்னை சாரதிகள் சங்கத்தில் வழங்கப்படும் விசேட அடையாள அட்டை காணப்பட்டது.

எனினும், குறித்த நபர் தற்போது உயிருடன் 17



## வெளி மாவட்ட மீனவர்கள் கைது



வெளி மாவட்டத்திலிருந்து வருகை தந்து திருகோணமலை கடலில் மீன்பிடித்த 12 மீனவர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

இந்த மீனவர்கள் நேற்று (10) மாலை கைது செய்யப் பட்டதாக காவல்துறை குறிப்பிட்டுள்ளனர்.

திக்வெல்ல பகுதி -யிலிருந்து வருகை தந்ததாக கூறப்படும் இந்த மீனவர்களின் இரண்டு படகுகளுடன், அவர்கள் பயன் -படுத்திய சட்டவிரோத வலைகளும் காவல் -துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்த வெளி மாவட்ட மீனவர்களை திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் முன்நிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை துறைமுக காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பில் தொடரும் காணி அபகரிப்பு ??

சிறிலங்கா காவல் துறையின் உதவியுடன் மட்டக்களப்பு, ஆரையம் -பதி பிரதேசத்தில் உள்ள தர்மபுரம் கிராமத்தில் பெருமளவு காணிகள் சிங்களவர்களால் ஆக்கிர -மிக்கப்படுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்காவின் முன்னாள் அதிபர் ஜே.ஆர். ஜெயவர்தனவின் மகன் ரவி ஜெயவர்த்தன மற்றும் சிலராலேயே இந்தக் காணி அபகரிப்பு மேற்கொள்ளப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர் எனச் சர்வதேசத் தமிழ் ஊடகச் செய்தியொன்று தெரிவிக் கின்றது

தாம் நீண்டகாலமாக குடியிருந்த காணிகளை அபகரித்து வேலிகள் போடப்படுவதாகவும், தமது தென்னை மரங்கள் அழிக்கப்படுவதாகவும் உரிமையாளர்கள் தெரிவித்தனர். 17

## 6 ஆண்டுகளாகக் குற்றம் சாட்டப்படாமல் சிறையிருக்கும் தமிழ்க் கைதி

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு கடந்த 6 ஆண்டுகளாக தடுத்து வைக்கப் -பட்டுள்ள தமிழ் கைதியொருவர் ஆரம்பித்துள்ள உண்ணாவிரதம் இன்றும் தொடர்வதாக மெகசின் சிறைச்சாலை தகவல்கள் குறிப்பிடுகின்றன.

வழக்கு விசாரணையின் போது குற்றப்புலனாய்வுத் திணைக்கள-த்தினர் நீதிமன்றத்திற்கு சமூகமளிக்காத காரணத்தினால், கடந்த 6 ஆண்டுகளாக தொடர்ந்தும் தாம் சிறையில் வாடுவதாகவும், தனக்கு உரிய தீர்வு வழங்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தி இந்த கைதி உண்ணாவிரதத்தை ஆரம்பித்-துள்ளார்.

வழக்கு விசாரணைக்காக யாழ். சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டதை அடுத்து சில தினங்களுக்கு முன்னர் யாழ் சிறைச்சாலை கூரை மீதேறி அவர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார்.

இதனையடுத்து கடந்த புதன்கிழமை கொழும்பு மெகசின் சிறைச்சாலைக்கு மீண்டும் அழைத்துவரப்பட்ட நிலையில் அங்கும் தமது உண்ணா விரதத்தை இக் கைதி......... 17

## புதிய அரசியலுக்கான ஒத்திகை கிழக்கில்???

இந்த நாட்டில் ஒரு சிறந்த அரசியலை உருவாக்கவும் இந்த நாட்டில் உள்ள எல்லா மக்களும் இணைந்து வாழக் கூடிய ஒரு நடைமுறையை உருவாக்கிடவும் முடியுமா என்று நாம் தற்போது ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்-கின்றோம் என கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜ-சிங்கம் தெரிவித்தார்.



அமைச்சர் துரைராஜசிங்கம் தெரிவிப்பு

எமது நாட்டுக்கு சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து தவறான சிந்தனை கொண்டவ-ர்கள் இந்த நாட்டை வழி நடத்தியதன் காரணமாக இன்னும் நாம் முன்னேற முடியாதவர்களாக உள்ளோம்.

எமது முன்பள்ளிகளை வெறுமனே சிறு பிள்ளைகள் செல்கின்ற பள்ளிகளாகக் கற்பனை செய்கின்றவர்களாகவே நாம் இருக்கின்றோம்.

இந்நிலை மாற வேண்டும் என்பதற்காகத் தான் புதிய அத்தி-யாயம் இன்று புரட்டப்பட்டு இருக்கின்றது.

அந்தப் புதிய அத்தியாயத்திலே தமிழர்களும், தமிழ்பேசும் மக்களும், அவர்களைத் தலைமை தாங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய......... 17

## கூட்டமைப்பிற்கு வழங்கிய மற்றொரு வாக்குறுதியும் காற்றில் பறந்தது!!



யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப்பட்டியல் உறுப்பினரான அங்கஜன் இராமநாதனை சிறிலங்கா அதிபர் நியமித்துள்ளார்.

அதிபர் செயலகத்தில் வைத்து சிறிலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேன இதற்கான நியமனக் கடிதத்தை, நேற்று வழங்கினார்.

ஏற்கனவே, யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராக, பிரதி அமைச்சர் விஜயகலா..... 17




## நீதிபதிகளுக்கு இடமாற்றம்

இலங்கையின் நீதித்துறையின் வருடாந்த இடமாற்றங்களுக்கு அமைவாக யனவரி 1 முதல் திருகோணமலை மாவட்டத்தில் இருந்தும் நீதிபதிகளுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி கௌரவ ரி.ஜே. பிரபாகரன் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதியாக செல்ல திருகோணமலைக்கு கௌரவ ஹாபிஸ் அப்துல்லா அவர்கள் நீதிவான் நீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்புக்களை ஏற்கவுள்ளார்.

கௌரவ ஹாபிஸ் அப்துல்லா அவர்கள் ஏற்கனவே திருகோணமலையில் நீதிவான் நீதிமன்ற நீதிபதியாகவும், மாவட்ட நீதிமன்றின் பதில் நீதிபதியாகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை குடியியல் மேன்முறையீட்டு மேல்நீதிமன்ற நீதிபதி கௌரவ முகமட் மக்கி அவர்கள் கல்முனை குடியியல் மேன்முறையீட்டு மேல்நீதிமன்ற நீதிபதியாகச் செல்ல, அனுராதபுர குடியியல் மேன்முறையீட்டு மேல்நீதிமன்ற நீதிபதியான கௌரவ ஜெயவர்த்தன அவர்கள் திருகோணமலைக்கான குடியியல் மேன்முறையீட்டு மேல்நீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்புக்களை ஏற்கவுள்ளார்.

கௌரவ ஜெயவர்த்தன அவர்களும் ஏற்கனவே திருகோணமலையில் நீதிவான் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விடமாற்ங்கள் உட்பட 117 இடமாற்றங்களை இலங்கையின் நீதித்துறை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரபல கொலை வழக்கான ரக்பி வீரர் தாஜுதீன் கொலை வழக்கை விசாரித்துவரும் நீதிபதி கௌரவ நிஷாந்த பீரிசும் இடமாற்றம் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரமுரசு பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 12.12.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.